Koviloor Digital Library

ॐ

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILUR
A. No. 28606

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்

சாஸ்த்ர ரத்னம்
தேதியூர் ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரி
அவர்களால் எழுதப்பெற்ற தமிழுரையுடனும்

சென்னை ஹைகோர்ட் நீதிபதி
திவான் பகதூர்
ஜஸ்டிஸ் C. N. குப்புஸ்வாமி அய்யரவர்களின்
பாராட்டுரையுடனும்

கிரி ப்ரதர்ஸ்
திருவல்லிக்கேணி

All Rights Reserved.

Koviloor Digital Library

FIRST
EDITION
Mar. '46

Price: Rs. 2

Printed & Publ
by K. Kylasa
at GIRI PR
Triplicane :: M

Koviloor Digital Library

Koviloor Digital Library



பதிப்பாளர்:

K. கைலாஸம் அய்யர்

Koviloor Digital Library

பதிப்புரை

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கத்தின் இப்பதிப்பை மிக்க வணக்கத்துடன் திருச்செந்தூர் வேலவரும், கலியுகத்தின் கண்கண்ட தெய்வமுமான ஸ்ரீ முருகப் பெருமானின் திவ்ய பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறேன்.

கவிதா மேன்மையிலும், கற்பனை உயற்விலும், பக்தி ரஸத்திலும் மிக்க இந்த நூலுக்கு சாஸ்திர ரத்னம் தேதியூர் பிருஹ்மஸ்ரீ ஸுப்ரமண்ய சாஸ்த்ரியள் அவர்கள் தமிழுரை எழுதியிருக்கிறார்கள்.

பகவத்பாதாள் ஸ்ரீ ஆதிசங்கரர் இந்த நூலை அருளிய வரலாறும், அதன் விசேஷமும் விபரமாக இப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சுலோகமும், முதலில் தேவநாகரி லிபியிலும் பிறகு தமிழிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஒவ்வொரு சுலோகத்திற்கும், பதவுரையும், பொழிப்புரையும் தரப்பட்டிருக்கிறது. இதனால் யாவரும் எளிதில் புரிந்துகொள்வது சாத்தியமாகும்.

Koviloor Digital Library

ஆதி சங்கரரின் நோயைத் தீர்த்த இந்த ஸ்தோத்திரத்தை யார் பாராயணம் செய்தாலும் அவர்களது தீராத நோய்களும் தீருமென்று பகவத்பாதாள் அருளினார்கள். தேக நோய், மன நோய் மலிந்த இந்த உலகத்திற்கு இந்நூல் சமய சஞ்சீவியாக விளங்கவேண்டுமென்பதே எனது ஆசை.

முதலில், நூலின் அழகைப்பற்றிக் கூறவேவேண்டியதில்லை. தமிழுரை எழுதியிருக்கும் சாஸ்திர ரத்னமோ ஞானக் களஞ்சியம். என் வேண்டுகோளின்படி பல வேலைகளுக்கிடையில், சாஸ்திர ரத்னம் இந்த மகா காவ்யத்தை உரையெழுதிக் கொடுத்ததற்காக நன்றி செலுத்துகிறேன்.

இந்நூலுக்கு அழகிய பாராட்டுரை எழுதிக் கொடுத்த சென்னை நீதிபதி திவான் பகதூர் ஸி. என். குப்புஸ்வாமி ஐயர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

K. கைலாஸமய்யர்.

Koviloor Digital Library

ஸ்ரீரஸ்து

பாராட்டுரை

பகவத்பாதர்கள் தாமும் உலகமக்களும் கடைத்தேறவேண்டு மென்னும் உயர்ந்த நோக்கத்தோடு அவர்கள் திவ்ய வாக்கிலிருந்து பெருகிய பரம கருணாமிர்தமான ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க மெங்கே? அதற்கு அழகான தமிழுரை எழுதி உபகரித்த ஒரு சாஸ்த்ர ரத்னமெங்கே? நான் எங்கே? முன்கூறிய இரு-வர்தம் பெருமையும் எனது சிறுமையும் மிகப் பெரியவை. இருந் தாலும், சாஸ்த்ர ரத்னம் தேதியூர் ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரிகள் அவர்களின் ஆணையை மறுத்தற்கஞ்சியும், ஏறக் குறைய முப்பது ஆண்டுகளாக அடியேன் இந்தப் பரமோத் க்ருஷ்டமான அநுக்ரஹ க்ரந்தத்தைப் பாராயணம் செய்துவருவ தாலும், ஏதோ ஒருவகையாகத் தேறுதல் செய்துகொண்டு, கலியுக வரதனாகிய முருகப்பெருமானைப்பற்றி எழுத எனக்கும் கிடைத்த ஒரு பெரிய ஸம்பவத்தை வீணாக்காமல் சிலவரிகளை எழுதத் துணிந்தேன்.

ஸ்ரீ சாஸ்த்ரிகளவர்களையும் அவர் பெருமையையும் அறியாத வர்கள் நம் நாட்டில் மிகச் சிலரென்றே கூறவேண்டும். ஆத்யாத் மிகாமிருதப்ரவாஹம் நாடெங்கும் பெருக்கெடுத் தோடும்படி செய்து அரிய பெரிய தொண்டாற்றுவதே தம் வாழ்க்கையாகக் கொண்ட உத்தமோத்தமர்கள் நம் சாஸ்த்ரிகளவர்கள். அவர்கள் அறியாத அறிவில்லை. கல்விச் சுரங்கம்; அசுவதாடியான வாக்கு; வேதசாஸ்த்ரங்களிலே அபாரமான யோக்யதை; நம் பரமாசார்யர் களிடத்திலே அசஞ்சலமானபக்தி; சாஸ்த்ர திருஷ்டியைத் தவிர வேறு த்ருஷ்டியில்லாத மஹநீயர்கள். எந்த விஷயத்தை ப்ரவச னஞ் செய்தாலும் எள்ளளவும் க்லேசமில்லாமல் ஆபாலவ்ருத்தர்

Koviloor Digital Library

களுக்கும் விளங்கும்படி ஊக்கத்தோடும், கம்பீரமான கண்டத்தோடும், உருக்கத்தோடும், சுருக்கமாகவும் விளக்கமாகவும், உபந்யஸிக்கின்ற அஸிதர ஸாதாரணமான ஸ்வபாவத்தை நான் பலமுறை நேரில் அநுபவித்ததுபோலவே, கேட்ட பல அன்பர்களும் அநுபவித்திருப்பார்களென நம்புகிறேன்.

சங்கமிருந்த தமிழை யெல்லாம் உண்டு திகழ்ந்த சிங்கமாகிய நக்கீரர், திருமுருகாற்றுப்படையில்,

"மாயிருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே—ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே ; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ;—ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ;—
[ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே"

என அலைவாய் முருகனைத் துதிக்கின்றார். அவரே 263-ஆம் அடியில் 'அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை' எனவும் கூறுவர். அந்தணர் வெறுக்கை என்பதற்கு "அந்தணருடைய செல்வமாயிருப்பாய்" என ஆசிரியர் நச்சினார்க்கினியரும் பொருளெழுதினர்.

Koviloor Digital Library

"இருபிறப் பிருபெயர் ஈர நெஞ்சத்
தொருபெயர் அந்தணர் அறனமர்ந் தோயே"

எனப் பதினான்காம் பரிபாடல் கூறும். அவ்வடிகட்கு "இரண்டு பிறப்பினையும் அப்பிறப்பால் வந்த இரண்டு நாமத்தினையும், ஈரநெஞ்சத்தினையும், ஒப்பில்லாத புகழினையுமுடைய அந்தணரது வைதிக அறத்தைப் பொருந்தினோய்" எனப் பரிமேலழகர் பொருள் கண்டார். நம் பரமாசார்யப் பெருந்தகையும் இந்நூலின் 3-வது ச்லோகத்தில் "மஹீ தேவ தேவம்" என அருளிச் செய்திருக்கின்றது. திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற பழந்தமிழ் நூல்கள் முருகப்பிரானைத் தமிழ்க் கடவுள் எனக் குறிக்கவில்லை. அந்தணர் செல்வமாகவும், அவர் தம் அறத்தைப் பொருந்தினவராகவுமே கூறின. நம் ஆசார்யர்கள் அவர்களும் அங்ஙனந்தான் அருளிச் செய்திருக்கிறார்கள். என் தமிழ் நண்பர் சிலர் முருகனைத் தமிழ்க் கடவுளென உரிமை கொண்டாடுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாமைக்குப் பெரிதும் வருந்துகின்றேன். அன்பின் பெருக்கத்தால் அவர் அங்ஙனம் கூறினர் போலும்.

நம் ஆசார்யர்கள் கலியுகவரதனாகிய முருகப்பெருமானை 33 ச்லோகங்களாலே பரமபாவனமானதும், அதிரமணீயமானதுமான இந்தப்புஜங்க க்ரந்தத்தை நமக்கு அநுக்ரஹஞ் செய்தார்கள். அந்த க்ரந்தத்திற்கு ஸ்ரீ சாஸ்த்ரிகளவர்கள் பதவுரையும் விரிவுரையுமாக அதிலளிதமான தமிழுரை யொன்றை எழுதி நுட்பமான பல செய்திகளை விளக்கியிருக்கின்றார்கள்.

"ஸ்வபாவ ஏவைஷ பரோபகாரிணாம்" என்று கூறிய மஹா கவியின் வாக்கைத்தான் நினைந்து நினைந்து நான் ஸந்தோஷத்தை அடைகின்றேன். நாமென்ன அவருக்கு ப்ரத்யுபகாரம் செய்யப் போகின்றோம்? ஒருவர் விருந்திட்டால் நன்றாய்ச் சுவைத்துச்

Koviloor Digital Library

சுவைத்து உண்டு தேக்கெறிதல் யார்க்கும் வழக்கந்தான். அதைப் போல, சாஸ்த்ரிவர்யர்கள் இட்ட இந்தப் புஜங்க விருந்தைப் படித்துச் சுவைத்துச் சுவைத்து உளநோய், உடல்நோய் முதலியன நீங்கி ஸ்ரீ ஷண்முகப்பெருமானின் அவ்யாஜ கருணைக்குப் பாத்திரர்களாகிப் பரம மங்களத்தை எல்லோரும் அடையவேண்டுமென்பதே ஸாஞ்சலிபந்தம் நான் செய்துகொள்ளும் ப்ரார்த்தனை.

"ராம நிலயம்"		சி. என். குப்புஸாமி அய்யர்,
ஸ்ரீபுரம், சென்னை	}	(திவான் பஹதூர்)
16—3—46		சென்னை ஹைகோர்ட் நீதிபதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள்

Koviloor Digital Library

முகவுரை

தர்ம க்ஷேத்ரமான நமது பாரதமண்டலத்தில் "தர்மத்திற்கு லோபம் வரும் ஸந்தர்ப்பங்களில் பகவான் தானே அவதாரம் செய்து தர்மத்தை ரக்ஷிக்கின்ருர்" என்பதற்கு

यदा यदाहि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

—பகவத்கீதை—அ4—சு7.

என்ற பகவத் வாக்யமே ப்ரமாணமாகும். இதை யநுஸரித்தே நமது அத்வைத மத ஸ்தாபகாசார்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்கள் அவர்கள் நமது தேசத்தில் தோன்றி ப்ரஹ்மஸூத்ரம் முதலான கணக்கற்ற நூல்களுக்குப் பாஷ்யங்களையும் மற்றும் ஸகல தேவதைகளைத் குறித்தும் ஸ்தோத்ரங்களையும் இயற்றி, பண்டித பாமர ஜனங்களை அவரவர்கள் அறிவிற்குத் தக்கபடியான உபதேசங்கள் மூலம், ஸதாசார, ஸத்தர்மாநுஷ்டான மார்க்கங்களில் ஊக்கமுள்ளவர்களாகச் செய்து, ஸம்ஸார பந்தத்தினின்றும் கரையேற்றி வைப்பதற்கு, விலைமதிப்பற்ற நூல்களை நமக்குக் கருணை கூர்ந்து அளித்துள்ளார்கள்போலும். இவ்விதமான க்ரந்தங்களைப் பயன்படுத்திக் கொண்டு, க்ருதார்த்தர்களாவது நமது கடமையும் பொறுப்புமாகும்.

ப்ரக்ருதத்தில் எழுதப்படும் பதவுரை, விளக்கம், நமது பரமாசார்யர்கள் எழுதியுள்ள அநேக ஸ்தோத்ரங்களில் ஒன்ருன "ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்" என்ப

Koviloor Digital Library

தாகும். இது, ஸ்ரீ வல்லீ-தேவஸேனா ஸமேத ஸுப்ரஹ்மண்யஸ்வாமியின் பரமோத்கர்ஷத்தையும், ஷண்முகனிடம் பக்தி செய்பவர்களுக்கு ஏற்படும் ஸௌபாக்யங்களையும், மற்றும் முருகனின் லீலா விநோதங்களையும் வெளிப்படுத்தும் அரியதொரு நூலாகும். இந்த 'ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்'' என்ற ஸ்தோத்ரத்தில் பூஜ்யமான தேவதை, திருச்செந்தூர் என்ற க்ஷேத்ரத்தில் ஸாந்நித்யமாயுள்ள, ஷண்முகன், முருகன் என்றும், "கலியுகவரதன்" என்றும் வழங்கப்பெறும் பெருமானே யாவர்.

ஸ்ரீமத் ஆசார்யாள் செய்துள்ள புஜங்க வ்ருத்தத்தை ப்ரதி தினம் அர்த்த ஞானத்துடன் பாராயணம் செய்துவரும் பக்தர்களுக்கு விசேஷ ஸௌபாக்யம் ஸித்திப்பதால், பக்த ஜனங்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இந்த வ்ருத்தத்திற்குப் பதவாரியான அர்த்தமும் வ்யாக்யானமும் எழுதப்பட்டிருக்கிறது. ஆஸ்திகர்கள் அனைவருக்கும் இப்புஸ்தகமானது உபயோகமாயும், ச்ரேயஸ்கரமாகவும் இருக்கும் என்றும் நம்புகிறேன்.



திருவல்லிக்கேணி,
18-3-1946

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யம்

திருச்செந்தூர்

योऽसौ शंकरमागमार्थं अमलैःपुष्पैस्सदापूजयन्
आत्मज्ञानमखण्डदीपं अमुकश्रेयप्रदं वैदिकम् ।
संप्राप्येश कटाक्षपूरिततनुः सांबात्परं दैवतम्
नास्त्यैवेति सुवेद षण्मुखमहं वन्दे जयन्तीश्वरम् ॥

Koviloor Digital Library

௧

॥ ओं ॥

यद्वाग्सुधां सुरेन्द्राणां दुर्लभां भुविविस्तृताम् ।
पीत्वा अमृतानरामर्त्याः तान्गुरून् प्रणमाम्यहम् ॥

ईशं व्यासं श्रीमतश्शङ्करार्यान्
श्रीशेशाख्यान् सद्गुरून्तांश्च वन्दे ।
श्रुत्या सूत्रैः भाष्यतस्तत्प्रबोधैः
एनामास्मानन्वगृह्णन्यथावत् ॥

संसाराख्य भुजङ्गेन दष्टानां प्राणिनां भुवि
सुब्रह्मण्य भुजङ्गाख्यः मन्त्रोऽयं मोक्षदायकः ।
बालोऽयं सागरेऽज्ञानात् क्रीडितुं हि यथेच्छति
तद्वच्छाङ्करवाक्याब्धौ प्रविशामि विमूढधीः ॥

साहसं गुरवोस्माकं सोढ्वंवादीनान्कृपाळवः ।
अन्वगृह्णन्तु सद्विद्यां दत्वा मोक्षप्रदायिनी ॥

Koviloor Digital Library



ஸ்ரீ மஹாகணபதி

Koviloor Digital Library

॥ ॐ ॥

ஸுப்ரமண்ய புஜங்கம்

1. விக்னேச்வர ஆராதனம்.

सदा बालरूपापि विघ्नाद्रिहन्त्री
महादन्तिवक्त्रापि पञ्चास्यमान्या ।
विधीन्द्रादिमृग्या गणेशाभिधा मे
विधत्तां श्रियं कापि कल्याणमूर्तिः ॥ १ ॥

ஸதா பாலரூபாபி விக்னாத்ரிஹந்த்ரீ
மஹாதந்திவக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா ।
விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே
விதத்தாம் ச்ரியம்காபி கல்யாணமூர்த்தி: ॥ 1 ॥

பதவுரை :—

सदा - ஸதா = எப்பொழுதும் बालरूपापि - பால ரூபாபி = குழந்தையாகவே இருந்தாலும் विघ्नाद्रिहन्त्री - விக்னாத்ரிஹந்த்ரீ = விக்னங்களாகிற மலையை, பொடியாகச் செய்யும் சக்தி உள்ளவராயும் महादन्तिवक्त्रापि - மஹாதந்திவக்த்ராபி = யானையின் முகத்துடன் கூடி

Koviloor Digital Library

னவராலும் पञ्चास्यमान्या - பஞ்சாஸ்யமான்யா = ஸிம்மங்களாலும் பூஜிக்கத் தகுந்தவராயும் (ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்ற 5 முகங்களோடு கூடின பரமேச்வரனாலேயும் பஹுமானிக்கத் தகுந்தவராயும்) विधीन्द्रादिमृग्या-விதீந்த்ராதிம்ருக்யா = ப்ரம்மா, இந்த்ரன் முதலானதேவர்களாலும் தங்களுடையமனோரதத்தை பூர்த்தி செய்துகொள்ளும்பொருட்டு தேடத்தகுந்தவராயும் गणेशाभिधा - கணேசாபிதா = கணேசன் என்ற பெயருள்ளவராயும் (இருக்கும்) कापि - காபி = அளவற்ற மஹிமையோடு கூடின कल्याणमूर्तिः - கல்யாணமூர்த்தி: = எப்பொழுதும் மங்களகரமானசரீரத்துடன் கூடின வஸ்துவான பரம புருஷன் मे - மே = எனக்கு श्रियं - ச்ரியம் = லக்ஷ்மியை (ஐச்வர்யத்தை) विधत्तां - விதத்தாம் = கொடுக்கட்டும்.

தாத்பர்யம் :—

ஆதிசங்கர பகவத்பாதாளவர்கள், திக்விஜயம் செய்துகொண்டு லோகஸஞ்சாரம் செய்யும் காலத்தில் அவர்களுடைய வித்யை, தபஸ், யோக மஹிமை, இவைகளைக்கண்டு பொறாமையடைந்த அபிநவகுப்தர் என்ற ஒரு வித்வான் ஆபிசாரப்ரயோகத்தால் ஆசார்யாளை ஹிம்ஸை செய்யவேண்டுமென்று எண்ணி அவ்விதம் கஷ்டத்திற்கு (ஆபிசாரப்ரயோகத்திற்கு) உள்ளாக்கினார். பூலோகத்தில் மனுஷ்யரூபமாக அவதாரம் செய்திருப்பதால் மனுஷ்யர்களுடைய ஸ்வபாவத்தைத் தானும் நடித்துக்காட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன், பரமாசார்யாளும் அபினவகுப்தனுடைய ஆபிசாரத்திற்கு தானும் கட்டுப்பட்டவனாக இருந்து துக்கத்தை அனுபவிப்பதுபோல் நடித்துவந்தார்கள்.

Koviloor Digital Library

அந்த அபிநவகுப்தன் என்றவன் இரண்டு தடவைகள் ஆசார்யாளுக்கு ஆபிசாரம் செய்தான். முதல் தடவை செய்த ஆபிசாரத்தால் ஆசார்யாளுக்கு க்ஷயரோக பாதை ஏற்பட்டது. அதனால் ரொம்பவும் கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு 'ஏதோ ப்ராரப்த கர்மா' என்று எண்ணி மனதை ஸமாதானம் செய்து கொண்டே வந்தார்.

ஒருஸமயத்தில் கோகர்ண க்ஷேத்ரத்திலிருக்கும் பொழுது அந்த உபாதியை ஸஹிக்கமுடியாமல் ரொம்பவும் மனோவருத்தத்தை அடைந்தார்கள். அங்கு ஓர் இரவு தூங்கும்பொழுது கோகர்ணேச்வரர் என்ற பரமேச்வரன் வ்ருஷபாரூடராக ஸ்வப்னத்தில் தர்சனம் கொடுத்து, "ஸ்ரீஜயந்திபுரம் என்ற ஸ்தலத்தில் சூரபத்மாவை வதித்துவிட்டு ஜயத்துடன் என் இரண்டாவது குமாரனான ஷண்முகன் விளங்கிவருகிறான். அந்த க்ஷேத்ரம் சென்று, ஷண்முகனை தர்சனம் செய்தால் இந்த ரோகமானது அடியோடு நிவர்த்தியாகி விடும்" என்று சொல்லிவிட்டு, விபூதி ப்ரஸாதத்தை ஆசார்யாளுடைய கையில் கொடுத்தார். அதை வாங்கி, தன் சிரஸ், நெற்றி முதலான சரீர ப்ரதேசத்தில் தாரணம் செய்துகொண்டு விழித்துக்கொண்டார்.

உடன் காலையில் யோகமஹிமையால் ஆகாச மார்க்கமாக ஸ்ரீ ஜயந்திபுரம் (தற்காலம் திருச்செந்தூர் என்று வழங்கப்படும் ஸ்தலம்) வந்து சேர்ந்து, ஷண்முகனைத் தான் தர்சனம் செய்யும் காலத்தில், ஷண்முகனுடைய பாதாரவிந்தத்தில் ஸர்ப்பராஜன் ஆதிசேஷபகவான் பூஜை செய்துவருவதையும் ப்ரத்யக்ஷமாக தர்சனம் செய்த காரணத்தால் ஸர்ப்பம் என்ற அர்த்தத்தை ப்ரகாசிக்கக்கூடிய भुजङ्ग (புஜங்கம்) என்ற பதத்தை தன்னுடைய ஸ்துதியில் முத்ரையாக வைத்து புஜங்க வ்ருத்தத்தாலேயே ஷண்முகனை பரமாசார்யாள் ஸ்தோத்ரம் செய்கிறார்கள்.

Koviloor Digital Library

இந்த ஸ்துதியானது, தீராத வியாதிகளையும் ஒரே ஆவர்த்தி பாராயணம் செய்த மாத்ரத்தில் போக்கடிக்கக் கூடியது. பூத, ப்ரேத, பிசாச, பாதைகள் இந்த ஸ்தோத்ரத்தை பாராயணம் செய்கிறவர்களின் அருகிலேயே அண்டாது. இந்த ஸ்துதியினால் குஷ்டங்கள், குன்மரோகம், க்ஷயரோகம், வலிப்பு, இழுப்பு, முதலான தொத்து வ்யாதிகளெல்லாம் பறந்துபோய் விடும். பன்னீர்மரத்தின் இலையில் பஸ்மாவை (விபூதியை) வைத்துக்கொண்டு ஷண்முகனை த்யானம் செய்துகொண்டு, இந்த புஜங்கத்தை ஒரு தடவை பாராயணம் செய்து, அந்த பஸ்மாவை தாரணம் செய்து கொள்வதால் ஸகலவிதமான பீடைகளும் அடியோடு தொலைந்துவிடும். பாப பஹுளமான இக்கலியில் ஸர்வ ஜனங்களுக்கும் ஆரோக்யம் வ்ருத்தியாக வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த புஜங்க ஸ்தோத்ரத்திற்கு எளிய தமிழ் நடையில் பதவாரியாகவும், அதனுடைய உட்கருத்து என்ன என்பதும் எழுதப்படுகிறது.

அதிலும், श्रेयांसि बहुविघ्नानि (ச்ரேயாம்ஸி பஹுவிக்னானி) என்ற ந்யாயத்தை அநுஸரித்து, பரமாசார்யாளே, தான் செய்யும புஜங்கவிருத்த ஸ்தோத்ரமானது, 'விக்னத்தால் தடைபடாமல் பூர்த்தியடைந்து பிறகும் ஸர்வ ஜனங்களிடம் ப்ரஸித்தியை அடையும் காரணத்தால் எல்லா ஜனங்களும் பரம ஸுகிகளாக ஆகவேண்டும்; ஆரோகதிடகாத்ராளாகவும் நீடித்து வாழவேண்டும்; அதற்கு யாதொருவிதமான விக்னமும் வரக்கூடாது என்று எண்ணி, விக்னத்தை நிவர்த்தி செய்துவைக்கும் சக்தியுள்ள விநாயகனை முதல் ச்லோகத்தால் ப்ரார்த்தித்துக் கொள்கிறார்கள். அதாவது :—

விநாயகருடைய சரித்ரமோ, கேழ்க்கிறவர்களுக்கு அத்யாச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியதாகவே இருந்து வருகின்றது. கணபதயோ என்றைக்கும்

Koviloor Digital Library

சிறு குழந்தையாகவே இருந்து வருகிறார் என்பது ஸகல புராணங்களிலும் ப்ரஸித்தமானது. அவர் செய்யும் கார்யமோ, குழந்தைகள் செய்யும் கார்யங்க ளல்ல. மலை போல் மனிதனுக்கு வரும் விக்னங்களை தன்னை ஸ்மரித்த மாத்ரத்தில், பொடியாக்கிவிடுகிறார். மலையை உடைப்பது சிறு குழந்தையின் கார்ய மாகுமா? சரீரத்தால் சிறுவன் என்று நினைத்து மோசம் போகக்கூடாது. எல்லாருக்கும் மேலான தெய்வம் என்றே இந்த விநாயகரை நினைக்கவேண் டும். இந்த புஜங்க விருத்தத்தால், எந்த ஸுப்ரமண் யக் கடவுள் ஸ்துதிக்கப்படுகிறாரோ, அந்த கடவுள் வல்லிதேவியை பரிணயம் செய்துகொண்ட காலத்தி லும் இந்த விநாயகர் மூலமாகத்தான் அவருக்கு கார்ய மானது ஸித்தியடைய வேண்டியதாயிருந்தது. இது வும் ஸ்காந்த மஹா புராணத்தில் ப்ரஸித்தமானது. மலையைப்போலுள்ள விக்னம் என்று சொன்னதால், மலையாவது கண்ணுக்குப் புலப்படும்; உடைக்கலாம்; மனிதனுக்கு ஒரு ஸத்கார்யத்தில் ஏற்படும் விக்னங் களோ பூர்வ ஜன்மாக்களில் செய்த பாபங்களேதான் ஆகும். அதுவோ கண்ணுக்குத் தென்படாது. அதைக்கூடக் கண்டுபிடித்து நாசம் செய்து, தன் பக் தனை ரக்ஷிக்கும் சக்தி உள்ளவரே மஹா கணபதி என்று சொல்லப்படுவார்.

கணபதியை பூஜிக்க வேண்டுமென்ற அவச்யமா னது லோகத்திலுள்ள கார்யங்கள் விக்னமில்லாமல் நடைபெற வேண்டும் என்பதற்காக மாத்ரமில்லை. வேதங்களில் சொல்லப்படுகிற தேவதைகளைப் பூஜிக்க வேண்டுமானாலும், மற்ற தேவதைகளுடைய பூஜை களில் விக்னம் வராமல் இருக்கவேண்டுமானால், இந்த கணபதியை முதலில் பூஜித்துத்தான் ஆகவேண்டும். ஆகையால், எல்லா தேவதைகளுக்கும் மேலான தெய்வமானதால், ஸுப்ரமண்யமூர்த்தியை ஸ்துதிப் பதற்கும் முன்பாக மஹா கணபதியை பரமாசார்யாள்

Koviloor Digital Library

நிர்விக்னமாக தன் கார்யம் நிறைவேற வேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொள்கிறார்கள்.

மஹா கணபதியின் முகமோ யானையின் முகத்தைப் போலாகும். யானைகளோ ஸிம்மங்களைக் கண்டால் நடுங்கி ஓடும். இந்த யானையையோ ஸிம்மங்களெல்லாம் பூஜிக்கின்றன. இதுவும் ஒரு ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியது. இதனால், ஸிம்மங்களையும் தன் வசப்படுத்திக்கொள்ள, மஹா கணபதியினுடைய மஹா மந்த்ரமானது ஓர் முக்யமான உபாயமாகும் என்று தெரிகிறது.

ச்யாமளன் என்ற ஒரு வேடனானவன் அரண்யத்தில் வேட்டையாடிக் கொண்டிருக்கும் ஸமயத்தில் ஒரு ஸிம்மத்தினுடைய த்ருஷ்டிக்கு அவன் யோக்யனாகிவிட்டான். தன்னைக் குறிப்பாக வைத்து ஸிம்மம் தன்னிடம் பாய்வதற்கு ஆரம்பிக்கும் முன்பே அங்கு ஸமீபத்திலுள்ள ஸுமேதா: என்ற மஹார்ஷியினுடைய ஆச்ரமத்திற்குள் நுழைந்துவிட்டான். ஸிம்மத்திற்குப் பயந்துகொண்டு ஓடி வந்த இந்த வேடனையும் அந்த ரிஷியானவர் அபய ப்ரதானம் செய்து, தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டு ரக்ஷித்தார். ஸிம்மமும் ஆச்ரமத்தின் வாசலில் இருந்துகொண்டு, இந்த வேடனுடைய ஆகமனத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. மஹர்ஷியும் மாத்யான்ஹிக காலத்தில் ஸ்னானம் செய்வதற்காக ஆச்ரமத்தை விட்டு வெளியில் வந்தார். இந்த வேடனும் மஹர்ஷியுடன் தொடர்ந்துவந்தான். ஸிம்மமோ, மஹாரிஷியைப் பார்த்தவுடன் பஹுவேகமாக ஓடிவிட்டது. வேடனுக்கு அது மிகுந்த ஆச்சர்யத்தைக் கொடுத்தது. உடன் ரிஷியைப்பார்த்து "என்னைவிரட்டி வந்த ஸிம்மமானது தங்களைக் கண்டு மிரளுகிறதே! அதன் காரணம் என்ன?" என்று கேட்க, அந்த வேடனுக்கு 'காணுபத்யம் என்ற மந்த்ரத்தின் மஹிமை' என்று சொன்னார். வேடனும் அந்த

Koviloor Digital Library

மந்த்ரத்தை தனக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று மஹர்ஷியிடம் தான் யாசிக்க, மஹர்ஷியானவர் அந்த மந்த்ரத்தை உபதேசித்து, நிர்ப்பயனாகச் செய்தார். பிறகு அந்த மந்த்ரத்தின் மஹிமையால் இவனை விரட்டிவந்த ஸிம்மமும் இவனைக் கண்டவுடன் மிரள ஆரம்பித்தது.

ஆகையால் இந்த கணபதியானவர் யானை முகத்தோடு கூடினவரானாலும், மந்த்ரமூர்த்தியானதால் ஸிம்மத்தினாலேயும் பூஜிக்கத் தகுந்த மஹிமையுள்ளவர். இந்த விஷயமானது கணபதி புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தவிரவும், आस्य (ஆஸ்யம்) என்றால் முகத்திற்குப் பெயர் உண்டு. பஞ்சாஸ்யம் என்றால் 5 முகத்தோடு கூடின பரமேச்வரன் என்று அர்த்தமாகிறது. பரமேச்வரனாலேயும் பூஜிக்கத்தகுந்தவர் என்ற பொருளை பஞ்சாஸ்யமான என்ற பதமானது ப்ரகாசப்படுத்துகின்றது. பரமேச்வரனும் த்ரிபுராஸுரனுடன் யுத்தம் செய்யும் காலத்தில், அனேக அஸ்த்ரங்களை ப்ரயோகம் செய்தும், த்ரிபுராஸுரனை ஸம்ஹாரம் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டார். அதற்குக் காரணமோ, த்ரிபுராஸுரன் எந்த அஸ்த்ரமானாலும் தன்னுடைய சரீரத்தை பாதிக்காமல் தடைபடுத்தக்கூடிய விக்ன யந்த்ரத்தை ஸ்தாபனம் செய்ததேதான் காரணமாகும். விக்ன யந்த்ரத்தால் ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டு, அதற்குள் தான் வாஸம் செய்ததால் பரமேச்வரனால் ப்ரயோகம் செய்யப்படும் ஸகல அஸ்த்ரங்களும் கோட்டைக்கு வெளியிலேயே, பயனில்லாமல் வீணாகப்போனதேயன்னியில், த்ரிபுராஸுரனை ஸம்பந்தித்து ஹிம்ஸையைச் செய்யவில்லை. இந்த விக்னயந்த்ரத்தால் கட்டப்பட்ட கோட்டையை பேதிக்க பரமேச்வரனுக்கும் உபாயம் தெரியாமல், நாரதர் மூலமாக மஹாகணபதியை உபாஸிக்கும்படி சொல்லப்பட்டு, கோட்டைக்கு வெளியில் ப்ரணவ

Koviloor Digital Library

ஸ்வரூபியான மஹா கணபதியை ஸ்தாபனம் செய்து, பரமேச்வரனும் மஹா கணபதியை பூஜித்ததாக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. பிறகு தான் மஹா கணபதி பரமேச்வரனுக்கு ஸஹாயம் செய்ததால், விக்னயந்த்ரத்தை பேதித்து பரமேச்வரனும் த்ரிபுராஸுரனை ஸம்ஹாரம் செய்யமுடிந்தது. அதிலிருந்துதான், பரமசிவனை தர்சனம் செய்பவனும் முன்பாக மஹா கணபதியை தர்சனம் செய்யும் ஸம்ப்ரதாயமும் ஏற்பட்டது.

தவிரவும், சிவ பஞ்சாக்ஷரீ என்ற மஹாமந்த்ரத்தை ஜபம் செய்கிறவர்கள் காணுபத்ய மந்த்ரத்தை ஜபம் செய்தபின்புதான் ஜபம் செய்யவேண்டும் என்ற ஆசாரமும் வெளியாகிறது.

ப்ரம்மா, இந்த்ரன் முதலான தேவர்களும் தாங்கள் எந்தக் கார்யத்தை ஆரம்பித்தாலும், முன்பு மஹா கணபதியை ஸ்தோத்ர பூஜைகளால் ஸந்தோஷிக்கச் செய்து, ப்ரஸாதத்தைப் பெற்றுக்கொண்டபின்புதான், கார்யத்தை ஆரம்பிப்பார்கள். விக்னங்களுடைய கூட்டங்களுக்கு நியந்தாவானதினுலேயே, கணேசன் என்று அந்த பகவானுக்குத் திருநாமம் ஏற்பட்டது. என்றைக்கும் நித்யகல்யாணமூர்த்தியாகுவார். கணேசனை உபாஸிக்கிறவர்களுக்கு எப்பொழுதும் கல்யாணம்-மங்களம்தான். "இவ்வித மஹிமையுள்ள மஹா கணபதியானவர் எப்பொழுதும் எனக்கு மங்களத்தையே செய்துகொண்டிருக்கவேண்டும்—லக்ஷ்மீ கடாக்ஷம் பெருகும்படி செய்யவேண்டும்; நான் ஆரம்பிக்கும் இந்த புஜங்க ஸ்தோத்ரமானது, விக்னமன்னியில் முடிவுபெற்று, சந்த்ர ஸூர்யன் உள்ளவரையிலும் லோகத்தில் ப்ரகாசத்தை அடையவேண்டும்" என்று பரமாசார்யாள் மஹா கணபதியை மேற்சொன்ன ச்லோகத்தால் ப்ரார்த்திக்கின்றார்கள்.

Koviloor Digital Library

2. ஸ்ரீ சங்கரரின் விநயபாவம் ஸுப்ரமண்யோபாஸனம் மஹாபாண்டித்யத்தை அடைய ஹேது.

न जानामि शब्दं न जानामि चार्थं
न जानामि पद्यं न जानामि गद्यम् ।
चिदेका षडास्या हृदि द्योतते मे
मुखान्निस्सरन्ते गिरश्चापि चित्रम् ॥ २ ॥

ந ஜாநாமி சப்தம் ந ஜாநாமி சார்த்தம்
ந ஜாநாமி பத்யம் ந ஜாநாமி கத்யம் ।
சிதேகா ஷடாஸ்யா ஹ்ருதித்யோததே மே
முகாந்நிஸ்ஸரந்தே கிரச்சாபி சித்ரம் ॥ 2 ॥

பதவுரை :—

शब्दं - சப்தம் = சப்தத்தை न जानामि - ந ஜாநாமி = அறிந்தவனல்ல; अर्थं च - அர்த்தம் ச = பொருளையும் न जानामि – ந ஜாநாமி = அறிந்தவனல்ல; पद्यं - பத்யம் = நான்குவிதமான பதங்களோடு கூடின ச்லோகத்தையும் न जानामि - ந ஜாநாமி = அறிந்தவனல்ல; गद्यं - கத்யம் = சூர்ணிகைகளையும் न जानामि - ந ஜாநாமி = அறிந்தவனல்ல; मे - மே = என்னுடைய हृदि - ஹ்ருதி = மனதில் एका - ஏகா = ஒரு चित् - சித் = ஒளியானது षडास्या (सति) - ஷடாஸ்யா (ஸதி) = ஆறுமுகத்தோடு கூடினதாய்க்கொண்டு द्योतते - த்யோததே = ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறது; अतः - அத: = அக்காரணத்தால் मुखात् -

Koviloor Digital Library

முகாத் = (என்னுடைய) முகத்தினின்றும் चित्र - சித்ரம் = ஆச்சர்யமான गिरश्चापि - கிரச்சாபி = வாக் விலாஸங்களும், निस्सरन्ते - நிஸ்ஸரந்தே = வெளியில் வந்து ப்ரகாசிக்கின்றன.

தாத்பர்யம் :—

ஸ்ரீமதாசார்யாள் ஸுப்ரமண்யக் கடவுளுக்கு எதிரில் தன்னுடைய விநயபாவத்தை ப்ரகாசப்படுத்திக்கொள்கிறார் :—

"ஹே ஸ்வாமிந்! உம்மை ஸ்தோத்ரம் செய்ய நான் உமக்குமுன் வந்து நிற்கிறேன். அது பெரிய ஸாஹஸமாகும். அதை நீர் பொறுத்துக்கொள்ள வேண்டும். எந்தப் பொருளை, எந்த சப்தத்தால் வ்யவஹரிக்கவேண்டுமென்ற ஈச்வரனுடைய ஸங்கேதத்தை நான் அறிந்தவனேயல்ல; எந்தப் பதத்தால் எந்தப் பொருளை வ்யவஹரிக்கவேண்டுமென்று ஈச்வரன் நியமனம் செய்திருக்கிறார். संज्ञा, संज्ञि संबन्द्ध ज्ञानं ईश्वरसंकेत शक्तिः। (ஸம்க்ஞா, ஸம்க்ஞிஸம்பத்த ஞாநம் ஈச்வரஸம்கேத சக்தி:।) என்ற ந்யாயமர்யாதையே எனக்குத் தெரியாது. ஒரு பதமும், ஒரு பொருளும் தெரியாமலிருக்கும் எனக்கு, "ஒவ்வொரு பாதங்களுக்கும் இவ்வளவு அக்ஷரங்கள் இருக்கவேண்டும்; அந்த அக்ஷரங்களிலும் ஹ்ரஸ்வம், தீர்க்கம் என்ற நியமங்கள்; அவ்விதமுள்ள அக்ஷரங்களால் அலங்கரிக்கப்பட்ட பாதங்கள் இவ்வளவு இருக்கவேண்டும்" என்ற நியமத்திற்குட்பட்ட ச்லோக ரசனையை நான் எப்படிச் செய்ய முடியும்? அக்ஷர நியமங்களோ, பாத நியமங்களோ இல்லாதபோனாலும், தண்டாகாரமாக, சூர்ணிகையாகவாவது உம்மை ஸ்துதிக்கலாமோ என்றாலும் சப்தத்தை அறியாத நான் கத்ய ரூபமான சூர்ணிகையை எப்

Koviloor Digital Library

படி ரசனை செய்வேன்! ஆகையால் ஸுப்ரமண்யக் கடவுளைப் பற்றி நான் எவ்விதம் ஸ்துதிக்கமுடியும்?

ஆகிலும் எனக்கொரு தைர்யமுண்டு. அதாவது: என்னுடைய மனதில் எப்பொழுதும் ஒரு சைதன்யமானது (ஒளியானது) ப்ரகாசித்துக்கொண்டேயிருக்கிறது. அதற்கு ஸமானமாக எந்த ஒளியையும் சொல்லமுடியாது. நிகரற்ற தேஜஸ்ஸாகும். அதற்கு ஆறுமுகங்களும் ப்ரகாசித்து வருகின்றன. அந்த மஹிமையைக் கொண்டு என்னுடைய முகத்தினின்றும், மலையில் அருவி ஜலம் வருவதுபோல் வாக்காகிற அம்ருதங்கள் ப்ரவாஹித்துக்கொண்டே வருகின்றன. அந்த வாக் விலாஸமோ கேட்கும் ஜனங்களுக்கு பரம ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியதாயும் இருக்கிறது. அபூர்வமான பொருளையும், தத்வங்களையும், ப்ரகாசப்படுத்துகிறபடியால் அந்த வாக் விலாஸம் ரொம்பவும் மேன்மை தங்கியது என்பதில் ஆக்ஷேபனையேயில்லை. சப்தத்தையோ, அர்த்தத்தையோ அறியாதவனுடைய முகத்திலிருந்தும் வாக்விலாஸங்கள் ப்ரவாஹிக்கின்றன என்பதும் ஒரு பெரிய ஆச்சர்யமே. அதனுல் ஹ்ருதயகமலத்தில் வாஸம் செய்கிற குஹனுடைய அருள்தான் அதற்குக் காரணமாகும். நான் எந்தக் கடவுளுக்கெதிரில் நின்றுவருகிறேனே அந்த ஸுப்ரமண்யமூர்த்தியே என் ஹ்ருதயத்திற்குள் ப்ரவேசித்து தன்னைத் தானுகவே ஸ்தோத்ரம் செய்துகொண்டு, இந்த ஸ்தோத்ரத்திற்கு நான் கர்த்தா என்ற கீர்த்தியை எனக்கு லோகத்தில் பரவச் செய்கிருர் அன்னியில் நான் இதில் யாதொரு ஸம்பந்தமும் இல்லாதவன் என்பது நிச்சயமாகிறது. இதனுல், ஸுப்ரமண்யக் கடவுளின் உபாஸனமானது மேலான பாண்டித்யத்தை அடைவதற்கு முக்யகாரணமுமாகிறது.

Koviloor Digital Library

3. வேதார்த்தங்களின் லக்ஷ்யம்.

मयूराधि रूढं महावाक्य गूढं
मनोहारि देहं महच्चित्तगेहम् ।
महीदेव देवं महावेद भावं
महादेव बालं भजे लोकपालम् ॥ ३ ॥

மயூராதி ரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மஹச்சித்த கேஹம் ।
மஹீதேவ தேவம் மஹாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபாலம் ॥ 3 ॥

பதவுரை :—

मयूराधिरूढं - மயூராதிரூடம் = மயில் வாஹனத்தில் ஏறிக்கொண்டிருப்பவராயும் महावाक्यगूढं - மஹாவாக்ய கூடம் = நான்குவிதமான மஹாவாக்யங்களுக்கும் லக்ஷ்யமான பொருளாயும் मनोहारि देहं - மனோஹாரி தேஹம் = பார்க்கிறவர்களுடைய மனதை அபஹரிக்கும் அழகுவாய்ந்த தேஹத்துடன் கூடினவராயும் महच्चित्तगेहं - மஹச்சித்தகேஹம் = மஹான்களுடைய மனதை வீடாக உடையவராயும் महीदेव देवं - மஹீதேவ தேவம் = ப்ராம்மணஜாதிக்கு அவச்யம் உபாஸிக்கத் தகுந்தவராயும் महावेद भावं - மஹாவேத பாவம் = நான்கு வேதங்களுடைய மஹாதாத்பர்யத்திற்கு விஷயமாயும் लोकपालं - லோகபாலம் = ஸர்வஜகத்தையும் பரிபாலிக்கும் சக்தியுள்ளவராயுமிருக்கிற महादेव बालं - மஹாதேவ பாலம் = பரமேச்வரனுடைய

Koviloor Digital Library

புத்ரனை ஸுப்ரமண்யக் கடவுளை भजे - பஜே = பஜிக்கின்றேன்.

தாத்பர்யம் :—

அனாதியாயும், அபௌருஷமாயும், ஸ்வயமாகவே ப்ரமாணமாயும் உள்ள ஸகல வேதங்களும் ப்ரக்ருதமான ஸுப்ரமண்யஸ்வாமியை ஸ்துதிக்க யத்னம் செய்தும், यतो वाचो निवर्तन्ते अप्राप्या मनसासह (யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்யா மனஸாஸஹ) என்ற சாஸ்த்ரப்படி வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாததான மஹிமையோடு கூடின ஸ்வரூபத்தைத் தான் போதிக்கமுடியாமல் பராபவத்தை அடைந்து எவ்விதத்திலும் அந்த ஸ்வரூபத்தை நாம் ஆச்ரயித்தே தீருவது என்ற தீர்மானத்துடன் ஸகல வேதங்களும் ஒன்ருகச் சேர்ந்து தமது தபோமஹிமையால் மயில் பக்ஷியாக ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு ஸுப்ரமண்யஸ்வாமிக்கு வாஹனமாகி தங்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்துகொண்டதாக ஸ்காந்தோபநிஷத் முதலான நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

मयूरभावं निगमाः तपसा प्राप्य षण्मुखम् ।
उद्वाह्य तृप्तिं परमां, संप्रापुः सर्वदा भुवि ॥

மயூரபாவம் நிகமா: தபஸா ப்ராப்ய ஷண்முகம் ।
உத்வாஹ்ய த்ருப்திம் பரமாம், ஸம்ப்ராபு: ஸர்வதா புவி ॥

என்ற ஸ்காந்தபுராண வாக்யமும், வேதந்தான் மயில் என்பதில் ப்ரமாணமாகும் :—

தவிரவும், प्रज्ञानं ब्रह्म, अयमात्मा ब्रह्म, तत्त्वमसि, अहं ब्रह्मास्मि (ப்ரக்ஞானம் ப்ரஹ்ம, அயமாத்மா ப்ரஹ்ம, தத்வமஸி, அஹம் ப்ரஹ்மாஸ்மி) என்று நான்கு மஹா வாக்யங்கள் வேதங்களில் உள்ளன. 'ஜீவனையும் பர

Koviloor Digital Library

ப்ரஃமமும் ஒன்று'—ஒரே தத்வம்தான் என்று போதிக்கும் வாக்யத்தை மஹா வாக்யம் என்று சொல்லுவார்கள். மேற்சொன்ன நான்கு வாக்யங்களுக்குள், प्रज्ञानं ब्रह्म (ப்ரக்ஞானம் ப்ரஹ்ம) என்ற முதல் வாக்யமானது பரப்ரம்மத்தினுடைய ஸ்வரூப லக்ஷணத்தைச் சொல்லும் வாக்யமாகும். 'சித் என்ற ப்ரகாசமே ப்ரம்மத்தினுடைய ஸ்வரூபம்' என்று அந்த வாக்யத்தின் தாத்பர்யமாகும்.

இரண்டாவதான अयमात्मा (அயமாத்மா) என்ற வாக்யமோ, आत्मा (ஆத்மா) என்ற வஸ்துவானது எப்படி எப்பொழுதும் ப்ரத்யக்ஷமாகவே புலப்படக்கூடியதோ, அதுபோல் அந்த ஆத்மாவைக் காட்டிலும் ப்ரம்மம் என்பது வேறில்லாததால், ப்ரம்மத்தினுடைய ஸ்வரூபத்திலும் வேதாந்தமென்ற சப்த ப்ரமாணத்தால் சொல்லப்பட்டு, ஸன்னிக்ருஷ்டமான விஷயத்தோடு கூடின शब्दापरोक्षं (சப்தாபரோக்ஷம்) என்ற ப்ரத்யக்ஷமே ப்ரமாணமாகும் என்ற தாத்பர்யமானது வெளியாகிறது. அதனுல் இரண்டாவது மஹாவாக்யம் ப்ரமாண வாக்யமாகும்.

மூன்ருவதான, तत्त्वमसि (தத்வமஸி) என்ற வாக்யமோ, 'ஜீவன் ப்ரம்மம்தான்' என்று போதிக்கிற வாக்யமாகும். ஆகையால அதை உபதேச வாக்யம் என்று சொல்லுவார்கள்.

நான்காவதான अहं ब्रह्मास्मि (அஹம் ப்ரஹ்மாஸ்மி) என்ற வாக்யமோ फल (பல) வாக்யமாகும். ब्रह्मभावापत्ति (ப்ரஹ்மபாவாபத்தி) என்ற மோக்ஷத்தை போதிக்கிறபடியால் அந்த வாக்யம் பல வாக்யமாக ஆகாது.

இந்த நான்கு மஹாவாக்யங்களுக்கும் எது பொருளோ அதைத்தான அகண்டமான ப்ரம்மம் என்று வேதாந்திகள் கூறுகிறுர்கள். அந்த அகண்ட

Koviloor Digital Library

மான ப்ரம்மம்தான் ப்ரக்ருதத்திலுள்ள ஸுப்ரமண்ய ஸ்வாமியாக பரமாசார்யாளுடைய த்ருஷ்டிக்கு புலப்படுகிறது. ப்ரம்மத்தைக் காட்டிலும், ஸுப்ரமண்ய ஸ்வாமி வேறல்ல. அதைத்தான "மஹாவாக்யங்களில் கூடமாக (ரஹஸ்யமாக) ப்ரகாசிக்கும் பரம்பொருளே நீ" என்று குறிப்பிட்டு பரமாசார்யாள், महावाक्यगूढ (மஹாவாக்யகூடம்) என்ற பதத்தால் சொல்கிறார்கள். இதனுல் ஸகல வேதாந்தங்களுக்கும் எந்த ப்ரம்மத்தினிடம் தாத்பர்யம் என்ற வேதாந்த நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த ப்ரம்மம் தான் ஸுப்ரமண்யஸ்வாமி என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

தவிரவும், உபநிஷத்துக்களாகிற திவ்ய ஸ்த்ரீகளுடைய மனதையும் அபஹரிக்கக்கூடிய ஸௌந்தர்யத்தால் அலங்கரிக்கப்பட்ட தேஹத்தோடு கூடினவர். இதனுல் பரமேச்வரனுடைய நெற்றிக்கண்ணுல் எரிக்கப்பட்ட மன்மதனே தேவியினுடைய கடாக்ஷ தீக்ஷையால் மறுபடியும் உருவம்கொண்டு ஸுப்ரமண்ய ஸ்வாமியாக ப்ரகாசிக்கின்ருர் என்ற தாத்பர்யமும் வெளியாகிறது. ஸுப்ரமண்ய மூர்த்தியின் சரீரத்தின் அழகுபோல் மற்ற எந்த தேவர்களுக்குப் இவ்விதம் ஸௌந்தர்யம் இல்லை என்பதும் ஸித்தமாகிறது.

मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः ।

மந ஏவ மனுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயோ: ।

என்ற சாஸ்த்ரப்படி மனதிற்கு ப்ரம்மத்தினிடத்தில் லயம் ஏற்பட்டால் மோக்ஷமும், ஜகத்தினிடத்தில் பற்றுதல் ஏற்பட்டால் பந்தமும் ஏற்படும் என்று தெரிகிறபடியால் மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தை விரும்புகிறவர்கள் ப்ரபஞ்ச வாழ்க்கையை வெறுத்து ப்ரம்ம ஸ்வரூபத்தினிடத்தில் மனதை ஸ்திரப்படுத்தவேண்டும் மனதோ சஞ்சலமான ஸ்வபாவமுள்ளதாகையால் ஒரு மனிதன்

Koviloor Digital Library

தானாக மனதை ப்ரம்மத்தினிடத்தில் ஸ்திரப்படுத்த முடியாது. இந்த ஸுப்ரமண்யமூர்த்தியை தர்சனம் செய்தாலோ, ஸுப்ரமண்யமூர்த்தியினுடைய மஹாமந்த்ரமான ஷடக்ஷரியை ஜபம் செய்தாலோ, அவர்களுக்கு பகவானே தன்னுடைய நிஜ ஸ்வரூபத்தை தர்சனம் கொடுத்து, தன்னுடைய தேஹத்தின் அழகால் அவர்களுடைய மனதை பர ப்ரம்மமாகிய தன்னிடம் தானே அபஹரித்துக் கொள்கிறார். இதனால் ஸுப்ரமண்ய உபாஸனம் மோக்ஷத்திற்கு நிகரற்ற ஸாதனம் என்பது வெளியாகிறது. அக்காரணத்தைக் கொண்டுதான் மஹான்களாகிய ஞானிகளும், தன்னுடைய மனதை ஸுப்ரமணியக் கடவுளுக்கு வாஸம் செய்யக் க்ரஹமாகக் கொடுத்துவிட்டார்கள். அதைத்தான் பரமாசார்யாளும் महच्चित्तगेहं (மஹச்சித்தகேஹம்) என்ற பதத்தால் சொல்லுகிறார்கள். மஹான்களுடைய மனதையே வீடாக உடையவர் என்பதே அந்த பதத்தின் பொருளாகும்.

ப்ராம்மண ஜாதிக்கு ஸுப்ரமண்யஸ்வாமி தான் முக்யமாக பூஜிக்கத்தக்க தெய்வமாகும். ஆன்ஹிகம் முதலான க்ரந்தங்களில் பஞ்சாயதன பூஜையை விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது. आदित्यं अम्बिकां विष्णुं गणनाथं महेश्वरं (ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும் கணநாதம் மஹேச்வரம்) என்ற வாக்யத்தால் ஸூர்யபகவான், பார்வதி, மஹாவிஷ்ணு, மஹாகணபதி, பரமேச்வரன் என்று 5 தேவதைகளைத் தான் முக்யமான தேவதைகள் என்றும் அந்த தேவதைகளை பூஜிப்பதற்குத்தான் பஞ்சாயதன பூஜையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பூஜிக்கத்தகுந்த தேவதைகளுக்குள் ஸுப்ரமண்யஸ்வாமியைக் குறிப்பிடவில்லை. ப்ரக்ருதத்தில் பரமாசார்யாளோ महीदेवदेवं (மஹீ தேவதேவம்) என்ற பதத்தால் ப்ராம்மணனுக்கு ஸுப்ரமண்யஸ்வாமியை முக்ய தேவதை

Koviloor Digital Library

யாகச் சொல்லுகிறார்கள். அதை கவனிக்கும்பொழுது எந்த மந்த்ரங்களானாலும், 'ஓம்' என்ற ப்ரணவ ஸம்பந்தமில்லாத மந்த்ரமே இல்லாததால், ப்ரணவம் என்றது ஓங்காரத்தின் அர்த்தமானதால் ஸுப்ரமண்ய மூர்த்தி எல்லா மந்த்ர ஜபங்களிலும் ஸம்பந்தப்படுகிறார் என்றும் ஸித்திக்கிறது. எந்த பூஜையிலும் ஆத்ம பூஜை யில்லாத பூஜையே இல்லாததால் மஹாவாக்யகூடம் என்ற பதத்தால் ஆத்மஸ்வரூபம் என்று ஸுப்ரமண்ய ஸ்வாமியை வர்ணித்திருப்பதால், எந்த தேவதையை எவன் பூஜித்தாலும் அவன் ஸுப்ரமண்ய ஸ்வாமியையும் பூஜித்துத்தான் ஆக வேண்டும் என்பது ஸித்தமாகிறபடியால் எல்லா பூஜைகளிலும் ஸுப்ரமண்ய ஸ்வாமி பூஜிக்கப்படுகிறார். பஞ்சாயதன பூஜையில் கணக்கிடப்பட்ட தேவதைகளோ, அவரவர்களை பூஜை செய்யப்படும் காலத்தில் மட்டுமே அவர்கள் பூஜை செய்யப்பட்டவர்களாவார்கள்; ஸுப்ரமண்ய ஸ்வாமியோ எல்லா தேவதையினுடைய பூஜையிலும் 'ஓம்' காரத்திற்கும் ஆத்மாவுக்கும் ஸம்பந்தம் இருப்பதால், பூஜிக்கப்பட்டவனாகவே ஆகிறார். ஆகையால் ப்ராம்மணனுக்கு ஸுப்ரமண்யோபாஸனமானது அவச்யமானது.

தவிரவும், பரமேச்வரனுடைய புத்ரனாகவும் ஸுப்ரமண்யமூர்த்தி ஆகிறார். ब्राह्मणानां रुद्रो अतिदेवत (ப்ராஹ்மணாநாம் ருத்ரோ அதிதேவத) என்ற சாஸ்த்ரத்தை அநுஸரித்து சிவபூஜை செய்யாதவன் ப்ராம்மணனாகவே ஆகமாட்டான் என்பது தெரியவருகிறது. ஸுப்ரமண்ய ஸ்வாமியோ சிவபுத்ரனானதால் ப்ராம்மணனுக்கு ஸுப்ரமண்ய பக்தியும் அவச்யமானது என்பதில் ஆக்ஷேபணையே யில்லை.

ப்ரத்யக்ஷம், அநுமானம், உபமானம், சப்தம், அர்த்தாபத்தி அநுபலப்தி என்று ஆறுவிதமான ப்ரமாணங்களுக்குள் வேதம் என்ற சப்த ப்ரமாணம்

Koviloor Digital Library

தான் மேலான ப்ரமாணம் என்பது ஸர்வ வாதிகளா லும் ஒப்புக்கொள்ளத் தகுந்தது. அந்த வேதத்தால் போதிக்கப்படும் பொருளைத்தான் பரப்ரம்மம் என்று சொல்லுவார்கள். அந்த வேதங்களும் அவாந்தர தாத்பர்யம் என்றும், மஹா தாத்பர்யம் என்றும் இரண்டுவிதம் தாத்பர்யத்தை ஒப்புக் கொள்கிறார்கள். மஹா தாத்பர்யமானது ப்ரம் மத்தினிடத்தில்தான். அந்த ப்ரம்மம் ப்ரக்ருத மான ஸுப்ரமண்ய ஸ்வாமியே भावं (பாவம்) என்றால் தாத்பர்யம் என்று எண்ணவேண்டும். महावेद भावं (மஹாவேத பாவம்) என்றதால் வேதங்களுக்கு மஹா தாத்பர்யமானது எந்த வஸ்துவினிடம் ஏற் படுமோ, அந்த வஸ்துவே ப்ரக்ருதமான தேவதை என்பது ஸித்தமாகிறது.

महादेवोपि बालः कदाचित् यस्य (மஹாதேவோபி பால: கதாசித் யஸ்ய) என்ற ஸமாஸத்தை அனுஸரித்து, ஸர்வ வித்யைக்கும் நிதியான பரமேச்வரன்கூட, ப்ர ணவத்தின் 'பொருள் என்ன'வென்று தெரிந்துகொள் ளாத காரணத்தால், ஸுப்ரமண்ய ஸ்வாமியினுடைய ஸன்னதியில் அக்ஞனாக இருந்துகொண்டு ப்ரணவத் தின் அர்த்தத்தை ஸுப்ரமண்ய ஸ்வாமி மூலமாக அறிந்துகொண்டார் என்பதும் வெளியாகிறது.

अज्ञं हि बलमित्याहुः पितेत्येव च मन्त्रदं (அக்ஞம் ஹி பலமித் யாஹு: பிதேத்யேவ ச மந்த்ரதம்) என்ற ந்யாயத் தால் தத்வத்தை தெரிந்துகொள்ளாதவன் பாலன் என்றும், அறிந்தவன் தகப்பன் என்றும் ஆகிறது. 'ஓம்' காரம் என்ற ப்ரணவத்தின் அர்த்தத்தின் விஷயத்தில் பரமேச்வரன் பாலனாகவும் ஸுப்ரமண்ய ஸ்வாமி பிதாவாகவும் ஏற்பட நேர்ந்துவிட்டது.

ஸுப்ரமண்ய கடவுள் குழந்தைப் பருவத்தில் வீரபாஹு முதலான தன்னுடைய ப்ராதாக்களோடு, ஒருஸமயம் மஹாகைலாஸத்தில் வெளிவாசலில் விளை

Koviloor Digital Library

யாடிக்கொண்டிருந்தார். அந்த ஸந்தர்ப்பத்தில் ப்ரம்மாவானவர் பரமேச்வரனை தர்சனம் செய்ய கைலாஸத்திற்குள் நுழைந்தார். ஸுப்ரமண்ய கடவுளுக்குத் தன்னை கேட்காமல் ப்ரம்மாவானவர் கைலாஸத்திற்குள் எப்படி நுழைந்தார்? என்று கோபம் வந்தது. 'திரும்பி வரும்பொழுது பார்த்துக்கொள்வோம்' என்று ப்ரம்மா திரும்பிவருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ப்ரம்மாவானவர் பரமேச்வரனை தர்சனம் செய்துவிட்டு திரும்பிப்போகும் ஸமயத்தில் ப்ரம்மாவினுடைய கரங்களை ஸுப்ரமண்ய கடவுள் பிடித்துக்கொண்டு "என்னை கேழ்க்காமல் நீர் எப்படி கைலாஸத்திற்குள் போகலாம்?" என்று கேட்டார். அதற்கு ப்ரம்மாவானவர், "நீ ரொம்பவும் சிறு குழந்தை. குழந்தையாகவே இருந்துவா. பெரியோர்களை அவமதிக்காதே. ஸகல வேதங்களைக்கூட ஸ்ருஷ்டித்தவன் நான். நான் உள்ளே போவற்கு யாரைக் கேழ்க்க வேண்டும்?" என்று கர்வத்துடன் பேசினார். அதைக் கேட்ட ஸுப்ரமண்ய கடவுளுக்கோ அபாரமான கோபம் வந்துவிட்டது. "வேதத்தை ஸ்ருஷ்டித்தவன் என்ற அஹங்காரம் உமக்கு இருக்கிறதே. ஸ்வரம் என்றால் என்ன? அதன் பொருள் என்னவென்று சொல்லும் பார்ப்போம்!" என்றார். அந்த ஸ்வரம் என்பதுதான் ப்ரணவமாகும். ப்ரம்மாவுக்கும் அதன் பொருள் ஸரிவரத் தெரியவில்லை. அந்த தவறுதலுக்காக வீரபாஹு மூலமாக ப்ரம்மாவை காராக்ரஹத்தில் கொண்டு அடைக்கும்படி நியமித்தார். பஹுகாலம் வரையிலும் ப்ரம்மா காராக்ரஹத்தில் வாஸம் செய்தார், அந்த ஸந்தர்ப்பத்தில் வீரகேஸரி என்ற மற்றொரு தம்பியை ப்ரம்மபட்டத்தை வஹிக்கும்படி செய்து, ப்ரம்மாவினுடைய கார்யத்திற்கு யாதொரு குறைவுமில்லாமல் ஷண்முகன் நடத்திவந்தார். வெகு நாட்கள்வரை பரமேச்வரனுக்கு இவ்விஷயமே தெரியவில்லை. பிறகு தெரிந்து, நந்திகேச்வரர்மூலம், காராக்ரஹத்தினின்

Koviloor Digital Library

றும் ப்ரம்மாவை விடுதலை செய்யவேண்டுமென்று ஸுப்ரமண்ய ஸ்வாமிக்கு சிபார்சு செய்தார். ஸுப்ரமண்ய ஸ்வாமியோ, நந்திகேச்வரருடைய சிபார்சையும் லக்ஷ்யம் செய்யவில்லை. பரமேச்வரனே ஸுப்ரமண்யஸ்வாமியினிடம் நேரில் வந்து, ப்ரம்மாவை காராக்ரஹத்தினின்றும் விடும்படி கேட்டுக்கொண்டார். அதையும் மறுத்துவிட்டார். எதற்காக ப்ரம்மாவை நீ காராக்ரஹ வாஸம் செய்யும்படி செய்தாய் என்று பரமேச்வரன் கேட்க, "நாங்களெல்லோரும் கைலாஸத்தின் வாசலில் இருக்கும்பொழுது, எங்களுடைய உத்திரவன்னியில், ப்ரம்மா கைலாஸத்திற்குள் நுழைந்தார். திரும்பி வரும்பொழுது, "ஏனையா எங்கள் உத்தரவன்னியில் நுழைந்தீர்" என்று கேட்க "நீங்கள் யாரடா சிறு குழந்தைகள். நானே வேத கர்த்தா. நான் உள்ளே போவதற்கு யாரைக் கேட்கவேண்டும்" என்று அஹங்காரமாகப் பேசினார். "அப்படியானால் ஸ்வரம் என்றால் என்ன? அதன் பொருள் யாது?" என்று நான் கேட்டேன். அது ஒன்றுமே அவருக்குத் தெரியவில்லை. "தெரியாது என்று சொன்னாலும் தேவலை. விபரீதமாகப் பிதற்றினார். சாஸ்த்ரத்தினுடைய அர்த்தத்தை விபரீதமாகச் சொல்கிறவனுக்கு சிறைவாஸமானது ஏற்பட்டதனால் காராக்ரஹத்தில் ப்ரம்மாவைப் போட்டேன்." என்று ஸுப்ரமண்ய ஸ்வாமி சொன்னார். அந்த ஸந்தர்ப்பத்தில் பரமேச்வரனுக்கும் "ஸ்வரம்" என்றால் என்னவென்பது புலப்படாமல், அதை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடன், ஸுப்ரமண்ய ஸ்வாமியை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு இரண்டு கைகளாலேயும் அணைத்து, "ரஹஸ்யமாக எனக்கு அதைச் சொல்லவேண்டு" மெனக் கேட்க, பரமசிவனுடைய வலது காதில் ஸுப்ரமணிய ஸ்வாமியானவர், ஸ்வரம் என்பதையும் அதன் பொருளையும் உபதேசித்ததாக ஸ்காந்தபுராணத்தில் ப்ரஸித்தமான கதையாகும். இதனால் பரமசிவனும்

Koviloor Digital Library

ஒரு விஷயத்தில் தான் அறியாதவனாக இருந்து ஸுப்ரமண்ய ஸ்வாமி மூலமாக அறிந்துகொண்டார் என்று தெரிகிறபடியால், சிவனுக்கும் மேலான பரம் பொருள் ஸுப்ரமணியக் கடவுளே என்று தெரிகிற படியால், அந்த மூர்த்தியை பூஜிக்காமல் எப்படி இருக்கிறது!

ஸர்வ லோகத்தையும் ரக்ஷிக்கிற வஸ்துவும் இந்த ஸுப்ரமணிய ஸ்வாமிதான். ப்ராம்மண ஜாதியும், கோக்களும் செழிப்பாக இருந்தால் ஸர்வலோகமும் செழிப்பாக ஆகும். அதை அநுஸரித்துத்தான்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्यायेन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாயேந மார்கேண மஹீம் மஹீசா: ।
கோப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகிநோ பவந்து ॥

என்ற சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். ஸத்கர்மாநுஷ்டானத்தால்தான் தேவர்கள் த்ருப்தி அடைந்து பூலோகத்தில் மழை ஏற்படுகிறது. அந்த மழையினால் ஸகல ஸஸ்யாதிகளும் வ்ருத்தியாகி, ஸகல ஜீவ ராசிகளும் திருப்தி அடைகின்றன. ஸத்கர்மாவை அநுஷ்டிப்பதற்கோ, கர்த்தாவாக ப்ராம்மணன் ஜீவித்திக்கவேண்டும். தேவர்களுக்கு அந்த கர்மாவில் ஹவிர்பாகத்தைக் கொடுப்பதற்கோ பால், நெய் முதலான த்ரவ்யங்களைக் கொடுக்க கோக்களும் செழிப்பாக இருக்கவேண்டும். ஹோமத்ரவ்யமோ, கர்த்தாவோ இல்லாதபோனால் கர்மா நடைபெறாது. அந்த இருவர்களும் செழிப்பாக இருந்தால் ஸத்கர்மாக்கள் நடைபெற்று, அதன்மூலம் ஸகல ப்ராணிகளுக்கும் ஆஹாராதிகள் ஏற்படும் என்ற கருத்தை வைத்துக்கொண்டுதான் ப்ராம்மணனும், கோக்களும்

Koviloor Digital Library

க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று மேற்சொன்ன வாக்யத்தின் கருத்தாகும். ஹோம த்ரவ்யத்தைக் காட்டிலும் கர்த்தாவான ப்ராம்மணனே முக்யமான உபாயமாகும் ब्रह्म (ப்ரஹ்ம) என்ற பதத்தால் ப்ராம் மண ஜாதி என்று அர்த்தம் அந்த ஜாதிக்கு ஹிதத் தைச் செய்யும் ஸ்வபாவமுள்ள தைவத்திற்கு ब्रह्मण्य (ப்ரஹ்மண்யம்) என்று பெயர். அதிலும், மிகவும் அதிகமான ஹிதத்தை ப்ராம்மண ஜாதிக்கு செய்யும் ஸ்வபாவமுள்ள காரணத்தைக்கொண்டு, ப்ரக்ருத மான தேவதைக்கு ஸுப்ரமண்ய सुब्रह्मण्यः (ஸுப்ரஹ் மண்ய:) என்று பெயர் விளங்கி வருகிறது. இவ்விதம் ப்ராம்மண ஜாதி மூலமாக, ஸத்கர்மாக்களை வ்ருத்தி செய்து, லோகத்தை ரக்ஷிக்கிறவனானதால் ஸுப்ரமணி யக் கடவுளுக்கு லோகபாலன் लोकपालः (லோகபால:) என்ற பெயரும் ஸித்திக்கிறது. இவ்விதம் மஹிமை யுள்ள ஷண்முகனை நான் பஜிக்கின்றேன். என் மனதை எப்பொழுதும் அவனுடைய மங்கள விக்ர ஹத்திலேயே ஸஞ்சரிக்கும்படி செய்கின்றேன்.

---

4. உபாஸன மஹிமை.

यदा संनिधानं गता मानवामे
भवाम्भोधिपारं गतास्ते तदैव ।
इति व्यञ्जयन् सिन्धुतीरे य आस्ते
तमीडे पवित्रं पराशक्तिपुत्रम् ॥ ४ ॥

யதா ஸந்நிதானம் கதா மாநவாமே
பவாம்போதிபாரம கதாஸ்தே ததைவ ।
இதி வ்யஞ்ஜயந் ஸிந்துதீரே ய ஆஸ்தே
தமீடே பவித்ரம பராசக்திபுத்ரம் ॥ 4 ॥

Koviloor Digital Library

பதவுரை:—

यदा - யதா = எப்பொழுது मानवाः - மாநவா: = மனிதர்கள் मे - மே = என்னுடைய संनिधानं - ஸந்நி தானம் = ஸன்னிதியை गताः - கதா: = அடைந்தவர் களாக ஆவார்களோ, (அதாவது என் ஸன்னிதிக்கு எப்பொழுது வருகிறார்களோ) ते - தே = அந்த மனி தர்கள் तदैव - ததைவ = அப்பொழுதே भवाम्भोधिपारं - பவாம்போதிபாரம = ஸம்ஸாரமாகிய பெரிய ஸமுத் ரத்தின் அக்கரையை गताः - கதா: = அடைந்தவர்க ளாக ஆவார்கள் इति - இதி = என்று व्यञ्जयन् - வ்யஞ் ஜயந் = ப்ராணிகளுக்கு ஸூசிப்பித்துக்கொண்டு सिन्धुतीरे - ஸிந்துதீரே = ஸமுத்ரத்தின் கரையில் यः - ய: = எந்த பகவான் आस्ते - ஆஸ்தே = பூர்ண ஸாந்நி யத்துடன் விளங்கிவருகிறாரோ पवित्रं - பவித்ரம் = மஹா பரிசுத்தமான ஸ்வபாவமுள்ளவராயும் पराशक्तिपुत्रं - பரா சக்திபுத்ரம் = லோகமாதாவான பரதேவதையின் புத்ரனாயும் (விளங்கிவரும்) तं - தம் = அந்த ஸுப்ர மண்யக் கடவுளை ईडे - ஈடே = ஸ்துதிக்கின்றேன்.

தாத்பர்யம் :—

ஹே ஸ்வாமின்! நான் உம்முடைய ஸந்நிதிக்கு வந்ததிலிருந்தும் நீர் எதற்காக ஸமுத்ரக்கரையில் வாஸம் செய்கிறீர் என்பதை யோசித்தேன். அது இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது. உனக்கோ மஹா கைலாஸத்திற்கு அருகில் ஸ்கந்தகிரி என்ற ஒரு ராஜதானியானது விச்வகர்மாவால் நிர்மாணம் செய்யப்பட்டு, மிகவும் சோபை யுடன் விளங்கி வருகிறது. அங்கும் நீ வாஸம் செய்யவில்லை. உன் தாயாரான ஜகதீச்வரிக்கோ,

Koviloor Digital Library

அம்ருதக் கடலினுடைய நடுவில் கல்ப வ்ருக்ஷங்களால் சூழப்பட்ட மணித்வீபம் என்ற ப்ரதேசத்தில், சிந்தாமணி ரத்னத்தால் நிர்மாணம் செய்யப்பட்ட திவ்யக்ர ஹமும் விளங்கி வருகிறது! அங்கும் நீ அதிகமாக வாஸம் செய்து நான் பார்த்ததில்லை. எப்பொழுதும் இந்த ஸமுத்ரக்கரையில்தான் நீ வாஸிக்கிருய். சில பௌராணிகர்கள் ஸமுத்ரத்தினுடைய நடுவில் அமைக்கப்பட்ட வீரமஹேந்த்ர பட்டணத்திற்கு அதிபதியான சூரபத்மாவோடு யுத்தம் செய்து அவனை வதித்ததற்கு இந்த ஸ்தலத்தை யுத்தஸ்தலமாக பகவான் வைத்துக்கொண்டிருந்ததால், "நமக்கு இந்த இடத்தில் ஜயம் ஏற்பட்டபடியால் இங்கேயே வாஸம் செய்யவேண்டும்" என்பதை காரணமாகச் சொல்லுகிருர்கள். நான் நினைப்பதோ "நான் ஸமுத்ரக்கரையில் வஸிக்கிறபடியால், என ஸன்னிதிக்கு எவர்கள் வந்து என்னை தர்சனம் செய்கிருர்களோ அவர்கள் உடன் ஸம்ஸார ஸமுத்ரத்தை தாண்டிவிட்டவர்களாக ஆவார்கள். அதாவது பிறப்பு, இறப்பு என்ற துக்கநதிலிருந்தும் விடுபட்டவர்களாக ஆகி பரமானந்த பரிதாளாவார்கள்" என்பதை லோகத்தில் ப்ரசுரம் செய்வதற்காகத்தான் நீ இவ்விதம் ஸமுத்ரக்கரையில் வாஸம் செய்கிருய் என்று நான் நினைக்கிறேன். அதுதான் உண்மையென்றும் என்னுடைய ஸித்தாந்தமாகும் ஆகையால், நானும் என் புண்யவசத்தால் உன ஸந்நிதிக்கு வந்து சேர்ந்துவிட்டேன். ஸம்ஸாரபந்தத்தினின்றும் விமுக்தனும் ஆகிவிட்டேன். இவ்விதம ச்ரமமில்லாமல் முக்தனுக செய்த உனக்கு நான் என்ன ப்ரத்யுபகாரம் செய்வேன். கேவலம் ஸ்தோத்ரம்தான் செய்யமுடியும். ப்ரம்மவித்யா ரூபிணியான பராசக்தியின் புத்ரனை உனக்கு யாராலதான், எவ்விதமான உபகாரத்தைத்தான் செய்யக்கூடும் என்று சொல்லிக்கொண்டு ஸுப்ரமண்யமூர்த்தியை பரமாசார்யாள் ஸ்துதிக்கின்ருர்கள். இதனுல யாவிட ஜன்மத்தில் பவபந்தத்தி

Koviloor Digital Library

விருந்தும் விமோக்ஷத்தை இச்சிக்கிறவர்கள், தன் ஜன்மாவுக்குள் ஒரு கடவையாவது ஸ்ரீஜயந்திபுரம் என்ற திருச்செந்தூர் சென்று ஸுப்ரமணியமூர்த்தியை தர்சனம் செய்யவேண்டியது கடமையாகும் என்பது வெளியாகிறது.

---

5. ஸகல வ்யாதி நிவ்ருத்தி.

यथाब्धेस्तरङ्गाः लयं यान्ति तुङ्गाः
तथैवापदस्सन्निधौ सेवतां मे ।
इतीवोर्मिपङ्क्तीर्नृणां दर्शयन्तं
सदा भावये हृत्सरोजे गुहं तम् ॥ ५ ॥

யதாப்தேஸ்தரங்கா: லயம் யாந்தி துங்கா:
ததைவாபதஸ்ஸந்நிதௌ ஸேவதாம் மே ।
இதீவோர்மிபங்க்தீர்ந்ருணாம் தர்சயந்தம்
ஸதாபாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம்தம் ॥5॥

பதவுரை :—

यथा - யதா = எப்படி तुङ्गाः - துங்கா: = உயர்ந்த अब्धेस्तरङ्गाः - அப்தேஸ் தரங்கா: = ஸமுத்ரத்தினுடைய அலைகள் लयं - நாசத்தை यान्ति - யாந்தி = அடைகின்றனவோ, तथैव - ததைவ = அப்படியே मे - மே = என்னை सेवतां - ஸேவதாம் = தர்சனம் செய்யும் ஜனங்களுடைய आपदः - ஆபத: = ஸகலவிதமான ஆபத்துக்களும் सन्निधौ - என ஸந்நிதியில் लयं - நாசத்தை यान्ति - யாந்தி = அடைந்துவிடும். इति - இதி = என்று ऊर्मिपङ्क्तीः - ஊர்மிபங்க்தீ: = அலைகளுடைய வரிசைகளை

Koviloor Digital Library

दर्शयन्तमिव (स्थितं) - தர்சயந்தமிவ (ஸ்திதம்) = காண்பிக்கிறதுபோல் (இருக்கிற) तं - தம் = ப்ரஸித்தமான गुहं - குஹம் = ஹ்ருதய குஹாவாஸியான ஸுப்ரமண்ய மூர்த்தியை सदा - ஸதா = எப்பொழுதும் हृत्सरोजे - ஹ்ருத்ஸரோஜே = ஹ்ருதயபுண்டரீகத்தில் भावये - பாவயே = த்யானம் செய்கின்றேன்.

தாத்பர்யம் :—

ஹே ஸ்வாமின்! நீர் ஸமுத்ரதீரத்தில் வாஸம் செய்வதற்கு மற்றொரு காரணமும் எனக்கு ஸ்புரிக்கிறது அதாவது: இங்கு ஸமுத்ரத்திலோ அலைகள் ரொம்பவும பெரிதாயும், பயங்கரமாயும் இருக்கின்றன. ஆகிலும் உன் ஸந்நிதியில் அலைவாய்க்கரை வந்தவுடன் அந்த அலைகளுடைய ஸ்வரூபமே தெரியாமல் ஜலத்தோடு ஜலமாக மறைந்துவிடுகின்றது. அதுபோல் உன் ஸன்னிதியில் உன்னை ஸேவிக்கும் ப்ராணிகளுக்கு, 1. ஆத்யாத்மிகமாகவோ (சரீரத்தையொட்டி ஏற்படும் வ்யாதிகள்,) 2. ஆதிதைவிகமாகவோ, (சீதோஷ்ணநிலையை ஒட்டி ஏற்படும் வ்யாதிகள்,) 3. ஆதிபௌதிகமாகவோ (கர்ம வ்யாதிகள்) இந்த மூன்றுவிதமான ஆபத்துக்களும் எவ்வளவு பரிஹரிக்கந்தகாததாயிருந்தாலும் அந்த ஸகல வ்யாதிகளும் என்னை தர்சனம் செய்த மாத்ரத்தால் வேறுடன் நசித்துவிடும் என்றதை ப்ராணிகளுக்கு, அலைகளை த்ருஷ்டாந்தமாகக் காட்டி உபதேசம் செய்வதற்காக, நீ இங்கு வாஸம் செய்கிறாயோ! என்று தோன்றுகிறது. அவ்விதம் மஹிமையுள்ள உன்னை என்னுடைய மனதில் எப்பொழுதும் ஸ்மரித்துக்கொண்டேயிருக்கிறேன். இதனுல் குஷ்டம், அபஸ்மாரம், க்ஷயம், பூத, ப்ரேத, பிசாச பாதை, முதலான க்ரூரமான ஸகல ரோகங்களும் திருச்செந்தூர் க்ஷேத்ரம் சென்று, ஸுப்ரமண்யஸ்வாமியை ஒரு தடவை ஸேவித்த மாத்

Koviloor Digital Library

ரத்தாலேயே பறந்துபோய்விடும் என்பது வெளியாகிறது. முன் ச்லோகத்தில் மோக்ஷத்தை பலமாகச் சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தால் ஸகல வ்யாதி நிவர்த்தி பலமாகச் சொல்லப்படுகிறது.

---

6. ஷடக்ஷரீ மஹிமை.

गिरौ मन्निवासे नरा येऽधिरूढाः
तदा पर्वते राजते तेऽधिरूढाः ।
इतीव ब्रुवन्गन्धशैलाधिरूढः
स देवो मुदे मे सदा षण्मुखोऽस्तु ॥ ६ ॥

கிரௌ மந்நிவாஸே நராயேதிரூடா:
ததா பர்வதே ராஜதே தே அதிரூடா: ।
இதீவ ப்ருவந்கந்தசைலாதிரூட:
ஸ தேவொ முதே மே ஸதா ஷண்முகோஸ்து ॥ 6 ॥

பதவுரை :—

ये नराः - யே நரா: = எந்த மனிதர்கள் मन्निवासे - மந்நிவாஸே = என்னுடைய வாஸஸ்தானமாகிய गिरौ - இந்த மலையில் अधिरूढाः - அதிரூடா: = ஏறினவர்களாகிற भवन्ति - பவந்தி = ஆவார்களோ ते - தே = அவர்கள் तदा - ததா = அப்பொழுதே राजते - ராஜதே = வெள்ளிமயமான पर्वते - பார்வதே = கைலாஸத்தில் अधिरूढाः - அதிரூடா: = ஏறி வாஸம் செய்கிறவர்களாக भवन्ति - பவந்தி = ஆகிறார்கள் इति - இதி = என்று ब्रुवन्निव - ப்ருவந்நிவ = சொல்லுகிறவர்போல் गन्धशैलाधिरूढः - கந்தசைலாதிரூட: = கந்தமாதன பர்வ

Koviloor Digital Library

தத்தின் உச்சியில் ஏறி விளங்குகிற ஸ: - ஸ: = அந்த षण्मुखः-ஷண்முக: = ஆறுமுகத்தோடுகூடின देवः - தேவ: = ஸுப்ரமண்ய ஸ்வாமியானவர் मे - மே = என்னுடைய मुदे - முதே = ஸந்தோஷத்தின் பொருட்டு अस्तु - அஸ்து = இருக்கட்டும்.

தாத்பர்யம் :—

திருச்செந்தூர் க்ஷேத்ரத்தில் கந்தமாதன பர்வதம் என்ற ஒரு மலையுண்டு. அந்த மலையில்தான் ஸுப்ரமண்யஸ்வாமியானவர் வாஸம் செய்கிருர். எந்த க்ஷேத்ரத்திலும் ஸுப்ரமண்யஸ்வாமியானவர். மலையின் உச்சியில்தான் வாஸம் செய்கிறவருகக் காணப்படுகிருர். அதுபோலவே இந்த க்ஷேத்ரத்திலும் விளங்குகிருர். தன்னுடைய பிதாவான பரமேச்வரன், கைலாஸ பர்வதத்தில் விளங்குகிறபடியால் தானும் அதையொட்டி மலையில் வாஸம் செய்கிருரோ என்றும் தோன்றுகிறது! இந்த கந்தமாதனம் என்ற மலைமீது ஏறி, தன்னை தர்சனம் செய்பவர்களுக்கு பரமேச்வரனுடைய ஸாரூப்ய மோக்ஷத்தை யடைந்து அங்கு வாஸம் செய்யும்படியான புண்யவான்களாக அந்த பக்தர்களை ஸுப்ரமண்ய ஸ்வாமியானவர் செய்கிருர். கைலாஸத்தில் வாஸம் செய்யும் பரமேச்வரனுக்கோ ஐந்து முகங்கள் தான் உள்ளன. இங்கு கந்தமாதன பர்வதத்தில் வாஸம் செய்யும் ஸுப்ரமண்ய கடவுளுக்கோ ஆறு முகங்கள் உண்டு. இந்த ஸந்தர்ப்பத்தில ஸநத் குமார ஸ்வாமி, நாரத மஹர்ஷி, அகஸ்த்யர் ப்ரம்மா, மதம்வந்தரன், ஸரஸ்வதீ தேவி இந்த ஆறுபேர்களும் ஸுப்ரமண்யக் கடவுளை தர்சனம் செய்துவிட்டு ஸுப்ரமண்யமூர்த்தியின் தத்வத்தை ப்ரகாசம் செய்கிற சரவணபவ என்ற ஷடக்ஷரீ மஹாமந்த்ரத்தை உபதேசித்துக்கொள்ள விரும்பின காலத்தில், அந்த மந்த்ரத்திலுள்ள ஆறு அக்ஷரங்களின் எழுத்தின் தத்வங்களை ஒரே காலத்

Koviloor Digital Library

தில் உபதேசிப்பதற்காக, ஆறுமுகம் கொண்டார் என்றும் சாஸ்த்ரங்களில் சொல்லப்படிருக்கிறது. பரமேச்வரனுக்கு இந்த பாக்யம் இல்லை. மனிதர்களுக்கும் அந்த மந்த்ரத்திலுள்ள ஆறு அக்ஷரங்கள் அடங்கிய பொருள்களின் லாபம்தான் தேவையானது.

முதல் எழுத்தான श (ச) காரத்தால் ஸ்ரீ: என்ற லக்ஷ்மியும், இரண்டாவதான र (ர) காரத்தால் வித்யையும், மூன்றாவதான व (வ) காரத்தால் போக மோக்ஷமும், நாலகாவதான ण (ண) காரத்தால சத்ரு ஸம்ஹாரமும், ஐந்தாவதான भ (ப) காரத்தால் ம்ருத்யுவை ஜயிப்பதும், ஆறாவதான व (வ) காரத்தால் நோயற்ற வாழ்வும் பரகாசிக்கிறபடியால், இந்த ஆறு தத்வங்களையும பூலோகத்தில் ஸ்தாபனம செய்வதற்காக முன் சொன்ன ஸநத்குமாரர்கள் முதலான ஆறு சிஷ்யர்களை வ்யாஜமாக வைத்துக்கொண்டு பகவான் உபதேசம் செய்தார். அதனால் ஆறுமுகமாயுள்ள அவஸரத்தில் ஸுப்ரமண்யஸ்வாமியை தர்சனம் செய்பவர்களுககு மேற்சொன்ன ஆறு லாபங்களும் கிடைக்குமானதால் ப்ரக்ருதத்திலும் நானும் இப்பொழுது பக்தனாக ஆனதால் என்னுடைய விஷயத்தில் எப்பொழுதும் ஸந்தோஷத்தையே கொடுத்துக் கொண்டு, என்னை அந்த ஷண்முகம ரக்ஷிக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

---

7. குஹ தர்சனத்தால் பரம ஆரோக்யம்.

महाम्भोधितीरे महापापचोरे
मुनीन्द्रानुकूले सुगन्धाख्यशैले ।
गुहायां वसन्तं स्वभासा लसन्तं
जनार्तिं हरन्तं श्रयामो गुहं तम् ॥ ७ ॥

Koviloor Digital Library

மஹாம்போதிதீரே மஹாபாபசோரே
முநீந்த்ராநுகூலே ஸுகந்தாக்யசைலே ।
குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸாலஸந்தம்
ஜநார்திம் ஹரந்தம் ச்ரயாமோகுஹம்தம் ॥ 7 ॥

பதவுரை :—

महाम्भोधितीरे - மஹாம்போதிதீரே = மஹோததி என்ற ஸமுத்திரத்தின் கரையில் விளங்குகிறதாயும் महापापचोरे - மஹாபாபசோரே = பஞ்சமஹா பாதகங்களையும் நாசம் செய்கிறதாயும் मुनीन्द्रानुकूले-முனீந்த்ரா நுகூலே = மஹர்ஷிகள் தபஸ் செய்வதற்கு யோக்யமாயும் (உள்ள) सुगन्धाख्यशैले - ஸுகந்தாக்யசைலே = ஸுகந்த பர்வதத்தில் गुहायां - குஹாயாம் = குகைக்குள் वसन्तं - வஸந்தம் = வாஸம் செய்கிறவனும் स्वभासा - ஸ்வபாஸா = தன்னுடைய ஜ்யோதிஸினுலேயே लसन्तं - லஸந்தம் விளங்குகிறவனும் जनार्तिं - ஜனர்திம் = ப்ராணிகளுடைய பீடையை हरन्तं - ஹரந்தம் = அபஹரிக்கிறவனும் (இருக்கிற) तं गुहं - தம் குஹம் = அந்த குஹனை (ஸுப்ரமண்ய ஸ்வாமியை) श्रयामः - ச்ரயாம: = ஆச்ரயிக்கின்ருேம்.

தாத்பர்யம் :—

ஸமுத்ரக்கரையில் ஸுகந்த சைலம் என்ற ஒரு மலையில் ஓர் அழகான குகைக்குள் ஸுப்ரமண்யஸ்வாமியானவர் வாஸம் செய்கிருர். அந்த மலையோ, அநேக ரிஷிகளுக்கு தபஸ் செய்வதற்கு ரொம்பவும் அநுகூலமாக கந்தமூலங்களாலும் அருவி ஜலத்தாலும் நிறப்பப்பட்டு அழகாக இருந்துவருகிறது. ப்ரம்மஹத்தி, ஸுராபானம்,

Koviloor Digital Library

ஸ்வர்ணஸ்தேயம், குருதல்பகமனம், தத்ஸம்பந்தம் என்ற ஐந்துவிதமான மஹாபாதகங்களும் அந்த மலைக்கு மனிதன் சென்றுவிட்டால் நசித்துவிடும். அதாவது ரொம்பவும் பூஜ்யமான தேசமேயாகும். அந்த மலையின் குஹையில் ஸுப்ரமண்யஸ்வாமி வாஸம் செய்தாலும், குஹைக்குள் தீபம் ஒன்றுமில்லாமலிருக்கும் காலத்தில் கூட, கோடி ஸூர்யன் உதயமானால் எவ்வளவு ப்ரகாசமாகத் தோன்றுமோ, அவ்வளவு ப்ரகாசமாக குஹைக்குள் ஜ்யோதிஸ்ஸானது விளங்கி வருகிறது. இந்த ஆச்சர்யமான விருத்தாந்தமோ மலையின் உச்சி பாகத்தில் போய் ஸேவிக்கும் புண்யவான்களுக்குத்தான் புலப்படும். தர்சனத்திற்குப் போகும் ஜனங்களோ அடிவாரத்திலிருக்கும் ஸ்வாமியை தர்சனம் செய்துவிட்டு வந்துவிடுகிறார்கள். இந்த ச்லோகத்தால் சொல்லப்படும் விஷயமோ அதிரஹஸ்யமானது. இந்த இடத்தில் சென்று தர்சனம் செய்தவர்களுக்கு எவ்விதமான வியாதியும் போய்விடும். ஸகல வ்யாதிகளும் நாசமாகி, பரம ஆரோக்யம் ஏற்படும் என்பதற்கு ப்ரக்ருதத்தில் சொல்லும் தேசம் சென்று தர்சனம் செய்பவர்களுடைய விஷயத்தில் சபதம் கூறலாம். அதில் ஸந்தேஹமே இல்லை.

ஆகையால் அந்த இடத்தில் வாஸம் செய்கிற காரணத்தைக்கொண்டுதான் இந்த மூர்த்திக்கு குஹன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. குஹன் என்ற பதத்தாலேயே ரஹஸ்யமான தத்வம் என்பதுதான் வெளியாகிறது. அவ்விதம் பாஸிக்கும் பகவானை நான் ஆச்ரயிக்கின்றேன்.

Koviloor Digital Library

8. பள்ளியறையின் வர்ணனை.

लसत्स्वर्णगेहे नृणां कामदोहे
सुमस्तोमसंछन्नमाणिक्यमञ्चे ।
समुद्यत्सहस्रार्क तुल्यप्रकाशं
सदा भावये कार्तिकेयं सुरेशम् ॥ ८ ॥

லஸத்ஸ்வர்ணகேஹே ந்ருணாம் காமதோஹே
ஸுமஸ்தோமஸஞ்சந்நமாணிக்யமஞ்சே ।
ஸமுத்யத்ஸஹஸ்ரார்கதுல்யப்ரகாசம்
ஸதாபாவயே கார்திகேயம் ஸுரேசம் ॥ 8 ॥

பதவுரை:—

लसत्स्वर्णगेहे - லஸத்ஸ்வர்ணகேஹே = பாஸிக்கிற தங்கமயமான கர்ப்பக்ரஹத்தில். नृणां - ந்ருணாம் = மனிதர்களுக்கு कामदोहे - காமதோஹே = அபீஷ்டமான பொருளை வர்ஷிக்கிறதாயும் (இருக்கிற) सुमस्तोमसंछन्नमाणिक्यमञ्चे - ஸுமஸ்தோமஸஞ்சந்நமாணிக்யமஞ்சே = நல்ல வாஸனையுள்ள புஷ்பங்களுடைய கூட்டங்களால் நாலாபக்கங்களிலும் மறைத்துக் கட்டப்பட்ட மாணிக்க ரத்னத்தால் இழைத்து விளங்கும் கட்டிலில் समुद्यत्सहस्रार्कतुल्यप्रकाशं - ஸமுத்யத்ஸஹஸ்ரார்க்க துல்யப்ரகாசம் = உதித்த ஆயிரம் ஸூர்யனுடைய ப்ரகாசத்திற்கு ஸமானமான ப்ரபையுடன் கூடினவனுயும் सुरेशं - ஸுரேசம் = தேவர்களுக்கும் ஈசனை कार्तिकेयं - கார்திகேயம் = க்ருத்திகா நக்ஷத்ர தேவதைகளை ஸ்தன்ய பானத்தால் த்ருப்தி செய்துவைத்த ஸுப்ரமண்யக் கடவுளை सदा - ஸதா = எப்பொழுதும் भावये - பாவயே = த்யானம் செய்கிறேன்.

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

திருச்செந்தூர் க்ஷேத்ரத்தில் விளங்கிவரும் ஷண் முகனுடைய பள்ளியறையை ஆசார்யாள் வர்ணிக் கிருர்கள். அந்த பள்ளியறையோ, தங்கமயமான கற்களால் கட்டப்பட்டு, ஒரே ப்ரகாசமாக விளங்கி வருகிறது! மாணிக்க ரத்னத்தால் இழைக்கப்பட்ட அழகானதொரு கட்டிலும் அந்த அறையில் அமைக் கப்பட்டிருக்கிறது. அந்த கட்டிலின நாலாபக்கங்களி லும் தேவலோகத்திலிருந்தும் தினந்தோறும் நல்ல வாஸனையுள்ள புஷ்பங்கள், இந்த்ரன் முதலான தேவர்களால் கொண்டுவரப்பட்டு, சரம் சரமாக அலங்கரிக்கப்பட்டு விளங்கி வருகின்றன. அந்த கூடாரத்திற்குள் அமர்ந்திருக்கும் தங்கவிக்ரஹமாகிய ஷண்முகனைப் பார்த்தாலோ உதய காலத்தில் ஆயிரக் கணக்கான ஸூர்யன் பாஸித்தால் எப்படி இருக் குமோ, அப்படி பகவானுடைய சரீரமானது சிவப்பு வர்ணமாக பாஸிக்கிறது. அந்த ஸந்தர்ப்பத்தில் மனி தர்கள் உள்ளே போகமுடியாது. தேவர்கள்தான் பக வானைப் பூஜிக்கிருர்கள். க்ருத்திகா நக்ஷத்ரதேவதை களும் தன்புத்ரனென்ற வ்யாஜத்தால் உள நுழைந்து உபசாரம் செய்து வருகிருர்கள். அந்த தேவதை களோ துர்கை, லக்ஷ்மீ, ஸரஸ்வதி, பதாகாளீ, ஸாவித்ரீ ராதை யென்று சொல்லப்படுவார்கள். அந்தப் பள்ளி யறை தர்சனம் செய்யவேண்டுமென்ற மனிதன் வெளியில் நின்று கொண்டுதான் தர்சனம் செய்ய வேண்டும். அந்தக் காலத்தில் விடாமல் தர்சனம் செய்கிறவர்களுக்கு அவர்களுடைய ஸகல காமங் களும் பூர்த்தியாகின்றன. அந்த ஸ்வரூபத்தோடு பக வானை நான் எப்பொழுதும் த்யானம் செய்கிறேன்.

Koviloor Digital Library

9. பாதாரவிந்த மஹிமை.

रणद्धम्सके मञ्जुलेऽत्यन्तशोणे
मनोहारिलावण्यपीयूषपूर्णे ।
मनःषट्पदो मे भवक्लेशतप्तः
सदामोदतां स्कन्द ते पादपद्मे ॥ ९ ॥

ரணத்தம்ஸகே மஞ்ஜுளே அத்யந்தசோணே
மனோஹாரிலாவண்யபீயூஷபூர்ணே ।
மந:ஷட்பதோ மே பவக்லேசதப்த:
ஸதாமோததாம் ஸ்கந்த தே பாதபத்மே ॥ 9 ॥

பதவுரை :—

रणद्धम्सके - ரணத்தம்ஸகே = ஸந்திக்கின்ற ஹம்ஸங்களோடு கூடினதாயும் अत्यन्तशोणे-அத்யந்தசோணே = மிகவும் சிவப்பு வர்ணமுள்ளதாயும் मनोहारिलावण्यपीयूषपूर्णे - மனோஹாரிலாவண்யபீயூஷபூர்ணே = மனதை அபஹரிக்கின்ற லாவண்யமென்ற அம்ருதத்தால் நிறைந்ததாயும், मञ्जुले - மஞ்ஜுளே = அழகாயுமுள்ள ते - தே = உன்னுடைய पादपद्मे - பாதபத்மே = பாதங்களாகிற தாமரைப் புஷ்பத்தில் भवक्लेशतप्तः - பவக்லேசதப்த: = ஸம்ஸார தாபத்தால் தவிக்கும்படி செய்யப்பட்ட मे - மே = என்னுடைய मनःषट्पदः - மநஷ்ஷட்பத: = மனஸாகிற வண்டானது हे स्कन्द - ஹே ஸ்கந்த = ஹே ஸுப்ரமண்ய மூர்த்தியே! सदा - ஸதா = எப்பொழுதும் मोदतां - மோததாம் = ஸஞ்சரிக்கும் காரணதால் ஸந்தோஷத்தை யடையட்டும்.

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

செந்தாமரைப் புஷ்பத்தில் ஹம்ஸ பக்ஷிகள் எப்பொழுதும் ஸஞ்சரிக்கும் ஸ்வபாவமுள்ளவைகள். எப்பொழுதும் திவ்யமான சப்தங்களாலேயும் கேழ்க்கிறவர்களுடைய மனதை ஆநந்திக்கச் செய்துகொண்டிருக்கும். அந்த தாமரைப் புஷ்பத்தில் தேனை உண்டு பண்ணுவதற்குக் காரணமான திவ்ய ரஸம் நிறம்பியிருக்கும் காரணத்தால், ஷட்பதம் என்று சொல்லப்பட்ட வண்டுகளும் அந்த செந்தாமரையில் வருகிற வழக்கமுண்டு. செந்தாமரையில் வந்து ரஸத்தை இஷ்டப்படிக் குடித்துவிட்டு, ரொம்பவும் ஸந்தோஷத்துடன் வண்டுகளும் ஜங்காரம் செய்துகொண்டிருக்கும். இதை த்ருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு பரமாசார்யாள் ஸுப்ரமண்யஸ்வாமியினுடைய பாதத்தை உத்ப்ரேக்ஷித்து ஸ்துதிக்கின்றார்கள், பகவானுடைய பாதங்களோ செந்தாமரைப் புஷ்பம்போல் இயற்கையிலேயே சிவந்த நிறத்துடன் விளங்கி வருகிறது. தாமரைப் புஷ்பத்தில் ஹம்ஸ பக்ஷிகள் வஸிப்பதுபோல், ஸுப்ரமண்யஸ்வாமியினுடைய பாதங்களாகிற தாமரைப் புஷ்பத்தில் பரம ஹம்ஸர்கள் என்று சொல்லப்படும் அநேக ஸந்யாஸிகள் எப்பொழுதும் தர்சனம் செய்துகொண்டே அருகில் நின்று வருகிறார்கள். ப்ரஸித்தமான தாமரைப் புஷ்பத்தில் கேவலம் ஹம்ஸ பக்ஷிகள் பானம் செய்கின்றன. ஸுப்ரமண்யஸ்வாமியினுடைய பாதாரவிந்தங்களிலோ பரம ஹம்ஸர்களென்ற ஜீவன் முக்தர்கள் வாஸம் செய்கிறார்கள். ப்ரஸித்தமான தாமரைப் புஷ்பத்திலும் தேனிருக்கும் வழக்கமுண்டு, பகவானுடைய பாத புஷ்பங்களிலோ பார்ப்பவர்களுடைய மனதை அபஹரிக்கக்கூடிய ஸௌந்தர்யமாகிற அம்ருதம் நிரம்பியிருக்கிறது. அந்த தாமரைப் புஷ்பத்தில் வண்டுகள் ரஸத்தை க்ரஹிக்க வந்து வாஸம் செய்வதுபோல் ஆசார்யாள் தன்னு

Koviloor Digital Library

டைய மனதை ஒரு வண்டாக பாவித்து வண்டு களுக்கு ஆறு கால்கள் உள்ளதுபோல், தன் மனதுக் கும் சமம், தமம், திதிக்ஷை, உபரதி, ச்ரத்தா, ஸமாதானம் என்ற ஆறு குணங்கள் நிறைந்திருப்பதால் ஆறு கால் வண்டிற்கு ஸமானமாக ஆகலாம் என்று நினைத்து பகவானுடைய பாதாரவிந்தங்களில் எப்பொழுதும் வாஸம் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கேட் டுக்கொள்கிறார்கள். ஸம்ஸாரமாகிய, காட்டுத் தீயி னால் எப்பொழுதும் தபிக்கும்படி செய்யப்பட்ட என் மனதாகிற வண்டிற்கு உன்னுடைய சரணாரவிந்தங் களில் பானம் செய்வதால் தாபத்திற்கு சாந்தி ஏற் பட்டு பரம ஸந்தோஷத்துடன் ஜீவிக்கும் உன் பாதாரவிந்தத்தின் ஸமீபத்திலோ, பரமஹம்ஸர் களான ஸந்யாஸிகள் எப்பொழுதும் ஸஞ்சாரம் செய்துகொண்டு மஹாவாக்யத்தை உச்சரித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதைக் கேட்பதினாலும் என் மனதிற்கு ஒரு ஸந்தோஷம் ஏற்படக்கூடும். ஆகையால் என் மனதாகிற வண்டானது எப்பொழு தும் உன் சரணாரவிந்தங்களில் வாஸம் செய்யட்டும் என்றும் ஸ்ரீமதாசார்யாள் ப்ரார்த்திக்கின்றார்கள். இத னால், பகவானுடைய பாதஸமீபத்தில் ச்ரவணேந்த்ரி யத்தை மனதுடன் செலுத்தி கவனித்தவர்களுக்கு பகவானுடைய பாதாரவிந்தத்திற்குள், அந்தர் பாவத்தையடைந்த பரமஹம்ஸர்கள் உச்சரித்துக் கொண்டிருக்கும் ப்ரணவ சப்தமும், மஹா வாக்ய த்வனியும் கேட்கலாம் என்பது வெளியாகிறது.

---

10. இடை ப்ரதேச வர்ணனை.

सुवर्णाभदिव्याम्बरैर्भासमानां
क्वणत्किङ्किणीमेखलाशोभमानाम् ।
लसद्धेमपट्टेन विद्योतमानां
कटिं भावये स्कन्द ते दीप्यमानाम् ॥ १० ॥

Koviloor Digital Library

ஸுவர்ணுபதிவ்யாம்பரைர்பாஸமாநாம்
க்வணத்கிங்கிணீ மேகலாசோபமாநாம்।
லஸத்தேமபட்டேந வித்யோதமாநாம்
கடிம் பாவயே ஸ்கந்த தே தீப்யமாநாம் ॥ 10 ॥

பதவுரை :—

हे स्कन्द - ஹே ஸ்கந்த = ஹே! ஸுப்ரமண்யக் கடவுளே! सुवर्णाभदिव्याम्बरैः - ஸுவர்ணுபதிவ்யாம்பரை: = தங்கத்தின் வர்ணத்தோடுகூடின வஸ்த்ரங்களால் மறைக்கப்பட்டு விளங்குகிறதாயும் क्वणत्किङ्किणीमेखलाशोभमानां - க்வணத்கிங்கிணீமேகலாசோபமாஞம் = சப்தித்துக்கொண்டிருக்கும் சலங்கைகளோடுகூடின கடிஸூத்ரத்தால் சோபிக்கிறதாயும் लसद्धेमपट्टेन — லஸத்தேமபட்டேந = வஸ்திரத்திற்குமேல் பாஸிக்கிற தங்கமயமான பட்டத்தால் विद्योतमानां - வித்யோதமாஞம் = பாஸிக்கின்றதாயும் दीप्यमानां - தீப்யமாஞம் ஒருவிதமான அலங்காரம் இல்லாமலும் ஸ்வயமாகவே பாஸிக்கும் ஸ்வபாவமுள்ளதாயும் (உள்ள) ते - தே = உன்னுடைய कटिं - கடிம் = இடுப்பு ப்ரதேசத்தை भावये - பாவயே = த்யானம் செய்கின்றேன்.

தாத்பர்யம் :—

பகவானுடைய இடையானது வர்ணிக்கப்படுகிறது. இடுப்பில் தங்கமயமான ஜரிகையால் அலங்கரிக்கப்பட்ட பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் காரணத்தால் அந்த இடையானது, மிகவும் சோபித்துக்கொண்டேயிருக்கிறது. ஸுக்ஷ்மமான சலங்கைகளால அலங்கரிக்கப்பட்ட தங்கமயமான கடிஸூத்ரம் ஒன்று இடுப்பில் பாஸிக்கின்றது. அதி

Koviloor Digital Library

லுள்ள சலங்கைகளும் எப்பொழுதும் சப்தித்துக் கொண்டே யிருக்கின்றன. அதற்கு மேல் பாகத் தில தங்கமயமான பட்டம் ஒன்று போட்டுக்கொண் டிருப்பதைப் பார்த்தால் சோபையை அளவிடமுடி யாமல் இருந்து வருகிறது. இந்த அலங்காரங்கள் யாதொன்றுமில்லாமலேயே ஸ்வபாவமாகவே அந்த இடுப்பு ப்ரதேசமானது பாஸிக்கும் சக்தியுள்ளது. அவ்விதம் அழகு தங்கிய கடிம் ப்ரதேசத்தை தான் த்யானம் செய்கிறேன் என்று சொல்லுகிறார். स्कन्दर्गतिशोषणयोः (ஸ்கந்தர்கதிசோஷணயோ:) என்ற தாதுவால், தன்னை தர்சனம் செய்யும் பக்த ஜனங்களு டைய பாபங்களை நாசம் செய்து, ப்ரம்மபாவாபத்தி என்ற மோக்ஷத்தைக் கொடுக்கும் வல்லமையுள்ளவர் என்ற அர்த்தமானது ஸ்கந்த: என்ற சப்தத்தால் விளங்குகிறபடியால், அந்த திருநாமத்தோடு கூடின பகவானை எப்பொழுதும் த்யானம் செய்யவேண்டிய தவச்யமாகும். அதை அநுஸரித்துத்தான் பரமாசார் யாளே த்யானம் செய்கிறார்கள். सन्देहो बहुलः (ஸங் தேஹோ பஹுள:) என்ற சாங்தோக்ய ச்ருதியை அநுஸரித்து பகவானை விராட்புருஷனாக வர்ணிக்கும ஸமயத்தில், விச்வரூப தர்சனம் கொடுத்த காரணத் தைக் கொண்டு பகவானுடைய இடுப்பு ப்ரதேசத்தை எங்கும் நிறைந்த ஆகாசமாக வர்ணித்திருப்பதால் ப்ரக்ருதத்திலும் ஸுப்ரமண்யஸ்வாமியினுடைய கடிம் ப்ரதேசத்தை ஆகாச தத்வமாக பாவிக்கவேண்டும் அத ஞல் ஆகாசமானது எவ்விதம் எல்லாவற்றிற்கும் அவ காசத்தைக் கொடுக்க சக்தியுள்ளதோ, அதுபோல் பகவானுடைய இடுப்பு ப்ரதேசமும் தன்னை உபா ஸிக்கும் ஜீவயோகிகளுக்கு ஸகல புருஷார்த்தங்களை யும் அளிக்கும் வல்லமையுள்ளது என்பதும் வெளி யாகிறது.

Koviloor Digital Library

11. பக்தனை ரக்ஷிக்கவேண்டுமென்ற ஆசை.

पुलिन्देशकन्याघनाभोगतुङ्ग-
स्तनालिङ्गनासक्तकाश्मीररागम् ।
नमस्याम्यहं तारकारे तवोरः
स्वभक्तावने सर्वदा सानुरागम् ॥ १० ॥

புலிந்தேசகந்யாகநாபோகதுங்க
ஸ்தனாலிங்கநாஸக்தகாச்மீரராகம் ।
நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர:
ஸ்வபக்தாவநே ஸர்வதாஸாநுராகம் ॥ 11 ॥

பதவுரை :—

हे तारकारे - ஹே தாரகாரே = தாரகாஸுரனுக்கு சத்ருவான ஹே ஸுப்ரமண்யக் கடவுளே! पुलिन्देश ......काश्मीररागम् - புலிந்தேச......காச்மீரராகம் = வேடனுடைய பெண்ணான, வல்லீ என்ற தன் பத்னியினுடைய கடினமாயும், பெரிதாயுமிருக்கும் இரண்டு ஸ்தனங்களையும் ஆலிங்கனம் செய்துகொள்ளும் காரணத்தால், அந்த ஸ்தனத்தில் அலங்கரிக்கப்பட்டுள்ள குங்குமங்கள் தன் மார்பிலும் பட்ட காரணத்தால் சிவப்பான வர்ணத்தோடு கூடினதாயும் सर्वदा-ஸர்வதா = எப்பொழுதும் स्वभक्तावने - ஸ்வபக்தாவநே = தன் பக்தர்களை ரக்ஷிக்கும் விஷயத்தில் सानुरागं - ஸாநுராகம் = உள் பாகத்தில் ஏற்படும் ஆசையினால் வெளியிலும் சிவந்ததுபோல் இருப்பதாயும் (உள்ள) तव - தவ = உன்னுடைய उरः - உர: = மார்பு ப்ரதேசத்தை अहं - அஹம் = நான் नमस्यामि - நமஸ்யாமி = நமஸ்கரிக்கின்றேன்.

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

வேடனென்றும், அல்லது ஜாதியில் குறவனென்றும் ப்ராக்ருத ஜனங்கள் சொல்லும் மனிதனுடைய பெண்ணான வல்லீ என்பவளை ஸுப்ரமண்யஸ்வாமியானவர் பலாத்காரமாக விவாஹம் செய்து கொண்டதாக லோகத்தில் பாமர ஜனங்கள் சொல்லுகிறார்கள். புராண ரீதியாக இந்த வல்லீ என்றவள் உபேந்த்ரனாக அவதாரம் செய்த மஹாவிஷ்ணுவினுடைய பெண் என்று தெரியவருகிறது. மஹாவிஷ்ணுவிற்கு துர்வாஸ மஹர்ஷியினுடைய சாபத்தால் பூலோகத்தில் இந்த வல்லியினுடைய தகப்பனாகப் பிறக்க நேர்ந்தது. அர்ஜுனனோடு பரமேச்வரன் வேடனுடைய வேஷம் பூண்டு போர் செய்தான் என்பது கிராதார்ஜுனீயம் முதலான க்ரந்தங்கள் மூலம் ப்ரஸித்தமானது. அந்த அவஸ்தையில் பரமேச்வரனை வேடனென்று மஹாவிஷ்ணுவானவர் பரிஹாஸம் செய்ததை, சிவபக்தனான துர்வாஸ மஹர்ஷி கோபம் கொண்டு, "அப்படியானால் நீயும் வேடன் தான்" என்று சாபம் கொடுத்தார். மஹாவிஷ்ணுவானவர் இந்த்ரனுக்குத் தம்பியாக உபேந்த்ரன் என்ற பெயருடன் விளங்கிவரும் அவஸ்தையில் இந்த கதையானது நடைபெற்றது. அந்த உபேந்த்ராவதாரத்தில், இந்த வல்லீ-தேவஸேனை இருவர்களும் பெண்களாக விளங்கிவந்தார்கள். துர்வாஸ மஹர்ஷியினுடைய சாபத்திற்குட்பட்டு, குழந்தைகளுடன் பூலோகத்தில் மனிதனாகப் பிறந்தார். அவரைத்தான் குறவன் என்றும், வேடன் என்றும் அறியாத ஜனங்கள் பஹுப்ரகாரமாக சொல்லுகிறார்கள். இது புராண ரீதியாக ஸித்தமானது. வேதம் மூலமாகவோ வல்லீ என்றவள் ப்ரம்மவித்யாரூபிணியான பராசக்தி என்றே தெரியவருகிறது. ஸநத்குமாரஸ்வாமியானவர், நாரத மஹர்ஷி தன்னிடம் வந்து ப்ரம்மவித்யையை தனக்கு உபதேசம் செய்யவேண்டு

Koviloor Digital Library

மெனக் கேட்டபொழுது. நாரதரை அதிகாரி இல்லை என்று உபதேசம் செய்யாமல் தள்ளின தோஷத்தால் "வித்யோபதேசத்திற்கு வந்த ஸத்-சிஷ்யனை தனக்கு சக்தியிருந்தும் நிராகரிக்கும் பக்ஷத்தில் அவன் வேடனாகப் பிறக்கிறான்" विद्यार्थमागतं शिष्यं त्यक्त्वा वनचरोभवत् (வித்யார்தமாகதம் சிஷ்யம் த்யக்த்வா வநசரோபவத்) என்ற ஸ்ம்ருதி ப்ரகாரம் ஸநத்குமாரஸ்வாமியே புளிந்தன் என்று சொல்லப்படும் மனிதனாக பூலோகத்தில் ஜனித்ததாகவும், அவரிடத்தில் விளங்கிவந்த ப்ரம்ம வித்யை அவரிடமிருந்து விலக மனமில்லாமல், அவருடைய பெண் என்ற வ்யாஜத்தால் அவதரித்து வல்லீ என்ற பெயருடன் விளங்கி வருகிறாள் என்றும் வெளியாகிறது. ஆகையால், வல்லீதேவியோ, அவளுடைய தகப்பனாரோ கீழ் ஜாதியில் உதித்தவர்களென்றும் அந்த ஜாதியில் பிறந்த பெண்ணை ப்ராம்மண தர்மத்தை ரக்ஷிக்க வந்த ஸுப்ரமண்யஸ்வாமி தான் எவ்விதம் கல்யாணம் செய்துகொண்டார் என்ற சங்கைக்கும் இடமே இல்லாமலாகிறது.

நிற்க, அந்த வல்லியோடு பள்ளியறையில் ஆலிங்கனாதிகளைச் செய்துகொண்டு போக ஸுகத்தை அநுபவிக்கும் காலத்தில் அவளுடைய மார்பும், ஸுப்ரமண்யஸ்வாமியினுடைய மார்பும் சேருகிற காரணத்தைக் கொண்டு, வல்லியின் மார்பின் குசங்களில் அலங்கரிக்கப்பட்ட குங்குமமும், ஸுப்ரமணியஸ்வாமியினுடைய மார்பில் சிவப்பாகக் காணப்படுகின்றது. அல்லது தன்னுடைய பக்தர்களை எக்காலத்திலும் ரக்ஷிக்கவேண்டுமென்ற கவலை மனதில் அதிகமாக இருக்கும் காரணத்தால், அந்தக் கவலையை ஸூசனை செய்வதற்காக வெளிமார்பிலும் சிவப்பான காந்தி காணப்படுகிறதோ! अनुराग (அநுராகம்) என்றால் 'அபிலாஷை' என்றும் அர்த்தமுண்டு; சிவப்பு வர்ணம் என்றுமொரு அர்த்தமுண்டு. இதனால் பக்த ஜனங்களிடம் ஸுப்ரமண்யஸ்வாமிக்கு ஏற்படும்

Koviloor Digital Library

வாத்ஸல்யம்போல் மற்ற எந்த தேவதைக்கும் ஏற்படாது என்பது ஸித்தமாகிறது.

---

12. கராவலம்பனம்.

विधौ क्लृप्तदण्डान्स्वलीलाधृताण्डान्
निरस्तेभशुण्डान्द्विषत्कालदण्डान् ।
हतेन्द्रारिषण्डाञ्जगत्राणशौण्डान्
सदा ते प्रचण्डाञ्श्रये बाहुदण्डान् ॥ १२ ॥

விதௌ க்லுப்ததண்டாந்ஸ்வலீலாத்ருதாண்டாந்
நிரஸ்தேபசுண்டாந்த்விஷத்காலதண்டாந் ।
ஹதேந்த்ராரிஷண்டாஞ்ஜகத்ராணசௌண்டாந்
ஸதா தே ப்ரசண்டாஞ்ச்ரயே பாஹுதண்டாந் ॥ 12 ॥

பதவுரை :—

हे षण्मुख - ஹே ஷண்முக = ஹே ஆறுமுகக் கடவுளே ! विधौ - விதௌ = ப்ரம்மாவினிடம க्लृप्तदण्डान् - க்லுப்ததண்டாந் = செலுத்தப்பட்ட தண்டனையுடன் கூடினதாயும் स्वलीलाधृताण्डान् - ஸ்வலீலாத்ருதாண்டாந் = தான் விளையாட்டாகவே ஸகலவிதமான அண்டங்களையும் தரிக்கிறதாயும் निरस्तेभशुण्डान् - நிரஸ்தேபசுண்டாந் = யானையினுடைய தும்பிக்கையைப் பிடித்து அதன் திமிரை அடக்கின்தாயும் द्विषत्कालदण्डान् - த்விஷத்காலதண்டாந் = சத்ருவாகும் யமனை த்வம்ஸம் செய்கிறதாயும் हतेन्द्रारिषण्डान् - ஹதேந்த்ராரிஷண்டாந் = இந்த்ரனுக்குச் சத்ருவான சூரபத்மா முதலான அஸுரர்களைக் கொன்றதாயும் जगत्राणशौण्डान् - ஜகத்ராண

Koviloor Digital Library

சௌண்டாங் = ஜகத்தை ரக்ஷிக்கும் விஷயத்தில் மிகவும் ஸாமர்த்யமுள்ளதாயும் प्रचण्डान् - ப்ரசண்டாங் = சத்ருக்களுக்கு பயத்தைக் கொடுக்கிறதாயும் (உள்ள) ते - தே = உன்னுடைய बाहुदण्डान् - பாஹுதண்டாங் = தண்டாகாரமான பன்னிரண்டு கைகளையும் सदा - ஸதா = எப்பொழுதும் श्रये - ச்ரயே = நான் ஆச்ரயிக்கின்றேன்.

தாத்பர்யம் :—

ஸுப்ரமண்யஸ்வாமியானவர் தன்னுடைய பால்யமான பருவத்தில் வீரபாஹு முதலான நவ வீரர்கள் என்ற தன்னுடைய ப்ராதாக்களோடு மஹா கைலாஸத்தின் வெளிவாசலில் விளையாடிக்கொண்டிருந்தார். அந்த ஸந்தர்ப்பத்தில், ப்ரம்மாவானவர் ஸுப்ரமண்யமூர்த்தியை லக்ஷ்யம் செய்யாமலேயே பரமேச்வரனை தர்சனம் செய்யும் உத்தேசத்துடன், கைலாஸத்திற்குள் சென்றார். தன்னைக் கேழ்க்காமல் கைலாஸத்திற்குள் சென்ற ப்ரம்மாவினிடம் ஸுப்ரமண்யஸ்வாமிக்குப் பெரிய கோபம் ஏற்பட்டு விட்டது. ப்ரம்மா, பரமேச்வரனை தர்சனம் செய்து விட்டு வெளியில் வரும்பொழுது, ப்ரம்மாவின் கைகளைத் தன் கைகளால் பிடித்துக்கொண்டு "யாருடைய உத்தரவின்பேரில் நீர் கைலாஸத்திற்குள் சென்றீர்?" என்று கடினமான வார்த்தையால் பரம்மாவை அவமதித்துப் பேசினார்.

ப்ரம்மாவோ "நீ யார் என்னைக் கேழ்ப்பது?" என்றெண்ணி "உன்னைக்கேட்டுத்தான் நான் உள்ளே போகவேண்டுமென்பதில்லை. நீ குழந்தை! உனக்கு என்ன தெரியும்?" என்று ப்ரம்மா உத்தண்டமாகப் பேசினதற்கு, ஸுப்ரமண்யஸ்வாமி மிகுந்த கோபத்தை அடைந்து ப்ரம்மாவை "ப்ரணவத்தின்

Koviloor Digital Library

ரஹஸ்யம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டு ப்ரம்மாவை அவமதித்தார் என்ற வ்ருத்தமானது முன்பு 10-வது ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு இதன் விஸ்தாரத்தைத் தெரிந்துகொள்ளவும்.

அவ்விதமே தான் மஹாபராக்ரமசாலியாக இருக்கும் காரணத்தால் ப்ரம்மாண்டங்களையும், ப்ரம்மாண்டபித்துக்கு வெளியிலே உள்ள லோகங்களையும் தான் பரிபாலனம் செய்வதை ஒரு விளையாட்டாகவே பாவித்து அவ்விதம் நீதிக்கு விரோதமன்னியில் சக்தியுடன் கூடின கைகளால், ஸுப்ரமண்யக்கடவுள் அலங்கரிக்கப்பட்டவர்.

தவிரவும், யானையின் மதத்தை அடக்கும் சக்தியும் ஸுப்ரமண்யஸ்வாமியின் கைகளுக்கு இயற்கையாகவே ஏற்பட்டது. திருத்தணி என்ற க்ஷேத்ரத்தில் வல்லீ என்ற ஒரு ஸுந்தரியான கன்னிகையை தான் பரிணயம் செய்துகொண்டார் என்பது லோக ப்ரஸித்தமான கதையாகும். அந்த வல்லீ என்றவளை கீழ் ஜாதியில் பிறந்தவளாக சிலர் நினைப்பார்கள். அவ்விதம் நினைப்பது மிகவும் ஸாஹஸமாகும். ஸுந்தர வல்லீ என்றும், ஆநந்த வல்லீ என்றும் இரண்டு குமாரிகள், தேவேந்த்ரனுக்கு தபோமஹிமையினால் கிடைத்த புத்ரிகளாக ஆவார்கள். அந்த கன்னிகைகள் ப்ரம்மசர்ய வ்ரதத்துடன் கூடிக்கொண்டு ஞான நிஷ்டையில் திருப்தி உள்ளவர்களாக இருந்து வந்தார்கள். பரமேச்வரனிடம் புத்ரனாக அவதரித்த ஷண்முகன் என்ற ப்ரக்ருதமான தைவமோ அந்த ஸுந்தரவல்லீ ஆநந்த வல்லீ என்ற இரண்டுவிதமான கன்னிகைகளுக்கு மஹா கைலாஸத்தில் சிவதீர்த்த கரையில், ஷடக்ஷரீ என்ற மஹாமந்த்ரத்தின் ரஹஸ்யத்தை உபதேசித்த ஸத்குருவாக ஆவார். உபதேசம் ஆனபின்பு, ஸுப்ரமண்யஸ்வாமியானவர் அந்த இரண்டு கன்னிகைகளையும் பார்த்து எனக்கு குருதக்ஷிணை கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தித்

Koviloor Digital Library

தார். அவர்களும், आचार्याय प्रियं धनमाहृत्य (ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய) என்ற ப்ரமாண வாக்யத்தை அநுஸரித்து தனக்கு எது ப்ரியமான வஸ்துவோ அதைக் கேட்டுக்கொள்ளலாம், தருகிறோம் என்று சொன்னார்கள். ஸுப்ரமணியக் கடவுளோ அவர்களைப் பார்த்து "நீங்கள் இருவர்களும் எனக்கு பார்யையாக ஆகவேண்டும். அதுதான் எனக்கு நீங்கள் கொடுக்கும் குருதக்ஷிணையாக ஆகவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். ஆனால் இந்த இரண்டு கன்னிகைகளோ ப்ரம்மசர்யத்துடன் இருந்துவர வேண்டுமென்ற ப்ரதிக்ஞையைக் கைக்கொண்டார்கள் என்று முன்பே சொல்லப்பட்டது. அதற்கு விரோதமாக தனது குருதக்ஷிணையைக் கேட்கும் பொழுது மிகவும் வ்ரதபங்கம் வந்துவிடுமே என்ற கவலையை அடைந்தார்கள். ஆனால், ஆநந்தவல்லி என்பவளோ गुरोर्वचनमौषधं (குரோர்வசநமௌஷதம்) என்ற வாக்யத்தை அநுஸரித்து, குருவினுடைய அபிப்ராயத்தை நிறைவேற்ற எந்த நியமத்துக்கும் லோபம் வந்தாலும் ஸம்மதிக்கலாம். அது தோஷமாகாது என்ற தீர்மானத்துடன் ஸுப்ரமண்யஸ்வாமியின் அபிப்ராய ப்ரகாரம் ஸம்மதித்துவிட்டாள். அவளைத்தான் ஸுவர்ணவல்லீ என்றும் தேவஸேனை என்றும் சொல்லுவார்கள். சூரபத்மாவைக் கொன்றவுடன் ஸ்ரீ ஜயந்திபுரம் என்ற க்ஷேத்ரத்தில் ஸுப்ரமண்யஸ்வாமியானவர் ஜயக் கொண்டாட்டத்தை நடத்திவிட்டு, ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திற்கு அருகிலுள்ள பராசலம என்னும் க்ஷேத்ரத்தில், தேவர்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி பூர்ண ஸாந்நித்யத்துடன் விளங்கி வரும்பொழுது, தேவேந்த்ரனே விதிவத்தாக அந்த ஆநந்தவல்லி என்று சொல்லப்பட்ட தேவஸேனையை விவாஹம் செய்துகொடுத்தான். அதுவும் ஸ்காந்த மஹாபுராணத்தில் ப்ரஸித்தமானது. வருஷந்தோறும் பராசல க்ஷேத்ரத்தில் நடக்கும் பங்குனி உத்திர உத்ஸவகாலத்தில் நடைபெற்றுவருகி

Koviloor Digital Library

கிற இந்த லீலேயானது இப்பவும் ப்ரஸித்தமாக நடைபெறுகிறது.

அந்த ஸுந்தரவல்லி என்ற கன்னிகையோ தன்னுடைய ப்ரம்மசர்ய வ்ரதத்திற்கு பங்கம் வரும் என்பதை உத்தேசித்து தன் குருவான பகவானுடைய வார்த்தையை உல்லங்கனம் செய்துவிட்டாள்.

गुरोर्वचनमुल्लङ्घ्य यो वा नियममाचरेत् ।
हीनजातौ जनित्वातु दुःखमाप्नोति पूरुषः ॥

குரோர்வசநமுல்லங்க்ய யோ வா நியமமாசரேத் ।
ஹீநஜாதௌ ஜநித்வாது துக்கமாப்நோதி பூருஷ: ॥

என்ற மநுவசன ப்ரகாரம் குருவசனத்தை உல்லங்கனம் செய்து அதற்கு விரோதமாக, தான் ஸங்கல்பித்த வ்ரதத்தை ரக்ஷிக்கவேண்டுமென்று விரும்புகிற புருஷனுக்கு தானிருக்கும் ஜன்மாவிற்கும் கீழான ஜன்மாவில் பிறப்பு ஏற்பட்டு, துக்காநுபவம்தான் அதிகமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் இந்த ஸுந்தரவல்லீ என்றவளும் அந்தவிதமான அபராதத்தைச் செய்த காரணத்தால் திருத்தணி க்ஷேத்ரத்தில் சோளம், கம்பு முதலான தான்யங்களே சாகுபடி செய்துவரும் ஒரு ஸம்ஸாரியான கீழ் ஜாதி புருஷனுடைய பெண்ணுக பிறந்தாள். ஆகிலும் முன் ஜன்மாவில் ஏற்பட்ட ஞானத்திற்குக் குறைவில்லே. மஹா கைலாஸத்தில் சிவதீர்த்தக்கரையில், ஸுப்ரமண்ய ஸ்வாமியினுல் தனக்கு உபதேசிக்கப்பட்ட ஷடக்ஷரீ மஹாமந்த்ரத்தின் ஸ்மரணமும் தன்னிடம் இருந்து வந்ததால்தான் ஸத்குருவானஸுப்ரமண்யஸ்வாமிக்கு செய்த அபசாரத்தால் தனக்கு இவ்விதமான துர்க்கதி வந்ததே என்று நிஜேத்து, வருத்தத்துடன் அந்த பாபத்தினின்றும் விமோசனத்தை அடைய எப்பொழுதும் அந்த பகவானேயே பர்த்தாவாக அடைய

Koviloor Digital Library

வேண்டுமென்ற உத்தேசத்துடன் தினந்தோறும் காலையில் எழுந்திருந்து ஸ்நானம் முதலானவைகளை முடித்துக்கொண்டு, ஷடக்ஷரீ மஹாமந்த்ரத்தை ஜபம் செய்த பிற்பாடுதான் தன்னுடைய தகப்பனால் ஏவப்பட்ட கார்யங்களை செய்கிற வழக்கமுள்ளவளாக இருந்து வந்தாள். அவளுடைய தகப்பனுருக்கோ ஏராளமான புஞ்சை நிலங்களுண்டு. அவைகளில் சோளம், கம்பு, தினை கோதுமை முதலான பயிர்களை சாகுபடி செய்து அதிலிருந்தும் அவன் ஜீவிக்கும் வழக்கமுள்ளவன். இந்தப் பெண்ணும் தான் அடிக்கடி அந்த தோட்டங்களுக்குச் சென்று தான்யங்களை ரக்ஷித்து வரும் ஸ்வபாவமுள்ளவள். அவ்விதம் தோட்டத்தில் பயிர்களை ரக்ஷித்துக்கொண்டு வரும் ஸந்தர்ப்பத்தில் ஷண்முகப்பெருமான், இவளுடைய ஜன்மாவை ஸபலமாகச் செய்யும் உத்தேசத்துடன், இவளை பரிணயம் செய்துகொள்ள வேண்டுமென்று இச்சித்து எதிரில் ப்ரத்யக்ஷமானார். ஆகிலும் அந்தப் பெண்ணானவள் தாய் தகப்பனுக்குப் பயந்துகொண்டு இந்த குமார ஸ்வாமியை தன் பர்த்தாவாக வஹிக்க எண்ணமில்லாதவளாகவே இருந்தாள். ஆகிலும் பகவான் அதை விடாமல், தன்னுடைய தமையனை மஹா கணபதியை நினைக்கும்பொழுது அந்த மஹா கணபதியானவர் பெரிய மதம் பிடித்த யானையின் உருவம்கொண்டு அந்தப் பெண்ணுக்கு பயத்தைச் செய்தார். அந்த வல்லி என்ற பெண்ணும் பயத்தால் தானாகவே ஷண்முகனை ஆச்ரயித்து ஆலிங்கனம் செய்துவிட்டாள். அந்த ஸந்தர்ப்பத்தில் அந்த யானை உருவம் கொண்ட மஹா கணபதியினுடைய மதத்தை அடக்க யாருக்கும் சக்தியில்லாமல் போகவே, லோகத்திற்கே அதனால் பெரிய தீங்கு ஏற்படுமோ என்ற எண்ணத்தால் ஸுப்ரமண்யஸ்வாமியும் தனது கைகளால் அதன் தும்பிக்கையைப் பிடித்துக்கொண்டு அதன் மதத்தை அடக்கினார். அதனால் இந்த வல்லீ தேவியோ முன்பு எந்த ஷண்முகபெருமானிடம் தான்

Koviloor Digital Library

ஷடக்ஷரீ உபதேசம் செய்துகொண்டாளோ அந்தப் பரம்பொருள்தான் இந்த ப்ரபு என்று தீர்மானித்து அந்த குமாரஸ்வாமியைக் கல்யாணம் செய்து கொள்வதில் மனமுள்ளவளாக ஆகிவிட்டாள். பிறகு க்ரமமாக கல்யாணமும் நடைபெற்றது, அந்த ஸந்தர்ப்பத்தில் யானையின் மதத்தை குமரன் அடக்கினுர் என்றதை ஸூசிப்பிக்க निरस्तेभशुण्डान् (நிரஸ்தேப சுண்டான்) என்ற பதமானது ப்ரக்ருத ச்லோகத்தில் ஏற்பட்டது என்பதை அறியவும்.

ஸ்காந்த மஹாபுராணமானது ஸுப்ரமண்யக் கடவுளின் பெருமையைச் சொல்வதற்காக ஏற்பட்டது. அதில் மஹாபுராணம், உபபுராணம் என்று இரண்டுப்ரகாரங்கள் உண்டு. மஹா புராணத்திலோ, உப புராணத்திலோ ஸுப்ரமண்யஸ்வாமியினுடைய சரித்ரமானது ஒரே ரூபமாகத்தான் இருக்கும் என்ற நியமும் இல்லை. ஒவ்வொரு ப்ரகாரமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கலாம். கதா பாகம் வேறுபட்டிருப்பது என்பதை நினைக்காமல் அதன் தத்வத்தை க்ரஹிப்பதிலேயே மனம் செல்லவேண்டும். அதனுல் முன் பின் விரோதம் உள்ளதோ என்ற சங்கைக்கு இடமே இல்லை. அவ்விதமே, ஸர்வ ப்ராணிகளுக்கும் சத்ருவான காலனையும், இந்த ஸுப்ரமண்யஸ்வாமிதான் ஸம்ஹாரம் செய்தவர். மார்க்கண்டேயனை ரக்ஷிப்பதற்காக பரமேச்வரன் காலனை ஜயித்தார் என்ற கதை மார்க்கண்டேய புராணம் முதலியவைகளில் ப்ரஸித்தமானுலும், அந்த பரமேச்வரனும் இந்த ஸுப்ரமண்யக் கடவுள் மூலமாகத்தான் காலனை ஜயித்தார் என்பதானது ஸ்கந்தபுராணத்தில் ப்ரஸித்தமாக உள்ளது. ஆகையால் ஷண்முகனை ஆராதிப்பவர்களுக்கு ம்ருத்யு பயம் இல்லை என்பது வெளியாகிறது. இந்த்ரன் முதலான தேவர்களுக்கு சத்ருவான சூரபத்மா தாரகாஸுரன், ஸிம்மவக்த்ரன் என்றவர்களை, ஸுப்ரமணியக் கடவுள்தான் கொன்ருர் என்ப

Koviloor Digital Library

தும் ப்ரஸித்தமானது. ஜகத்தை ரக்ஷிக்கும் விஷயத்திலோ, ஸுப்ரமண்யமூர்த்தியின் பாஹுபலம்தான் முக்ய காரணமாகும். சத்ருக்கள் கிட்ட அண்ட முடியாத பராக்ரமத்தோடுகூடினவைகள் முருகனின் புஜதண்டங்கள். அவ்விதமான குமாரஸ்வாமியினுடைய தண்டாகாரமான புஜங்களை நான் ஆச்ரயிக்கிறேன். அதாவது, எனக்கு அந்த ப்ரபுவானவர் கைகொடுத்து ரக்ஷிக்கவேண்டும் என்ற ப்ரார்த்தனையே இதன் தாத்பர்யமாகும்.

---

13. நிருபமான ஆறுமுகங்கள்.

सदा शारदाः षण्मृगाङ्का यदि स्युः
समुद्यन्त एव स्थिताश्चेत्समन्तात् ।
सदा पूर्णबिम्बाः कलङ्कैश्च हीना-
स्तदा त्वन्मुखानां ब्रुवे स्कन्द साम्यम् ॥ १३ ॥

ஸதா சாரதா: ஷண்ம்ருகாங்கா யதி ஸ்யு:
ஸமுத்யந்த ஏவ ஸ்திதாச்சைத்ஸமந்தாத் ।
ஸதா பூர்ணபிம்பா: கலங்கைச்ச ஹீநா:
ததா த்வந்முகாநாம் ப்ருவே ஸ்கந்த ஸாம்யம்
॥ 13 ॥

பதவுரை :—

हे स्कन्द - ஹே ஸ்கந்த ! = ஹே ஸுப்ரமண்ய மூர்த்தியே ! सदा - ஸதா = எப்பொழுதும் शारदाः - சாரதா: = சரத்காலத்திலுள்ளதாயும் षण्मृगाङ्काः - ஷண்ம்ருகாங்கா: = ஆறுவிதமான களங்கத்தோடு கூடினதாயும் (இருக்கும்) पूर्णबिम्बाः - பூர்ணபிம்பா: = பரிபூர்ணமான

Koviloor Digital Library

சந்த்ரமண்டலங்கள் समन्तात् - ஸமந்தாத் = நாலா பக்கங்களிலும் सदा - ஸதா = எப்பொழுதும் समुद्यन्त एव - ஸமுத்யந்த ஏவ = ப்ரகாசிக்கிறதாகவே (இருப்பதோடும் கூட) यदिस्युः - யதிஸ்யு: = இருக்குமேயானல் तदा - ததா = அப்பொழுது त्वन्मुखानां - த்வந்முகாநாம் = கஸ்தூரி திலகத்தால் அலங்கரிக்கப்பட்ட உன் முகங்களுக்கு साम्यं - ஸாம்யம் = உபமானத்தை ब्रुवे - ப்ருவே = சொல்லுவேன் तथा - ததா = அப்படியே पूर्णबिम्बाः - பூர்ணபிம்பா: = சந்த்ரமண்டலங்கள் कलङ्कैश्च - கலங்கைச்ச = களங்கங்களால் हीनाः - ஹீநா: = விடுபட்டவைகளாக सदा - ஸதா = எப்பொழுதும் स्थिताश्चेत् - ஸ்திதாச்சேத் = இருக்குமேயானல் तदा - ததா = அப்பொழுது त्वन्मुखानां - த்வந்முகாநாம் = திலகமில்லாததான உன் முகங்களுக்கு साम्यं - ஸாம்யம் = உபமானத்தை ब्रुवे - ப்ருவே = சொல்லுவேன்!

தாத்பர்யம் :—

ஸுப்ரமண்ய மூர்த்தியினுடைய ஆறு முகங்களுக்கும் எதை உதாஹரணமாகச் சொல்லலாம் என்பதை ஆசார்யாள் ஆலோஜிக்கின்ருர்கள். முருகனின் ஆறு முகங்களும் சில ஸமயம் கஸ்தூரி திலகங்களால் அலங்கரிக்கப்பட்டுவருகின்றன. அந்த ஸமயத்தில் பார்க்கும்பொழுது களங்கத்தோடு கூடின சந்த்ரனை உபமானமாகச் சொல்லலாம் என்று நினைத்தாலோ, சந்த்ரனுடைய நடுவில் களங்கமிருந்தாலும், சந்த்ரன் ஒன்ருனதால் ஆறுவிதமான சந்த்ரன இருந்தாலல்லவா மேற்சொன்ன ஸ்வாமியின் முகங்களுக்கு உதாஹரணமாகச் சொல்லலாம்! அப்படியில்லாததால் அந்த முகங்களுக்கு அந்த முகங்களே உதாஹரணமாகவேண்டுமென்னியில், மற்ருென்றை உதாஹரண

Koviloor Digital Library

மாகச் சொல்லமுடியாது. திலகமில்லாத காலத்தில் ஷண்முகனுடைய முகங்களைப் பார்த்தாலோ களங்கமில்லாத சந்த்ரனை உதாஹரணமாகச் சொன்னால் சொல்லலாம். களங்கமில்லாத சந்த்ரனோ கிடையாது. ஆறு சந்த்ரங்கள் என்பதும் இல்லை. அப்படி இருக்கும்பொழுது ஸுப்ரமண்யமூர்த்தியின் முகங்களுக்கு எந்த வஸ்துவை உபமானமாக எந்த கவிதான் எப்படித்தான் சொல்லமுடியும்? ஆகையால் நிருபமான தத்வம் என்பது வெளியாகிறது.

---

14. முகாரவிந்த வர்ணனை.

स्फुरन्मन्दहासैः सहंसानि चञ्च-
त्कटाक्षावलीभृङ्गसंघोज्ज्वलानि ।
सुधास्यन्दिबिम्बाधराणीशसूनो
तवालोकये षण्मुखाम्भोरुहाणि ॥ १४ ॥

ஸ்புரந்மந்தஹாஸை: ஸஹம்ஸாநி சஞ்சத்
கடாக்ஷாவலீப்ருங்கஸம்கோஜ்ஜ்வலாநி ।
ஸுதாஸ்யந்திபிம்பாதராணீசஸூநோ
தவாலோகயே ஷண்முகாம்போருஹாணி ॥ 14 ॥

பதவுரை :—

हे ईश सूनो - ஹே ஈச ஸூநோ = ஹே பரமேச்வரனுடைய புத்ரனான ஷண்முகக் கடவுளே! स्फुरन्मन्दहासैः - ஸ்புரந்மந்தஹாஸை: = ஜ்வலிக்கிற புன்சிரிப்புகளால் सहंसानि - ஸஹம்ஸாநி = ஹம்ஸங்களோடு கூடினவைகளாயும் चञ्चत्कटाक्षावलीभृङ्गसंघोज्ज्वलानि - சஞ்சத்

Koviloor Digital Library

கடாக்ஷாவலீப்ருங்கஸம்தோஜ்ஜ்வலாநி = எப்பொழுதும் சலித்துக்கொண்டிருக்கும் கடைக்கண் பார்வையினுடைய கூட்டங்களாகிற வண்டுகளின் வரிசைகளால் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறவைகளாயும் सुधास्यन्दि बिंबाधराणि - ஸுதாஸ்யந்தி பிம்பாதராணி = அம்ருத ப்ரவாஹத்தை பெருகவிட்டுக்கொண்டிருக்கும் அதர பிம்பங்களுடன் கூடினவைகளாயும் (விளங்குகிற) तव - தவ = உன்னுடைய षण्मुखांभोरुहाणि - ஷண்முகாம்போருஹாணி = ஆறுமுகங்களாகிற தாமரைப் புஷ்பங்களை अवलोकये - அவலோகயே = பார்த்தேன்.

தாத்பர்யம் :—

ஹே ஆறுமுகமே! உன்னுடைய முகங்களுக்கு உதாஹரணமும் இல்லை என்று சொன்னேன்; அகப்பட்டுவிட்டது. ஆறு தாமரைப் புஷ்பங்களையும் உன் ஆறுமுகங்களுக்கு உதாஹரணமாகச் சொல்லலாம். உன் முகத்தில் விளங்கும் புன்சிரிப்புக்கள் தாமரைப் புஷ்பத்தில் ஸஞ்சரிக்கும் ஹம்ஸ பக்ஷிகளோ என்று தோன்றுகிறது. எப்பொழுதும் சலித்துக்கொண்டிருக்கும் கடைக்கண் பார்வைகளோ தாமரைப் புஷ்பத்தில் தேனைக் க்ரஹிக்கவந்த ஆறுகால் வண்டுகளோ என்றும் தோன்றுகிறது. அதரபிம்பத்தைப் பார்த்தாலோ, அம்ருதத்தை ப்ரவாஹிக்கும் கிஞ்சல்கங்களோ என்று தோன்றுகிறது. ஆகையால் உன்னுடைய முகங்களுக்கு பரிபூர்ணமான த்ருஷ்டாந்தம் தாமரைப் புஷ்பங்களே ஆகும். இவ்விதம் உன்னுடைய முகாரவிந்தங்களை தயானம் செய்பவர்களுக்கு உன்னுடைய ஆபிமுக்யம் ஏற்பட்டு அவருடைய ஜன்மா ஸபலமாகும் என்பதில் ஆக்ஷேபணையே இல்லை.

Koviloor Digital Library

15. கடாக்ஷவீக்ஷண மஹிமை.

विशालेषु कर्णान्तदीर्घेष्वजस्रं
दयास्यन्दिषु द्वादशस्वीक्षणेषु ।
मयीषत्कटाक्षः सकृत्पातितश्चे-
द्भवेत्ते दयाशील का नाम हानिः ॥ १५ ॥

விசாலேஷு கர்ணாந்ததீர்கேஷ்வஜஸ்ரம்
தயாஸ்யந்திஷு த்வாதசஸ்வீக்ஷணேஷு ।
மயீஷத்கடாக்ஷ: ஸக்ருத்பாதிதச்சே-
த்பவேத்தே தயாசீல கா நாம ஹாநி: ॥ 15 ॥

பதவுரை :—

हे दयाशील - ஹே தயாசீல = ஹே க்ருபாநிதியான ஸுப்ரஹ்மண்யமூர்த்தியே ! विशालेषु - விசாலேஷு = விஸ்தீர்ணமாயும் कर्णान्तदीर्घेषु - கர்ணாந்ததீர்கேஷு = காதின் மூலபாகம்வரை நீண்டதாயும் अजस्रं - அஜஸ்ரம் = எப்பொழுதும் दयास्यन्दिषु - தயாஸ்யந்திஷு = கருணையை வஹிக்கிறதாயும் (உள்ள) द्वादशसु - த்வாதசஸு = பன்னிரண்டு ईक्षणेषु - ஈக்ஷணேஷு = (உன்) நேத்ரங்களுக்குள் ईषत्कटाक्षः - ஈஷத்கடாக்ஷ: = ஒரு அல்பமான கடாக்ஷமானது मयि - மயி = என்னிடத்தில் सकृत् - ஸக்ருத் = ஒரு தடவை पातित - பாதித = விழுந்ததாக भवेत् चेत् - பவேத் சேத் = ஆகுமேயானால் ते - தே = உனக்கு का नाम - கா நாம = என்ன हानिः - ஹாநி: = குறைவானது भवेत् - பவேத் = ஏற்படும்?

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

ஹே ஸ்வாமின்! உன்னுடைய பன்னிரண்டு நேத்ரங்களும் எப்பொழுதும் கருணையை வர்ஷித்துக் கொண்டு, காதின் மூலபாகம்வரை பரிணமித்து விஸ்தாரமாக விளங்கி வருகின்றன. அவைகள் எப்பொழுதும் கருணையையே வர்ஷித்துக்கொண்டு வருகின்றன. அந்த பன்னிரண்டுவிதமான கடாக்ஷங்களாலும் ज्ञानं च सत्यं च शमः श्रुतं च अमात्सर्यं ह्रीः तितिक्षा अनसूया यज्ञश्च दानंश्च दमः धृतिश्च एते व्रता द्वादशः ब्राह्मणस्य ॥ ஞானம் ச ஸத்யம் ச சம: ச்ருதம் ச அமாத்ஸர்யம் ஹ்ரீ திதிக்ஷா அநஸூயா யக்ஞச்ச தானம்ச்ச தம: தம: த்ருதிச்ச ஏதே வ்ரதா த்வாதச:ப்ராஹ்மணஸ்ய॥ என்ற மஹாபாரத வாக்யத்தை யநுஸரித்து மோக்ஷ ஸாதனமான ஆத்மஞானம், ஸத்யவசனம், மனோநிக்ரஹம், வேதாந்த விசாரம், பொறுமையின்மை, அதர்மத்தில் லஜ்ஜை, ஸீதோஷ்ணாதிகளை ஸஹிப்பது, குணமுள்ள இடத்தில் தோஷாரோபணம் செய்யாமலிருப்பது, யாகம், ஸத்பாத்ர தானம், இந்த்ரிய நிக்ரஹம், ஸத்கர்மாவில் தைர்யம், இந்த 12 விதமான ப்ரம்மநிஷ்டர்களுடைய கல்யாண குணங்களை தன் பக்தனிடத்தில் வர்ஷிக்கும் மஹிமை யுள்ளவைகள் என்று அந்த பன்னிரண்டு நேத்ரங்களையும் சாஸ்த்ரமானது வர்ணிக்கின்றது. அவ்விதமான கடாக்ஷங்களுக்குள் என்னிடத்திலும் அல்ப கடாக்ஷம் விழுந்தால் நான் க்ருதார்த்தனாக ஆகமாட்டேனா! தங்களுக்கு அதனால் என்ன ஹானி ஏற்படும்! ஆகையால் கருணையுடன் என்னை கடாக்ஷித்து ஸகல விதமான ரோகங்களிலிருந்தும் விடுபட்டவனாகச் செய்து ரக்ஷிக்கவேண்டுமாக நான் வேண்டிக்கொள்கிறேன்.

Koviloor Digital Library

KOVILOON ANDAVAR
A. No. 28606
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

ஸ்ரீ ஷண்முகன்

திருச்செந்தூர்

षड्वक्त्रं द्वादशभुजं त्रिपञ्चनयनपङ्कजम्
स्मेरवक्त्रं उदाराङ्गं विचित्रमकुटोज्ज्वलम् ।
विराजमानं रत्नाढ्य दिव्यसिंहासनोत्तमे
षडक्षरी मन्त्रसारं सुब्रह्मण्यमुपास्महे ॥

Koviloor Digital Library

16. மஹாவாக்யங்கள் ஆறுமுகங்களாக பாஸிக்கின்றன.

सुताङ्गोद्भवो मेऽसि जीवेति षड्धा
जपन्मन्त्रमीशो मुदा जिघ्रते यान् ।
जगद्भारभृद्भ्यो जगन्नाथ तेभ्यः
किरीटोज्ज्वलेभ्यो नमो मस्तकेभ्यः ॥ १६ ॥

ஸுதாங்கோத்பவோ மேஸி ஜீவேதி ஷட்தா
ஜபந்மந்த்ரமீச: முதா ஜிக்ரதே யாந் ।
ஜகத்பாரப்ருத்பயோ ஜகந்நாத தேப்ய:
கிரீடோஜ்ஜ்வலேப்யோ நமோ மஸ்தகேப்ய: ॥16॥

பதவுரை :—

हे जगन्नाथ - ஹே ஜகந்நாத = ஸர்வலோகத்திற்கும் அதிபதியான ஹே ப்ரபோ ! ईशः - ஈச: = உன் பிதாவான பரமேச்வரன் "हे सुत - ஹே ஸுத = ஹே குழந்தாய் मे - மே = என்னுடைய अङ्गोद्भवः - அங்கோத்பவ: = சரீரத்தினின்றும் உண்டானவனாக असि - அஸி = ஆகிறாய் जीव - ஜீவ = தீர்க்காயுளுடனிருக்கவேண்டும்" इति - இதி = என்று षड्धा - ஷட்தா = ஆறு தடவை मन्त्रं जपन् - மந்த்ரம் ஜபந் = மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டு यान् - யாந் = எந்தத் தலைகளை मुदा - முதா = ஸந்தோஷத்தோடு जिघ्रते - ஜிக்ரதே = உச்சிமுகர்ந்து பார்க்கிறாரோ जगद्भारभृद्भ्यः - ஜகத்பாரப்ருத்பய: = ப்ராணிகளுடைய யோகக்ஷேமபாரத்தை வஹிக்கின்றவைகளாயும் किरीटोज्ज्वलेभ्यः - கிரீடோஜ்ஜ்வலேப்ய: = நவரத்னமயமான கிரீடங்களால் விளங்கு

Koviloor Digital Library

கிறத்தாயுமுள்ள तेभ्यः - தேப்ய: = அந்த मस्तकेभ्यः - மஸ்தகேப்ய: = சிரஸ்ஸுகளின் பொருட்டு नमः - நம: = நமஸ்காரம்.

தாத்பர்யம் :—

आत्मावै पुत्रनामासि (ஆத்மாவை புத்ரநாமாஸி) என்ற ச்ருதியினாலும் अङ्गादङ्गात्संभवसि हृदयादधिजायसे (அங்காதங்காத்ஸம்பவஸி ஹ்ருதயாததிஜாயஸே) என்ற ச்ருதிகளாலும் புத்ரனானவன் பிதாவினுடைய சரீரத்திலுள்ள ஸகல அவயவங்களுக்கும் ஸமானமான அவயவங்களோடு கூடவே உண்டாகிறான் என்று தெரிகிறது. அதை யனுஸரித்து பரமேச்வரனும் ஆறுமுகக் கடவுள் குழந்தையாக இருக்குங் காலத்தில் தன் மடியில் அவரை தூக்கி வைத்துக்கொண்டு ஒவ்வொரு முகத்தையும் பார்த்து "ஹே குழந்தாய்! நீ என்னுடைய அங்கத்திலிருந்து உண்டானவனாகிறாய். அநேக காலம் ஜீவிக்கவேண்டு"மென்று சொல்லிக்கொண்டு ஒவ்வொரு முகத்தையும் ஆக்ராணம் செய்கிறார். இவ்விதம் பிதாவினுடைய அனுக்ரஹ பலத்தைக் கொண்டு ஸர்வலோகத்தின் யோகக்ஷேம பாரத்தை வஹிக்கும் சக்தியும் அந்த முகங்களுக்கு ஏற்பட்டு விட்டன. கடாக்ஷ வீக்ஷணத்தாலேயே ஸுப்ரமண்ய ஸ்வாமிக்கு ஸர்வ ஜகத்பாரத்தை வஹிக்கும் சக்தி ஏற்பட்டுவிட்டது. ஸர்வஜகத்தின் யோக க்ஷேம பாரத்தை வஹிக்கும் காரணத்தால் ராஜாதி ராஜனாக ஆறுமுகக் கடவுள் விளங்கிவருகிறார் என்பதை ஸூசிப்பிக்க நவரத்ன மயமான கிரீடங்களாலும் அந்த முகங்கள் ஜ்வலித்துக்கொண்டு வருகின்றன.

ஸுப்ரமண்யக் கடவுளுடைய ஆறுமுகங்களையும் ஆறுவிதமான வேத வாக்யங்களாகவே பாவிக்க வேண்டும். சேதனமான வஸ்துவே பரப்ரம்மமாகும். என்றும் ப்ரம்மத்தின் ஸ்வரூப லக்ஷணத்தைச் சொல்லும் வாக்யம் ஒரு வாக்யமாகும்.

Koviloor Digital Library

நான் என்ற சப்தத்தால் குறிப்பிடப்படும் ப்ரத்ய காத்மாவின் ஸ்வரூபத்தில் ப்ரத்யக்ஷமே ப்ரமாண மானதினால் அந்த ப்ரத்யகாத்மாவே ப்ரும்மமான தினால் அந்த ப்ரம்மஸ்வரூபத்தில் நித்யாபரோக்ஷமே ப்ர மாணமாகும் என்று சொல்லும் வாக்யம் இரண் டாவது வாக்யமாகும்.

ஜீவனுக்கு ஜீவபாவத்தைப் போக்கி ப்ரும்மபாவா பத்தியை போதிக்கும் உபதேச வாக்கியம் மூன்றாவது வாக்யமாகும்.

என்றும் ஜீவன் ப்ரம்மம்தான் என்ற ஸ்வானு பூதியைக் காட்டும் பலவாக்யம் நான்காவது வாக்ய மாகும்.

ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள பேதத்தை அனுவாதம் செய்துகொண்டு உபாதியில் ப்ரவிலயத்தால் பேதத்தைப் போக்கி அபேதத்தை நிர்தாரணம் செய் யும் வாக்யம் ஐந்தாவது வாக்யமாகும்.

ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் கேவலம் ஐக்யத்தை மாத்ரம் ப்ரகாசப்படுத்தும் வாக்யம் ஆறாவது வாக்ய மாகும்.

ஐந்தாவதும் ஆறாவதும் இதிஹாஸ புராணங் களின் மஹா வாக்யங்களாகும். மற்ற நான்கும் வேதங் களில் உள்ள மஹா வாக்யங்களாகும், இந்த ஆறு விதமான மஹாவாக்யங்களும் ஸுப்ரமண்யக் கடவுளின் ஆறுமுகங்களாக விளங்கி வரும்பொழுது பரமசிவன் அதை ஆக்ராணம் செய்வதிலிருந்தும் மஹா வாக்யங்களுக்கு நிஷ்களமான பரமசிவ ஸ்வ ரூபத்தில் பரம தாத்பர்யம் என்பது வெளியாகிறது.

Koviloor Digital Library

17. முருகனின் ஆபரண விசேஷ வர்ணனே.

स्फुरद्रत्नकेयूरहाराभिराम-
श्चलत्कुण्डलश्रीलसद्गण्डभागः ।
कटौ पीतवासाः करे चारुशक्तिः
पुरस्तान्ममास्तां पुरारेस्तनूजः ॥ १७ ॥

ஸ்புரத்ரத்நகேயூரஹாராபிராம-
ச்சலத்குண்டலச்ரீலஸத்கண்டபாக:
கடௌ பீதவாஸா: கரே சாருசக்தி,
ஸ்புரஸ்தாந்மமாஸ்தாம் புராரேஸ்தநூஜ: ॥ 17 ॥

பதவுரை :—

स्फुरद्रत्नकेयूरहाराभिरामः - ஸ்புரத்ரத்நகேயூரஹாராபிராம:=ப்ரகாசிக்கின்ற ரத்னமயமான அங்கம் ஹாரம் இவைகளோடு விளங்குகிறவராயும் चलत्कुण्डलश्रीलसद्गण्डभागः - சலத்குண்டலச்ரீல ஸத்கண்டபாக: = எப்பொழுதும் அசைந்துகொடுக்கும் காதுகளின் குண்டலங்களுடைய சோபையால் ப்ரகாசிக்கும் கன்ன ப்ரதேசத்தோடு கூடினவராயும் कटौ - கடௌ = இடுப்பில் पीतवासाः - பீதவாஸா: = பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறவராயும் करे - கரே = கையில் चारुशक्तिः - சாருசக்தி = அழகான சக்தி என்ற ஆயுதத்தை தரித்துக்கொண்டிருக்கிறவராயுமுள்ள पुरारेः - புராரே: = பரமேச்வரனுடைய तनूजः - தநூஜ: = புத்ரனை குமாரஸ்வாமியானவர் मम - மம = என்னுடைய पुरस्तात् - புரஸ்தாத் = முன்பாக आस्तां - ஆஸ்தாம் = விளங்கட்டும்.

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

சிவகுமாரனை ஸுப்ரமண்ய ஸ்வாமியானவர் எப்பொழுதும் என்னுடைய எதிரில் ப்ரகாசித்துக் கொண்டு என்னை ரக்ஷிக்கவேண்டும். அவருடைய அழகைப்பற்றியோ யாராலும் வர்ணிக்கமுடியாது தோள்வளையென்ற ஆபரணத்தைத் தோளாப்பட்டையில் தரித்துக்கொண்டிருக்கிறார். அந்த ஆபரணமோ ஒரே ரத்னமயமானது. அப்படியே மார்பில் நவரத்னமயமான ஹாரத்தை தரித்துக்கொண்டிருக்கிறார். அந்த இரண்டு ஆபரணங்களும் ஒரே ஜ்யோதிர் மயமாக ப்ரகாசிக்கிறபடியால் ஸுப்ரமண்ய கடவுளின் சரீரம் பூராவும் ஒரே ஜோதிர்மயமாகவே காணப்படுகின்றது. இதனால் தன்னை தர்சிக்கவரும் புண்ய ஜனங்களின் அக்ஞானமாகிய இருளைப் போக்கி ஞான ப்ரகாசத்தை உண்டுபண்ணும் ஞான பண்டிதன் என்பதும் ஸூசிப்பிக்கப்படுகிறது. அது போலவே இரண்டு கன்ன ப்ரதேசமும் காதில் போட்டுக்கொண்டிருக்கும் நவரத்ன குண்டலத்தின் சோபையினால் நவரத்ன கண்ணாடியைப்போல் சோபிக்கின்றன. அதுவும் என்னுடைய ஸந்நிதியில் தர்சனம் செய்யவரும்புண்ய ஜனங்களின் மனதும் இந்த கன்ன ப்ரதேசம்போல் நிர்மலமாகிவிடும் ; அக்காரணத்தைக் கொண்டு நானும் அந்த பக்தர்களுடைய மனதில் பரிபூர்ணமான ஸ்வரூபத்தோடு ப்ரகாசிக்கிறேன் என்பதையும் பக்தர்களுக்கு சொல்வதுபோல் தோன்றுகிறது! இடுப்பில் பீதாம்பரத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்! அதனாலும் தன்னை உபாஸிக்கிறவர்களுக்கு ஏராளமான அன்னவஸ்த்ரங்கள் ஏற்படும். குபேரனுக்கு ஸமானமான வைபவம் உள்ளவர்களாக ஆவார்கள் என்றும் தெரிகிறது. கையிலும் பராசக்தி மயமான வேல் ஒன்றை தரித்துக்கொண்டு விளங்கும் மஹிமையினால் ஸுப்ரமண்யக் கடவுளை பஜிக்கிறவர்களுக்கு சத்ரு அடியோடு நாசமாகிவிடுவார்கள்.

Koviloor Digital Library

பக்தர்களுடைய சத்ருவை ஸம்ஹாரம் செய்வதற்குத் தான் அந்தக் கடவுள் தன் கையில் சக்தி என்ற ஆயுதத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறார். இல்லாத போனால் ஸ்வரூபானந்தத்தில் லயித்துவரும் பகவானுக்கு ஆயுதத்தால் ஆகவேண்டியது ஒன்றுமே இல்லை பக்தர்களை ரக்ஷிப்பதற்காகத்தான் தன் கையில் ஆயுதம் விளங்கிவருகிறது இவ்வித மஹிமை தங்கிய ஸுப்ரமண்யக் கடவுள் ஸ்வயமாகவே அபாரமான பராக்ரமசாலி. அத்துடன் த்ரிபுராஸுரனை ஸம்ஹரித்த பரமசிவனுடைய குமாரர். அவ்விதமிருக்கும்போது அவருடைய பராக்ரமத்தை யாரால்தான் வர்ணிக்கமுடியும்! அந்த முருகக் கடவுள் என்னுடைய எதிரில் எப்போதும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கவேண்டும். அவருடைய அருள் எனக்கு எப்போதும் இருக்கட்டும் அதனால் நான் தன்யனாக ஆகிவிடுவேன் என்று பிரார்த்திக்கவேண்டும்.

---

18. ஷடக்ஷரீ மஹிமை.

इहायाहि वत्सेति हस्तान्प्रसार्या-
ह्वयत्यादराच्छंकरे मातुरङ्कात् ।
समुत्पत्य तातं श्रयन्तं कुमारं
हराश्लिष्टगात्रं भजे बालमूर्तिम् ॥ १८ ॥

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தாந்ப்ரஸார்யா-
ஹ்வயத்யாதராச்சம்கரே மாதுரங்காத் ।
ஸமுத்பத்ய தாதம் ச்ரயந்தம் குமாரம்
ஹராச்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம் ॥ 18 ॥

Koviloor Digital Library

பதவுரை:—

हे वत्स - ஹே வத்ஸ = ஹே குழந்தாய்! इह-இஹ = இங்கு आयाहि - ஆயாஹி = வா इति - இதி = என்று हस्तान् - ஹஸ்தாந் = கைகளை प्रसार्य - ப்ரஸார்ய = நீட்டிக்கொண்டு शंकरे - சங்கரே = தகப்பனாரான பரமேச்வரன் आदरात् - ஆதராத் = ப்ரியத்தோடு आह्वयति सति - ஆஹ்வயதி ஸதி = கூப்பிடும்பொழுது मातुः - மாதுः = தாயாரான பார்வதியினுடைய अङ्कात् - அங்காத் = மடியிலிருந்தும் समुत्पत्य - ஸமுத்பத்ய = வேகமாய்க் கிளம்பி तातं - தாதம் = தகப்பனாரான பரமேச்வரனை श्रयन्तं - ச்ரயந்தம் = அடைந்த हराश्लिष्टगात्रं - ஹராச்லிஷ்ட காத்ரம் = பரமேச்வரனால் ஆலிங்கனம் செய்யப்பட்ட சரீரத்தோடு கூடினவராயும் बालमूर्तिम् - பாலமூர்த்திம் = குழந்தைப் பருவமான சரீரத்தோடு கூடினவராயும் உள்ள कुमारं - குமாரம் = குமாரஸ்வாமியை भजे - பஜே = பஜிக்கின்றேன்.

தாத்பர்யம் :—

குமாரஸ்வாமியென்ற ஸுப்ரமண்யமூர்த்தியானவர் ஒரு ஸமயத்தில் தாயாரான பார்வதியினுடைய மடியில் உட்கார்ந்துகொண்டு விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது பரமேச்வரன் பார்த்து மிகவும் ஆனந்தபரிதரைக ஆனார். அத்துடன் தன்னுடைய இரண்டு கைகளையும் நீட்டி விரித்துக்கொண்டு 'குழந்தாய் என்னிடம் வா' என்று ஆதரவோடு அழைத்தார். குமாரஸ்வாமியும் மிகவும் உத்ஸாஹத்துடன் தாயாருடைய மடியிலிருந்து எழுந்திருந்து ஓடிவந்து பர

Koviloor Digital Library

மேச்வரனுடைய மடியில் உட்கார்ந்துகொண்டார். பரமேச்வரன் குழந்தையை ஆலிங்கனம் செய்து கொண்டு உச்சிமுகர்ந்துபார்த்து தாலாட்டி விளையாடி ஸந்தோஷமடைந்தார். இவ்விதம் பார்வதியினிட மிருந்து பரமேச்வரனை யடைந்த குமாரஸ்வாமியை த்யானம் செய்கிறேன் என்பதால் பரமசிவனுடைய ஸம்பந்தமும், பார்வதியின் ஸம்பந்தமும் ஏற்படுவத னுல், பார்வதியினுடைய மடியிலோ, பரமேச்வரனு டையமடியிலோ அல்லது இருவர்களுடைய நடுபாகத் திலோ, ஸுப்ரமண்ய ஸ்வாமியை த்யானம் செய்வது மிகவும் விசேஷமானது என்பது வெளியாகிறது. இந்தத் தருணத்தில், பார்வதி, பரமேச்வரனிருவர்க ளும், ஸோமாஸ்கந்தர் என்ற சப்தத்தால் சொல்லப் படும் அவஸரம் ஏற்படுகிறது.

ஷண்முகனுடைய ஷடக்ஷரீ மஹாமந்த்ரத்தை மூன்று பாகமாகப் பிரித்துக்கொண்டு, முதல் இரண் டக்ஷரத்தை சக்திகண்டம் என்றும், நடு இரண்டக்ஷ ரத்தை குமரகண்டம், என்றும், கடைசி இரண் டக்ஷரத்தை சிவகண்டம் என்றும் பிரிக்கவேண்டும். இவ்விதம் பிரித்துக்கொணடு சிவனேடும் சக்தியோ டும் குமாரஸ்வாமியை ஸம்பந்தப்படுத்தி த்யானம் செய்துகொண்டு அந்த ஷடக்ஷரீஎன்ற மஹாமந்த் ரத்தை ஜபம் செய்கிறவர்களுக்கு ஸகலவிதமான ஸௌபாக்யம் ஸித்திப்பதோடும் குமாரஸ்வாமியுடன் பார்வதி - பரமேச்வரரும் சேர்ந்துகொண்டு ஒரே காலத்தில் பக்தனுக்கு தர்சனமும் அளிப்பார்கள்.

Koviloor Digital Library

19. இந்த்ரிய நிக்ரஹ பலம்.

कुमारेश सूनो गुह स्कन्द सेना-
पते शक्तिपाणे मयूराधिरूढ ।
पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन्
प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥ १९ ॥

குமாரேச ஸூநோ குஹ ஸ்கந்த ஸேநா-
பதே சக்திபாணே மயூராதிரூட ।
புலிந்தாத்மஜாகாந்த பக்தார்த்திஹாரிந்
ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷ மாம் த்வம் ॥ 19 ॥

பதவுரை :—

हे कुमार - ஹே குமார = ஹே குழந்தாய், அல்லது மாரன் என்ற மன்மதனை திக்காரத்தால் தூரத் தள்ளின ஜிதேந்த்ரியனே! ईश सूनो - ஈச ஸூநோ = ஸர்வ ஜகத்திற்கும் நியந்தாவான பரமேச்வரனுடைய புத்ரனே गुह - குஹ = ஸ்தானம், ஸ்வரூபம், ஹ்ருதயம், மந்த்ரம், கவசம், ஸ்தோத்ரம், இவைகள் மிகவும் ரஹஸ்யமான தத்வங்களானதினால் அதற்குப் பொருத்தமாயுள்ள குஹனென்ற பெயரோடு கூடின ஹே ஸ்வாமியே, हे स्कन्द - ஹே ஸ்கந்த = 'ஸ்கந்திர் கதி சோஷணயோ:' என்ற தாதுவை அனுஸரித்து பக்தனுடைய பாபங்களை நாசம் செய்து, முக்தி என்ற பரம புருஷார்த்தத்தை பக்தனுக்கு அளிக்கும் வல்லமையுள்ள ஸ்வாமியே, हे सेनापते - ஹே ஸேனாபதே = தேவர்களாகிய ஸேனைக்கு அதிபதியாகிய

Koviloor Digital Library

ப்ரபுவே, हे शक्तिपाणे - ஹே சக்திபாணே = பராசக்தியின் ஸ்வரூபமாகிய வேல் என்ற ஆயுதத்தைக் கையில் தரித்திருக்கும் சூரனே, पुलिन्दात्मजाकान्त - புலிந்தாத்மஜாகாந்த = புளிந்தன் என்ற வேடஜாதியில் பிறந்த வல்லீ என்ற புண்யவதியின் மனதை ஸந்தோஷிக்கச் செய்யும் ப்ரபுவே भक्तार्तिहारिन्-பக்தார்த்திஹாரின் = பக்தனுடைய ஸகலவிதமான பீடையை அபஹரிக்கும் ஸ்வாமியே, -हे तारकारे - ஹே தாரகாரே = தாரகாஸுரனுக்கு சத்ருவான ஸுப்ரமண்ய ஸ்வாமியே, हे प्रभो - ஹே ப்ரபோ = ஸ்வாமிந் मां - மாம் = என்னை सदा - எப்பொழுதும் त्वं - த்வம் = நீ रक्ष - ரக்ஷ = ரக்ஷிக்கவேண்டும்.

தாத்பர்யம் :—

मनसश्चेन्द्रियाणाञ्च ह्यैकाग्र्यं परमं तपः (மநஸச்சேந்த்ரியாணாஞ்ச ஹ்யைகாக்ர்யம் பரமம் தப:) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, இந்த்ரிய நிக்ரஹமும், மனோநிக்ரஹமும் மேலான தபஸ்ஸென்று தெரிகிறது. இந்த்ரியங்களோ, ஞானேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து ஆக பத்துவிதங்கள். இந்த பத்துவிதமான இந்த்ரியங்களுக்கும் நியந்தாவைப்போல் விளங்கும் மனதை அந்த:கரணம் என்று சொல்லப்படும். இந்த பதினோறு தத்வங்களையும் நிக்ரஹம் செய்வதே மேற்சொன்ன சாஸ்த்ரத்தின் தாத்பர்யமாகும். இந்த இந்த்ரிய நிக்ரஹம் என்பதோ, மிகவும் கஷ்டப்பட்டுச் செய்யவேண்டிய கார்யமாகும் எல்லா புருஷர்களாலும் இந்தக் கார்யத்தைச் செய்வது ஸாத்யமாகாது. ஸ்காந்த மஹா புராணத்தில், ஷண்முகப்பெருமானை ஸர்வ நியந்தா என்று ப்ரதிபாதிக்கும் அவஸரத்தில், அந்தந்த இந்த்ரியங்களுக்கும், மனதிற்கும், அந்த ஷண்முகனையே அதிஷ்டானமான தேவதையாகவும் நிரூ

Koviloor Digital Library

பணம் செய்யப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன ச்லோகத்திலோ, ஸம்போதன ப்ரதமாவிபக்தியோடு குமாரஸ்வாமியினுடைய பதினேரு நாமாக்கள்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. சக்ஷுரிந்த்ரியம் முதலான அந்தந்த இந்த்ரியங்களுக்கும் குமாரஸ்வாமியானவர் அதிஷ்டான தேவதையாக இருக்கும்பொழுது க்ரமமாக அந்தந்த நாமாக்களை ப்ரயோகம்செய்துகொள்ள வேண்டும். இந்த நாமாக்களை நான்காவது வேற்றுமையோடு நம: என்பதைக் கடைசியில் சொல்லிக்கொண்டு ஜபம் செய்தால், அதைக் குமார ரஹஸ்யம் என்ற மஹாமந்த்ரமாக ஸ்காந்த புராணத்தில், சங்கர ஸம்ஹிதையில் உபதேச காண்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. மஹாகைலாஸத்தில் சிவ தீர்த்தக் கரையில், ஸனத்குமாரஸ்வாமியினுல், நாரத மஹர்ஷிக்கு இந்த ரஹஸ்யமானது உபதேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்த்ரிய நிக்ரஹம் மஹாபலமாகும். ஸுலபமாக இந்த்ரிய நிக்ரஹத்தை அடைவதற்கு இதை விட்டால் வேறு வழியேயில்லை. இந்த ரஹஸ்யத்தை, இந்த ச்லோகத்தின் மூலம் பரமாசார்யாள் ப்ரகாசப்படுத்தியிருக்கிறுர்கள்.

---

20. அநாத ரக்ஷகன்.

प्रशान्तेन्द्रिये नष्टसंज्ञे विचेष्टे
कफोद्गारिवक्त्रे भयोत्कम्पिगात्रे ।
प्रयाणोन्मुखे मय्यनाथे तदानीं
द्रुतं मे दयालो भवाग्रे गुह त्वम् ॥ २० ॥

ப்ரசாந்தேந்த்ரியே நஷ்டஸம்க்ஞே விசேஷ்டே
கபோத்காரிவக்த்ரே பயோத்கம்பிகாத்ரே ।
ப்ரயாணோன்முகே மய்யநாதே ததாநீம்
த்ருதம் மே தயாளோ பவாக்ரே குஹ த்வம் ॥20॥

Koviloor Digital Library

பதவுரை :—

हे गुह - ஹே குஹ = அதிரஹஸ்யமான மஹிமையுள்ள ஹே ஸ்வாமியே! दयालो - தயாளோ = க்ருபாநிதியே त्वं - த்வம் = நீ मयि - மயி = நான் प्रशान्तेन्द्रिये - ப்ரசாந்தேந்த்ரியே = லயித்துப்போன இந்த்ரியங்களோடு கூடினவனையும் नष्टसंज्ञे - நஷ்டஸம்க்ஞே = ஞாபகசக்தியில்லாதவனையும் विचेष्टे - விசேஷ்டே = கை, கால்களின் அசைவுகூட இல்லாமல் ஓய்ந்துபோனவனையும் कफोद्गारिवक्त्रे - கபோத்காரிவக்த்ரே = கபத்தினுடைய ஆதிக்யத்தால் வெளியில் நுரையைக் கக்குகிறவனையும் भयोत्कम्पिगात्रे - பயோத்கம்பிகாத்ரே = யம பயத்தால் நடுங்குகிற சரீரத்தோடு கூடியவனையும் प्रयाणोन्मुखे - ப்ரயாணோந்முகே = சரீரத்தை விட்டுப் பரலோகம் செல்வதில் ஸித்தனையும் अनाथेच सति - அநாதேச ஸதி = என்னை ரக்ஷிக்கும் வேறு நாதன் இல்லாமலுமிருக்கும்பொழுது तदानीं - ததாநீம் = அப்பொழுது द्रुतं - த்ருதம் = சீக்ரமாக मे - மே = எனக்கு अग्रे - அக்ரே = முன்பாக भव - பவ = ப்ரகாசமாகி ரக்ஷிக்கவேண்டும்.

தாத்பர்யம் :—

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन् मामनुस्मरन् ।
यः प्रयातित्यजन्देहं स याति परमां गतिम् ॥

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் ।
ய: ப்ரயாதித்யஜந்தேஹம் ஸ யாதி பரமாம்கதிம் ॥

என்ற கீதாவாக்ய ப்ரகாரம் மரண காலத்தில் ப்ரணவ மஹாமந்த்ரத்தை உச்சரித்துக்கொண்டு பரப்ரும்மத்தை அனுஸந்தானம் செய்கிறவன் மோக்ஷத்தை

Koviloor Digital Library

அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது தான், அடைந்த ஜன்மாவினுடைய பரம லாபமாகும். அந்த லாபத்தை ஸகல ப்ராணிகளும் அடைய குமார ஸ்வாமியின் அருளால்தான் முடியும். கடைசி காலத்தில் இந்திரியங்களுக்கோ, மனதிற்கோ யாதொரு விதமான சக்தியும் இல்லாமலாகி அவைகள் தன் தன் காரணத்தில் லயத்தை அடைந்துவிடுகின்றன. கை கால்களின் சேஷ்டையும் ஒடுங்கிப் போய்விடும், யம படாளுடைய உபத்ரவத்தால் பயகம்பாதிகளும் உண்டாகிறது. கபமோ அதிகமாகித் தொண்டையை அடைத்து பகவானுடைய நாமாவை உச்சரிப்பதற்குக் கூட சக்தியில்லாமல் செய்துவிடுகிறது. பூர்வ ச்லோகத்திலோ இந்திரியங்களுக்கு சக்தியை உண்டு பண்ணுகிறவன் இந்தக் குமாரஸ்வாமிதான் என்று சொல்லப்பட்டது. அந்தக் குமாரஸ்வாமியானவன் ஞானபண்டிதன் ஆனதினாலேயும், லோகத்திற்கு குருவானதினாலும், அந்த ஆபத் காலத்தில் அந்தக் குமார ஸ்வாமியின் அனுக்ரஹம் மிகவும் முக்கியமானது என்பதை நினைத்து அந்த்யகாலத்தில் தனக்கு எதிரில் ஸுப்ரமண்யஸ்வாமி ப்ரத்யக்ஷமாகித் தன்னை ரக்ஷிக்க வேண்டுமென்று குமாரக்கடவுளை ப்ரார்த்தித்துக் கொள்ளும்படி மஹா ஜனங்களைப் பரமாசார்யாள் வற்புறுத்துகிறார்கள். மேலும் அந்த்ய காலத்தில் ஓங்காரத்தை உச்சரித்துக்கொண்டு பரப்ருமஹத்தை அனுஸந்தானம் செய்யவேண்டியதவச்யம் என்று மேற்காட்டிய கீதாவாக்யத்தால் தெரியவருகிறது. அகாரம் முதலான ஸ்வரத்திலோ, ஓங்காரமானது பதிமூன்றாவது எழுத்தாகிறது பதினெட்டுவிதமான மஹாபுராணங்களில் ஸ்காந்தமஹாபுராணம் பதிமூன்றாவது புராணம் என்பதும் வெளியாகிறது. ஸ்காந்த மஹா புராணத்திலோ ஸுப்ரமண்ய ஸ்வாமியின் பரதத்வம்தான் ப்ரகாசப்படுத்தப்படுகிறது என்பது ஸர்வஜன ப்ரஸித்தமாகும். அதனால் ஓங்காரத்தின் பொருள் ஸுப்ரமண்யக் கடவுள் என்றே தெரிகிற

Koviloor Digital Library

படியால் அந்த்ய காலத்தில் ஷண்முகனுடைய ஸ்வரூபத்தை—ஓம்காரத்தை உச்சரித்துக்கொண்டு ஸ்மரணம் செய்யவேண்டுமென்பது அவச்யமாகிறது. இதனாலும் ஸுப்ரமண்ய உபாஸனம் ஸஜ்ஜனங்களுக்கு அவச்யமானது.

---

21. யம பீடா பரிஹாரம்.

कृतान्तस्य दूतेषु चण्डेषु कोपा-
द्दह च्छिन्द्धि भिन्द्धीति मां तर्जयत्सु ।
मयूरं समारुह्य मा भैरिति त्वं
पुरः शक्तिपाणिर्ममायाहि शीघ्रम् ॥ २१ ॥

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபா-
த்தஹச்சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு ।
மயூரம் ஸமாருஹ்ய மா பைரிதி த்வம்
புர: சக்திபாணிர்மமாயாஹி சீக்ரம் ॥ 21 ॥

பதவுரை :—

कृतान्तस्य - க்ருதாந்தஸ்ய = யமனுடைய चण्डेषु - சண்டேஷு = உக்ரமான ஸவபாவமுள்ள दूतेषु - தூதேஷு = தூதர்கள் कोपात् - கோபாத் = கோபத்தோடு दह - தஹ = பொசுக்கு छिन्द्धि - சிந்தி = வெட்டு भिन्द्धि - பிந்தி = இரண்டாய்ப் பிள इति - இதி = என்று मां - மாம் = என்னை तर्जयत्सु सत्सु - தர்ஜயத்ஸு ஸத்ஸு = அதட்டி ஹிம்ஸை செய்யும்பொழுது हे स्वामिन् - ஹே ஸ்வாமிந் = ஹே குமாரக் கடவுளே त्वं - த்வம்

Koviloor Digital Library

= नी शक्तिपाणि: - சக்திபாணி: = சக்தியென்ற வேலாயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டவனுய்க்கொண்டு मयूरं - மயூரம் = மயில்வாஹனத்திலும் समारुह्य - ஸமாருஹ்ய = ஏறிக்கொண்டு माभै: - மாபை: = பயப்படவேண்டாம் इति - இதி = என்ற உபதேசத்துடன் मम - மம = எனக்கு पुर: - புர: = எதிரில் शीघ्रं - சீக்ரம் = வேகமாக आयाहि - ஆயாஹி = வரவேண்டும்.

தாத்பர்யம் :—

மரண காலத்தில் க்ரூரமான ஸ்வபாவமுள்ள யமதூதர்கள் ப்ராணிகளை பயங்கரமான ரூபத்துடன் வெட்டு, கொல்லு என்று அதட்டி ஹிம்ஸை பண்ணுகிறுர்கள். அந்தத் தருணத்தில் குமாரஸ்வாமியைத்தான் சரணம் அடையவேண்டும். சக்திபாணியாகவும் மயில் வாஹனத்தில் ஏறிக்கொண்டவராகவும் திவ்ய ஸௌந்தரமான ரூபத்துடன் மரண காலத்தில் தன்னை அழைத்த மனிதனுக்கு எதிரில் புலப்பட்டுக் கொண்டு பயப்படவேண்டாம் என்று ஸமாதானப் படுத்தி பக்தனை ரக்ஷிக்கிறுர். माभै: (மாபை:) என்பது உபதேச வாக்கியமாகும். अभयं वै जनक प्राप्तोसि (அபயம் வை ஜனக ப்ராப்தோஸி) என்ற ப்ருஹதாரண்யக உபநிஷத் வாக்யமே மேற்சொன்ன விஷயத்தில் ப்ரமாண வாக்யமாகும். அபயம் என்றுல் மோக்ஷம் என்பதுதான். அந்த மோக்ஷத்திற்கோ ஞானமே அந்தரங்க ஸாதனமானதினுல் பராசக்தியாகிய ப்ரும்மவித்யையை வேலாகத் தன் கையில் தரித்துக்கொண்டு மரணகாலத்தில் புருஷனுக்கு எதிரில் ப்ரகாசிக்கிற காரணத்தால் கடைசி காலத்தில் ஸௌப்ரமண்யக்கடவுள் தன் பக்தனுக்கு எதிரில் புலப்பட்டு ஞானேபதேசம் செய்து அபயப்ராப்தியை அளிக்கிறுர் என்ற ரஹஸ்யமானது வெளியாகிறது. ஞானத்

Koviloor Digital Library

தால்தான் மோக்ஷம் என்பதற்கு வேதம்தான் ப்ரமாணம் ஆகும் என்பதை ஸூசிப்பதிலும், மயில் வாஹனத்தில் ஏறிக்கொண்டு ஸுப்ரமண்யமூர்த்தியானவர் ப்ரகாசிப்பதே ஒரு காரணமாகும்.

वेद एव मयूरस्यात् प्रणवष्षण्मुखस्तथा ।
ब्रह्मविद्यापि शक्तिस्यात् मोक्षस्तद्दर्शनास्मृतः ॥

வேத ஏவ மயூரஸ்யாத் ப்ரணவஷ்ஷண்முகஸ்ததா ।
ப்ரஹ்மவித்யாபி சக்திஸ்யாத் மோக்ஷஸ்தத்தர்சனஸ்ம்ருத: ॥

என்ற ஸ்காந்தபுராண வாக்யத்தால் வேதமே மயூரமாக ஆவிர்பவித்து ஸுப்ரமண்யமூர்த்திக்கு வாஹனமாக விளங்கி வருகிறது. அந்த வேதத்தினுடைய ஆதியிலும் அந்தத்திலும், வேதாந்தங்களிலும் அங்காங்கு உத்கோஷிக்கப்படும் ஸ்வரம் என்ற ஓங்காரமே ஸுப்ரமண்யமூர்த்தி என்றும் வேதங்களுக்கு எந்த ப்ரும்மவித்யையினிடத்தில் பரமதாத்பர்யம் என்று சொல்லப்படுமோ அந்த ப்ரம்மவித்யைதான் ஸ்வாமியின் கையில் விளங்கிவரும் வேலாயுதம் என்றும் இவ்விதம் அந்தந்த தத்வங்களை அறிந்து தாசனம் செய்வதால் மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தை ஸுலபமாக அடையலாம் என்று தான் மேற்சொன்ன புராணவாக்கியத்தின் தாத்பர்யமாகும். இதனால் தினந்தோறும் இடைவிடாமல் ஸுப்ரமண்ய ஸ்வாமியைப் பூஜித்து வருகிறவர்களுக்கு அந்திய காலத்தில் ஸுப்ரமண்யஸ்வாமியானவர் மேல் சொன்னபடி ஸபரிவாரமாக தர்சனம் கொடுத்து யமனுடைய பீடையையும் பரிஹாரம் செய்து வைத்து மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தையும் ஞானமூலமாகக் கொடுத்தனுக்ரஹிக்கின்றார் என்பது ஸித்தமாகின்றது.

कृते तु ब्रह्मजिज्ञासुः त्रेतायां जानकी पतिः ।
द्वापरे भगवान् कृष्णः कलौ स्कन्दः प्रकीर्तितः ॥

Koviloor Digital Library

க்ருதேது ப்ரஹ்மஜிக்ஞாஸம் த்ரேதாயாம் ஜாநகீ பதி: ।
த்வாபரே பகவாந் க்ருஷ்ண: கெளள ஸ்கந்த: ப்ரகீர்த்தித: ॥

என்ற சாஸ்த்ர ரீதியாக க்ருதயுகத்தில் ப்ரும்ம விசாரத்தாலும், த்ரேதா யுகத்தில் ராம ஸேவையாலும், த்வாபர யுகத்தில் க்ருஷ்ணபக்தியாலும், கலியுகத்தில் ஸுப்ரமண்ய உபாஸனத்தாலும் புருஷார்த்தம் ஸித்திக்கிறதென்று தெரிகிறபடியால் கலியுகவரதன் ஸுப்ரமண்யக்கடவுளே என்பது ஸித்தம்.

---

22. ஸுப்ரமண்யோபாஸனம்.

प्रणम्यासकृत्पादयोस्ते पतित्वा
प्रसाद्य प्रभो प्रार्थयेऽनेकवारम् ।
न वक्तुं क्षमोऽहं तदानीं कृपाब्धे
न कार्यान्तकाले मनागप्युपेक्षा ॥ २२ ॥

ப்ரணம்யாஸக்ருத்பாதயோஸ்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேநேகவாரம் ।
ந வக்தும் க்ஷமோஹம் ததாநீம் க்ருபாப்தே
ந கார்யாந்தகாலே மநாகப்யுபேக்ஷா ॥ 22 ॥

பதவுரை :—

हे स्वामिन् - ஹே ஸ்வாமிந் = ஹே குமாரஸ்வாமியே ते - தே = உன்னுடைய पादयोः - பாதயோ: = சரணங்களில் पतित्वा - பதித்வா = விழுந்து असकृत् - அஸக்ருத் = அடிக்கடி प्रणम्य - ப்ரணம்ய = நமஸ்கரித்தும் प्रभो - ப்ரபோ = ஹே ப்ரபுவே अनेकवारं - அநேகவாரம்

Koviloor Digital Library

= பலதடவை प्रसाद्य - ப்ரஸாத்ய = உன்னை ஸந்தோஷிக்கச் செய்து हे कृपाब्धे - ஹே க்ருபாப்தே = கருணை நிதியே तदानीं - ததாநீம் = என்னுடைய ப்ராண வியோக காலத்தில் अहं - அஹம் = நான் वक्तुं - வக்தும் = பேசுவதற்கு न क्षमः - ந க்ஷம: = சக்தியில்லாதவனாக ஆகிவிடுவேன் अन्तकाले - அந்தகாலே = கடைசி காலத்தில் मनागपि - மநாகபி = கொஞ்சங்கூட उपेक्षा - உபேக்ஷா = என் விஷயத்தில் அலக்ஷ்யமானது नकार्या - நகார்யா = செய்யக்கூடாது इति - இதி = என்று प्रार्थये - ப்ரார்த்தயே = ப்ரார்த்திக்கின்றேன்.

தாத்பர்யம் :—

முன்பு, அந்த்யகாலத்தில் குமாரஸ்வாமியின் தர்சனம் அவச்யம் என்று சொல்லப்பட்டது. அவ்வித லாபத்தைக் கடைசி காலத்தில் அடையவேண்டுமானால் மனிதன் ஜீவதசையிலேயே ஷண்முகனை ஆராதித்து அவனுடைய அனுக்ரஹத்திற்குப் பாத்ரனாக ஆகவேண்டும். ஸுப்ரமண்யமூர்த்தியின் பாதாரவிந்தங்களில் பக்தி புரஸ்ஸரமாக அடிக்கடி நமஸ்காரங்களை அர்ப்பணம் செய்து தன்னுடைய அந்த்ய காலத்தில் தன்னை உபேக்ஷிக்கக்கூடாது என்பதைக் கதறி ப்ரார்த்தித்துக் கொள்ளவேண்டும்.

सुलभाः योगतत्वज्ञाः सुलभा ब्रह्मवादिनः ।
सुलभाः कर्मिटा लोके न गुहोपासकास्तथा ॥
गुहात्तु न परो देवः गुहे सर्वं प्रतिष्ठितम् ।
सर्ववेदान्त तात्पर्य विषयो गुह एव सः ॥
गुहस्योपासनात्सर्वे देवास्तुष्यन्तिनेतरात् ।
तुष्यन्ति पितरस्सर्वे सत्यं सत्यं वदाम्यहम् ॥
कलौ गुहं परित्यज्य नृणां सर्वार्थदायकम् ।
अन्वेषते परं देवं मूढधीर्नात्र संशयः ॥

Koviloor Digital Library

ஸுலபா: யோகதத்வக்ஞா: ஸுலபா ப்ரஹ்மவாதிந: ।
ஸுலபா: கர்மிடா லோகே ந குஹோபாஸகாஸ்ததா ॥
குஹாத்து ந பரோதேவ: குஹே ஸர்வம் ப்ரதிஷ்டிதம் ।
ஸர்வவேதாந்த தாத்பர்ய விஷயோ குஹ ஏவ ஸ: ॥
குஹஸ்யோபாஸநாத்ஸர்வே தேவாஸ்துஷ்யந்தி நேதராத் ।
துஷ்யந்தி பிதரஸ்ஸர்வே ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் ॥
கலௌ குஹம் பரித்யஜ்ய ந்ருணாம் ஸர்வார்த்ததாயகம் ।
அந்வேஷதே பரம் தேவம் மூடதீர்நாத்ர ஸம்சய: ॥

என்ற ஸனத்குமார ஸம்ஹிதாவசன ரீதியாக கலியில் ஸுப்ரமண்யஸ்வாமியைத் தவிர வேறு மேலான தெய்வமே இல்லையென்பதை நிச்சயமாகச் சொல்லக் கூடிய ப்ரமாண வாக்யங்களைக் கொண்டு ஸுப்ரமண்யக்கடவுள்தான் முக்யமான தெய்வம் என்பதை அறியவேண்டும். அந்த ப்ரபுவினுடைய பூஜைதான் ஸர்வதேவதா பூஜையாக ஏற்படுமென்று கருதவேண்டும். ப்ரணவத்திற்கு மேலான தத்வம் இல்லாதது போல் ஸுப்ரமண்யஸ்வாமிக்கு மேலான தெய்வமே கிடையாது. வாக்யமான பொருளும் வாசகமான சப்தமும் ஒன்றுதான் என்ற மர்யாதையை அனுஸரித்து ஓம் என்ற ப்ரணவம் ஷண்முகனுக்கு வாசகமானதினால் ப்ரணவமும் ஸுப்ரமண்யஸ்வரூபமும் ஒரே தத்வமானதினால் அதற்கு மேலாக மற்ற எந்த தத்வத்தையும் சொல்லக் காரணமும் ஏற்படாது.

एकं शास्त्रं स्कान्दमेवात्र लोके। एको देवः षण्मुखस्त्वीश पुत्रः। एकोमन्त्र षण्मुखार्थ प्रकाशः। एको मोक्षः स्कन्द सालोक्यमेव। नान्याबुद्धिः शिष्टशास्त्रा विरुद्धा सुब्रह्मण्यस्सेवनीयो महेशः॥ (ஏகம் சாஸ்த்ரம் ஸ்காந்தமேவாத்ர லோகே। ஏகோ தேவ: ஷண்முகஸ்த்வீசபுத்ர:। ஏகோமந்த்ர: ஷண்முகார்த்த ப்ரகாச:। ஏகோ மோக்ஷ: ஸ்கந்த ஸாலோக்யமேவ। நாந்யாபுத்தி: சிஷ்டசாஸ்த்ரா விருத்தா ஸுப்ரஹ்மண்யஸ்ஸேவநீயோ மஹேச: ॥)

Koviloor Digital Library

என்றது முதலான ஸனத்குமார ஸம்ஹிதையிலுள்ள வாக்யங்களை முமுக்ஷுக்கள் ஆலோசித்துப் பார்த்து இக்கலியில் அந்த ப்ரபுவின் ஸ்மரணமும் தர்சனமும் தனக்கு ஏற்பட்டு அதனுல் பயபீடையையும் பரிஹாரம் செய்துகொண்டு மோக்ஷ லாபத்தையும் அடையவேண்டுமென்ற எண்ணத்துடன் ஜீவதசையிலேயே அந்த பகவானுடைய ஆராதனத்தைக் கைவிடாமல் அனுஷ்டித்து வருகிற மஹா புருஷனே மஹா புண்யவான் என்றும் மஹா தபஸ்வியென்றும் மஹா யோகியென்றும் மஹா ஞானியென்றும் சொல்லவேண்டும். ஆகையால் ஸர்வ ப்ராணிகளும் இஹத்திலும், பரத்திலும் ச்ரேயஸ்ஸை விரும்பி, ஸுப்ரமண்யோபாஸனம் செய்யவேண்டும்.

---

23. மனக்லேசத்திற்கு பரம ஔஷதம்.

सहस्राण्डभोक्ता त्वया शूरनामा
हतस्तारकः सिंहवक्त्रश्च दैत्यः ।
ममान्तर्हृदिस्तं मनःक्लेशमेकं
न हंसि प्रभो किं करोमि क्व यामि ॥ २३ ॥

ஸஹஸ்ராண்டபோக்தா த்வயா சூரநாமா
ஹதஸ்தாரக: ஸிம்ஹவக்த்ரச்ச தைத்ய: ।
மமாந்தர்ஹ்ருதிஸ்தம் மந:க்லேசமேகம்
ந ஹம்ஸி ப்ரபோ கிம் கரோமி க்வ யாமி ॥ 23 ॥

பதவுரை :—

सहस्राण्ड भोक्ता - ஸஹஸ்ராண்ட போக்தா = இந்த லோகத்தை ஆயிரம் அண்டங்களாக விபாகம் செய்து ஏகச்சக்ராதிபதியாகப் பரிபாலனம் செய்துவந்த

Koviloor Digital Library

शूरनामा - சூரநாமா = சூரன் என்ற அஸுரனுனவன் त्वया - த்வயா = உன்னுல் हत: - ஹத: = கொல்லப் பட்டான் तथा - ததா = அப்படியே तारक: - தாரக:= தாரகாஸுரனும் सिंहवक्त्र: - ஸிம்ஹவக்த்ர: = ஸிம்ம வக்த்ரன் என்ற दैत्यश्च - தைத்யச்ச = அஸுரனும் हत: - ஹத:= கொல்லப்பட்டான் मम - மம= என்னுடைய अन्तर्हृदिस्तं - அந்தர்ஹ்ருதிஸ்தம் = ஹ்ருதயாகாசத்திற் குள்ளிருக்கும் एकं - ஏகம் = ஒன்ருன मन:क्लेशं - மந: க்லேசம் = மனிதின் தாபமென்ற ஆதியை மாத்ரம் हे प्रभो - ஹே ப்ரபோ = ஹே ஸ்வாமியே न हंसि - ந ஹம்ஸி = கொல்லாமலிருக்கிருயே किं करोमि - கிம் கரோமி = நான் என்ன செய்வேன்? क्व यामि - க்வ யாமி = எங்குதான் போவேன்!

தாத்பர்யம் :—

வீர மாஹேந்த்ரபட்டணம் என்ற நகரத்திற்கு அதிபதியாக சூரபத்மா என்ற அஸுரன் விளங்கி வந்தான். அவனுக்குத் தாரகாஸுரன் என்றும் ஸிம்ம வக்த்ரன் என்றும் இரு ஸஹோதரர்களுண்டு. அவர் கள் மூன்றுபேர்களும் அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்து பரமேச்வரனுடைய அனுக்ரஹத்தால் பகுப்ர காரமான வரங்களையுமடைந்து லோகங்களை*ப் தன் வசமாக்கிக்கொண்டு மஹாமாயாவிகளாகவும் காம ரூபிகளாகவும் விளங்கிக்கொண்டு ஆண்டு வந்தார்கள். இந்த்ரன் முதலான தேவர்களும் அந்த சூரனுடைய பீடையை ஸஹிக்கமுடியாமல் அவனுக்குப் பரிசாரக ளுக இருக்கும் துர்கதியை அடைந்து கஷ்டப்பட் டார்கள். இந்த்ரன் முதலிய தேவர்கள் தன் தன் ஸ்தானத்தையும் அவனிடம் இழந்துவிட்டு மலைகளி லும் காடுகளிலுமாக மறைந்துகொண்டு சில காலம்

Koviloor Digital Library

வாஸம் செய்தார்கள். அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்துவைத்த பந்துவோ இந்த ஸுப்ரமண்யக் கடவுள்தான். இந்த ஸ்வாமியானவர் சூரபத்மா, தாரகாஸுரன், ஸிம்ஹவக்த்ரன் மூன்றுபேர்களையும் வதித்து தேவஸேனாதிபத்யத்தையும் தான் வஹித்துக்கொண்டு தேவர்களுக்கு ஸ்வர்க்கவாஸத்தை ஸ்திரப்படுத்திக் கொடுத்தார். இந்த கதையை அத்யாத்மமாகப் பார்த்தாலோ,

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।
कामक्रोधस्तथा लोभः तस्मादेतत्त्रयं त्यजेत् ॥

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன: ।
காமக்ரோதஸ்ததா லோப: தஸ்மாதேதத்ரயம் த்யஜேத் ॥

என்ற கீதாவாக்யப்படி தெய்வஸம்பத்தில்பிறந்த நித்ய ஸூரிகளுடைய மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அபஹரித்துக் கொண்டுபோன காம க்ரோத லோபம் என்ற மூன்று சத்ருக்கள்தான், சூரன், தாரகாஸுரன், ஸிம்ஹவக்த்ரன் என்று வெளிக்குத் தோன்றுவார்கள். அந்தக் காமன் முதலிய மூன்று சத்ருக்களைத் தான் ஞானபண்டிதனை ஸுப்ரமண்யஸ்வாமி கொன்று மோக்ஷ ஸாமராஜ்ய ராஜ்யத்தை தெய்வ ஸம்பத்தில் பிறந்த நித்ய ஸூரிகளுடைய அதீனத்திலிருக்கும்படி ஸ்திரப்படுத்தினர். இதுதான் ஸுப்ரமண்யஸ்வாமி செய்த சூரஸம்ஹாரக் கதையினுல் அறிந்துகொள்ளவேண்டிய தத்வமாகும். இவ்விதம் அந்த சத்ருவையும் நாசஞ் செய்யக்கூடிய ஸாமர்த்யம் ஷண்முகனிடத்தில் இருப்பதனுல் ஆதியென்ற

Koviloor Digital Library

மனதின் தாபமென்ற வ்ருத்தி விசேஷமாகிய ரோகத்தையும் வேரோடு நாசம்பண்ண ஷண்முகன் ஒருவனிடம்தான் ஸாமர்த்யமிருக்கிறதென்பதை அறிந்து அதை நிவர்த்திசெய்து , தன்னை ரக்ஷிக்கவேண்டுமென்று ஸுப்ரமண்யக் கடவுளை ப்ரார்த்திக்க வேண்டுமாக மஹா ஜனங்களை பரமாசார்யாள் வற்புறுத்துகிருர்கள். மன க்லேசத்திற்கு மேலான வ்யாதியே லோகத்திலோ, வேதங்களிலோ, சாஸ்த்ரங்களிலோ ஒன்றுமேயில்லை. அந்த வ்யாதிக்கு ஔஷதத்தையும் கண்டுபிடித்தவர் யாருமில்லை. இந்த வ்யாதியானது ஸர்வப்ரகாரத்திலும் பலவானுயுள்ளவனையே உறுக்கிவிடும். க்ருசமாக்கிவிடும்; அதாவது மெலிந்தவனுகச் செய்துவிடும். அந்த வ்யாதிக்கு தான் சோகம், கேதம், சிந்தை என்ற பல சப்தங்களால் வ்யவஹாரம் செய்வார்கள். அந்த வ்யாதியை நிவர்த்தி ஸ்ரீ ஜயந்திபுரம் என்ற திருச்செந்தூர் க்ஷேத்ரத்தில் பரிபூர்ண ஸான்னித்யத்தோடு விளங்கிவரும் ஷண்முகனுடைய ஸந்நிதியில் ஏற்படும். அந்தப் பெருமானுடைய கடாக்ஷ பாதத்தைத் தவிர வேறு உபாயமே ஒன்றும் கிடையாது. எதைச் செய்தாலும் எங்கு சென்ருலும் ஆதியென்ற வ்யாதிக்கு ஔஷதம் கிடைக்காதென்பது ஸித்தமானது. அந்த ஆதியென்ற வ்யாதியால் பீடிக்கப்பட்டவர்களோ உடன் ஜயந்திபுரம் என்ற க்ஷேத்ரம் சென்று ஆறுமுகக்கடவுளை பஜனம் செய்யவேண்டும் என்ற தத்வத்தை இந்த ச்லோக மூலமாக அறிந்துகொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

24. மனோவ்யாதி நாசம்.

अहं सर्वदा दुःखभारावसन्नो
भवान्दीनबन्धुस्त्वदन्यं न याचे ।
भवद्भक्तिरोधं सदा क्लृप्तबाधं
ममाधिं द्रुतं नाशयोमासुत त्वम् ॥ २४ ॥

அஹம் ஸர்வதா து:கபாராவஸந்நோ
பவாந்தீநபந்துஸ்த்வதன்யம் ந யாசே ।
பவத்பக்திரோதம் ஸதா க்லப்தபாதம்
மமாதிம் த்ருதம் நாசயோமாஸுத த்வம் ॥ 24 ॥

பதவுரை :—

हे उमासुत - ஹே உமாஸுத = பார்வதீ புத்ரனுன ஸுப்ரமண்யுக் கடவுளே अहं - அஹம் = நான் सर्वदा - ஸர்வதா = எப்பொழுதும் दुःखभारावसन्नः - து:கபாராவஸந்ந: = துக்கத்தினுடைய பாரத்தால் பீடிக்கப் பட்டவனுக ஆகின்றேன் भवान् - தாங்களோ दीनबन्धुः - தீநபந்து: = என்னைப்போன்ற தீன ஜனங்களை ரக்ஷிக்கும் பந்துவே त्वदन्यं - த்வதந்யம் = உனக்கு வேருன தெய்வத்தை न याचे - ந யாசே = யாசிக்க மாட்டேன் त्वं - த்வம் = நீ मम - மம = என்னுடைய सदा - ஸதா = எப்பொழுதும் क्लृप्त बाधं - க்லப்தபாதம் = ஹிம்ஸையைச் செய்கிறதாயும் भवद्भक्तिरोधं - பவத்பக்திரோதம் = உன்னுடைய பக்தியைத் தடுக்கிற தாயுமுள்ள आधिं - ஆதிம் = மனோவ்யாதியை द्रुतं - த்ருதம் = சீக்ரமாக नाशय - நாசய = நாசம் செய்.

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

பார்வதீநந்தனை ஸுப்ரமண்யஸ்வாமிதான் தீன ஜனங்களுக்கு பந்துவாகுவார். ஸம்ஸார ஸாகரத்திலோ, ஆதிதைவிகம், ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் என்ற தாபத்ரயத்தால் துக்கம் அதிகமாகி, எப்பொழுதும் அந்த துக்கபாரத்தால் பீடிக்கப்பட்ட தீன ஜனங்களுக்கு, ஸுப்ரமண்யஸ்வாமியைத் தவிர வேறு பந்து யாருமேயில்லை. ஸம்ஸார துக்கத்தை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டுமென்ற எண்ணமுள்ள ஜீவன் ஸுப்ரமண்யஸ்வாமியைத்தான் பஜிக்க வேண்டும். மற்ற எந்த தெய்வத்தையும் பஜிப்பதில் ப்ரயோஜனமில்லை. அந்தப் பரம்பொருளினுடைய பாதாரவிந்தத்தை பக்தி செய்யாமல் தடுப்பதில் ஆதியென்ற மனதின் கவலையே பெரிய சத்ருவாகும். அந்த ஆதியினால், ஸ்தூல சரீரத்திற்கும் பாதை ஏற்பட்டு விடும்.

चिता चिन्ता तयोर्मध्ये चिन्ता एव गरीयसी ।
चिता दहति निर्जीवं चिन्ता जीवन्तमप्यहो ॥

சிதாசிந்தா தயோர்மத்யே சிந்தா ஏவ கரீயஸீ ।
சிதா தஹதி நிர்ஜீவம் சிந்தா ஜீவந்தமப்யஹோ॥

என்ற வசனத்தால் மனிதனுக்கு சிந்தையென்ற மனக் கவலைக்கு மேலான சத்ருவே இல்லையென்று தெரிகிறது. அதற்கவகாசம் கொடுத்தால் உயிர் நிலைக்கே ஹானி வந்துவிடும். இதைத்தான் பகவானும், கீதையில் क्षुद्रं हृदयदौर्बल्यं (க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்பல்யம்) என்ற வாக்யத்தால் ஸூசிப்பித்திருக்கின்றார். அந்த சிந்தையினாலோ ஸத்கர்மாவை அனுஷ்டானம் செய்வதில் ச்ரத்தை குறைந்து, பகவத் பக்திக்கும் தடையேற்படுகிறது. ஜீவனுக்கும் ஹானி ஏற்படுகிறது. ஆகையால் அதை உடனே வேரோடு பிடுங்கியெறிய வேண்டும். அதற்கு குமாரஸ்வாமி

Koviloor Digital Library

யின் பஜனத்தைத் தவிர வேறு ஒரு உபாயமும் கிடையாது.

सहस्रमपि पापानां नश्यत्येव न संशयः ।
षण्मुखस्य पदाम्भोजस्मरणे सति भूतले ॥

ஸஹஸ்ரமபி பாபாநாம் நச்யத்யேவ ந ஸம்சய: ।
ஷண்முகஸ்ய பதாம்போஜ ஸ்மரணே ஸதி பூதலே ॥

என்ற வசன ரீதியாக ஆயிரக்கணக்கான பாப ராசிகளும், ஆறுமுகக் கடவுளினுடைய பாதாரவிந்த ஸ்மரணம் இருக்கும் பக்ஷத்தில் நசித்துவிடுகிறதென்று தெரிகிறபடியால் பாப நாசம் வந்த பிறகு பாபத்தின் பலபூதமான ஆதியோ, வ்யாதியோ, இவைகளும் ஸ்வரூப நாசத்தை அடைகிறபடியால், ஹ்ருதயதௌர்பல்யத்தைக் கொடுக்கக்கூடிய ஆதியென்ற சப்தத்தால் சொல்லப்படும் மனக் கவலையாகிய மஹாரோகத்திலிருந்தும் விடுதலை அடைய, ஷண்முகனுடைய பாதாம்புஜ ஸ்மரணமே முக்யமான கார்யமாகும் என்றும் வெளியாகிறது. ஸம்ஸாரியான ஜீவனைப்போல் தீன ஜனமும் வேறில்லை. அஸம்ஸாரியான ஸுப்ரமண்ய ஸ்வாமியைப்போல் தீன ரக்ஷகனான ஸ்வாமியும் வேறில்லை. ரக்ஷகன் ரக்ஷ்யஸ்வரூபத்தையும், ரக்ஷ்யன் ரக்ஷக ஸ்வரூபத்தையும் அபேக்ஷித்தாக வேண்டியதவச்யமானதினால், ஜீவனுக்கும், ஸுப்ரமண்ய ஸ்வாமிக்குமுள்ள ரக்ஷ்ய - ரக்ஷகபாவ ஸம்பந்தத்தை முன்னிட்டு, ஜீவன் தினந்தோறும் ஸுப்ரமண்யக்கடவுளை உபாஸித்தே ஆகவேண்டும். ஸுப்ரமண்யக்கடவுள் ப்ரும்மவித்யாரூபிணியான உமையென்ற பார்வதிதேவியின் புத்ரனானதினாலும், ஸுப்ரமண்யோபாஸனத்தினாலேயே பரதேவதையின் கடாக்ஷபாதத்திற்கும் ஸந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகையால், ப்ராணிகளுக்கு ஸுப்ரமண்யோபாஸனம் அவச்யமானது.

Koviloor Digital Library

25. பத்ர விபூதி மஹிமை.

अपस्मारकुष्ठक्षयार्शःप्रमेह-
ज्वरोन्मादगुल्मादिरोगा महान्तः ।
पिशाचाश्च सर्वे भवत्पत्रभूतिं
विलोक्य क्षणात्तारकारे द्रवन्ते ॥ २५ ॥

அபஸ்மாரகுஷ்டக்ஷயார்ச: ப்ரமேஹ-
ஜ்வரோந்மாதகுல்மாதிரோகா மஹாந்த: ।
பிசாசாச்ச ஸர்வே பவத்பத்ரபூதிம்
விலோக்ய க்ஷணாத்தாரகாரே த்ரவந்தே ॥ 25 ॥

பதவுரை :—

हे तारकारे - ஹே தாரகாரே = தாரகாஸுரனுக்கு சத்ருவான ஸுப்ரமண்யக்கடவுளே महान्तः-மஹாந்த: =மிகவும் பெரிதான अपस्मारकुष्ठक्षयार्शप्रमेहज्वरोन्मादगुल्मादिरोगाः -அபஸ்மாரகுஷ்டக்ஷயார்சப்ரமேஹஜ்வரோந்மாதகுல் மாதிரோகா: = வலிப்பென்ன, குஷ்டரோகமென்ன, க்ஷயரோகமென்ன, ச்வாஸரோகமென்ன, மேகரோக மென்ன, ஜ்வரமென்ன, சித்த ப்ராந்தி யென்ன வயிற்றுவலி முதலான ரோகங்களென்ன सर्वे - ஸர்வே = ஸமஸ்தமான पिशाचाश्च - பிசாசாச்ச = பூதப்ரேத ப்ருஹ்மரக்ஷஸுகளும் भवत्पत्रभूतिं - பவத்பத்ரபூதிம் = பன்னீர் இலையில் விளங்கும் உன்னுடைய விபூதியை विलोक्य - விலோக்ய = பார்த்த மாத்ரத்தில் क्षणात् - க்ஷணாத் = ஒரு க்ஷணத்திற்குள் ஓடி மறைந்துவிடு கின்றவைகளாக भवन्ति - பவந்தி = ஆகின்றன.

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

ஸுப்ரமண்யக்கடவுள் ஸகல வேதங்களுடைய முக்யமான தாத்பர்யத்திற்கு விஷயமான பொருள் என்று முன்பு சொல்லப்பட்டிருப்பதனுல், அதை அனுஸரித்து, ஸுப்ரமண்யஸ்வாமியானவர், சூரபத்மா, தாரகாஸுரன், ஸிம்மவக்த்ரன் என்ற மூன்று அஸுரர்களையும் வதைத்துவிட்டு, ஸமுத்ரத்தில் விளங்கிவரும் ஜயந்திபுரம் என்ற திருச்செந்தூர் க்ஷேத்ரத்தில், நவரத்னமயமான ஸிம்மாஸனத்தில் அமர்ந்துகொண்டு, தர்ப்பாரில் செங்கோல் பிடித்து ஸர்வ லோகங்களுக்கும் ராஜாதி ராஜனுக விளங்கி வரும் ஸந்தர்ப்பத்தில், அவருடைய பரதத்வத்தைப் போதிக்கின்ற ஸகல வேதங்களும் ஒன்றுசேர்ந்து, தன்னுடைய மனமாகிற ஸுகந்தியான குஸுமங்களால் அந்தக் குமரக் கடவுளினுடைய சரணகமலங்களைப் பூஜித்து, அங்கும் அவருடைய பரதத்வத்தை ப்ரகாசிக்கச் செய்யும் உத்தேசத்துடன், வ்ருக்ஷ ரூபமாகத் தனது உருவத்தை எடுத்துக்கொண்டு ஸ்வாமியினுடைய ஸன்னிதியில் ப்ரகாசித்துவருகின்றன. அந்த வ்ருக்ஷத்தைத்தான் பன்னீர் வ்ருக்ஷமென்று சொல்லுவார்கள். அந்த வ்ருக்ஷத்தின் சாகைகளும் வேத சாகைகளானதினுல், அவைகளிலுள்ள பத்ரங்களெல்லாம் வைதிக மந்த்ரங்களாகவே சொல்லப்படும். ஷண்முகப்பெருமானுக்கு விபூதி அபிஷேகம் செய்து, அந்த விபூதியை அப்பன்னீர் வ்ருக்ஷத்தின் பத்ரத்தில் எடுத்து ஸம்பந்தப்படுத்துவதினுல், அந்த பஸ்மா வைதிக மந்த்ரத்தால், ஸம்ஸ்க்ருதமாயும் ஆகிவிடுகிறது. ப்ரணவத்தின் அர்த்தப் பொருளாகிய ஸ்வாமியின் ஸம்பந்தமும், வைதிக மந்த்ர ஸம்பந்தத்தால் ஏற்படும் ஸம்ஸ்காரத்தாலும், அந்தப் பன்னீர் இலையிலுள்ள விபூதியானது உயர்ந்த பஸ்மாவாக ஆனதிலிருந்தும், அதைப் பார்த்த மாத்ரத்தில், அபஸ்மாரம் முதலான மஹாரோகங்களும், பூத ப்ரேத பிசாசாதி

Koviloor Digital Library

களும் வெகுதூரத்திற்கப்பால் ஓடிவிலகிவிடுகின்றன. அந்த விபூதியை தாரணை செய்துகொள்ளும் மஹிமையினால், ஸகல ப்ராணிகளும், ரோகபாதையிலிருந்தும், க்ரஹபாதையிலிருந்தும, விமுக்தர்களாகி, பரம ஆரோக்யத்துடன் நீடித்து ஜீவிப்பார்கள்.

அத்துடன் முன்காலத்தில் விச்வாமித்ர மஹார்ஷியானவர், ஸ்ரீ ராமசச்சந்த்ரமூர்த்தியின்மூலமாக தாடகையை ஸம்ஹாரம் செய்து, மஹார்ஷிகளுக்கு அபயத்தைக் கொடுத்தார் என்ற கதையானது ராமாயண மூலமாக ப்ரஸித்தமானது. தாடகா வதம் என்ற கர்மாவில், விச்வாமித்ரரும் ஹேது கர்த்தாவாக (அதாவது காரயிதாவாக) அந்தக் கர்மாவைச் செய்யும்படி ஏவினவராக ஆகிறார். नस्त्रियो हन्तव्याः (நஸ்த்ரியோ ஹந்தவ்யா:) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, ஸ்த்ரீ ஜாதியில் பிறந்தவள் என்ன துஷ்டையானாலும் ஸ்த்ரீகளை வதிக்கக் கூடாது. ஆயுள்வரையிலும் சிக்ஷிக்கலாம் என்று தெரிகிறது. ராமரும், விச்வாமித்ரரும் அந்த ச்ருதியின் அர்த்தத்தை மீறி நடந்தவர்களாகிறார்கள்; அதற்காக ராமன், ஸீதையைவிட்டுப் பிரிந்து கொஞ்சநாள் துக்கத்தை அனுபவிக்கும்படியான நிலையை அவலம்பித்தார்.

हत्वातु ताटकां रामः सीतया रहितो वने ।
नशर्मं लेभे दुःखार्तः स्त्री वधे फलमीरितम् ॥

ஹத்வாது தாடகாம் ராம: ஸீதயா ரஹிதோ வநே ।
ந சர்ம லேபே து:கார்த்த: ஸ்த்ரீ வதே பலமீரிதம் ॥

என்ற பாத்மபுராண வசனமே இதில் ப்ரமாணமாகும் காரயிதாவான விச்வாமித்ர மஹார்ஷிக்கோ ஸ்த்ரீயை விட்டுப் பிரிந்த துக்கானுபவத்திற்கு ப்ரஸக்தி யில்லாததினால்,

गुल्मादिरोगग्रस्तोसौ ताटका वध हेतुतः ।
विश्वामित्रोपि धर्मात्मा सुतलप्येन मोचितः ॥

Koviloor Digital Library

जयन्तीपुरवर्येस्मिन् पत्रभूतिं प्रगृह्य सः ।
स्वप्ने दत्तां गुहेनैव प्रभाते मोचितोभवत् ॥

குல்மாதிரோகக்ரஸ்தோஸௌ தாடகாவத்ய ஹேதுத: ।
விச்வாமித்ரோபி தர்மாத்மா ஸுப்ரஹ்மண்யேந மோசித: ॥
ஜயந்தீபுரவர்யேஸ்மிந் பத்ரபூதிம் ப்ரக்ருஹ்ய ஸ: ।
ஸ்வப்நே தத்தாம் குஹேநைவ ப்ரபாதே மோசிதோபவத் ॥

என்ற ஜயந்திபுர மாஹாத்ம்ய வசனத்தால், விச்வாமித்ர மஹார்ஷிகூட குல்மாதி ரோகத்தால் பீடிக்கப்பட்டு, அனேக இடங்கள் சென்றும் நிவர்த்திவராமல் கஷ்டப்பட்டுக்கொண்டு, அச்வினீ தேவதைகளாலும் இந்த ரோகத்திற்கு ஔஷதமே இல்லையென்று கைவிடப்பட்டு தபித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஒரு நாள் இரவு ஸ்ரீராமச்சந்த்ரமூர்த்தியே ஸ்வப்னத்தில் விச்வாமித்ர மஹரிஷிக்கு தர்சனம் கொடுத்து ஜயந்திபுரக்ஷேத்ரம் சென்று ஒரு மண்டலம் ஸுப்ரமண்யஸ்வாமியை பஜனம் செய்யும்படி சொன்னார். விச்வாமித்ர மஹர்ஷியும் மறுநாள் காலையில் எழுந்திருந்தவுடன் மேலசொன்ன க்ஷேத்ரம் சென்று ஸுப்ரமண்யமூர்த்தியை நியமத்துடன் பஜனம் செய்தார். அப்படியிருந்துவரும் ஸமயத்தில் ஒரு நாள இரவு உஷக்காலத்தில் வ்ருத்தப்ராம்மண வேஷதாரியாக உருவத்தை எடுத்துக்கொண்டு பன்னீர் இலையில் விபூதியை வைத்துக்கொண்டு மஹர்ஷிக்கு எதிரில் வந்து "இந்த விபூதியை தாரணை செய்துகொள்ளும், கொஞ்சம் உள்ளுக்கும் சாப்பிடும்" என்று உத்திரவிட்டவுடன் விச்வாமித்ர மஹர்ஷியும் அந்த விபூதியை, க்ரஹித்துக்கொண்டு சிரஸிலும், நெற்றியிலும் மார்பிலும் தரித்துக்கொண்டு உள்ளுக்கும் சாப்பிட்டார். உடன் குல்மாதிரோகங்களும் எங்கு சென்றதென்று தெரியாமலே த்வம்ஸமாகிவிட்டது. விச்வாமித்ரருக்கே பெரிய ஆச்சர்யம் ஏற்பட்டு மகிழ்ந்துபோனார். எதிரில் நின்றுவரும் வ்ருத்த ப்ராம்

Koviloor Digital Library

மணனே ஸாக்ஷாத் ஸுப்ரமண்யஸ்வாமி யென்றே தீர்மானித்து ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் ப்ர ஸன்னமாகச் செய்துகொண்டு வெகுப்ரகாரமாக ஸ்தோத்ரங்கள் செய்தார். உடன் மஹர்ஷியும் ஸர்வ லோகத்தின் நன்மையைக் கருதி "ஹே ஸ்வாமின்! அபஸ்மாரம் முதலான மஹா ரோகங்களால் பீடிக் கப்பட்டவர்களும்கூட உன் ஸன்னிதிக்கு வந்து ஒரு மண்டலத்திற்குக் குறையாமல் பஜனம் செய்து ப்ராம் மணமுகமாக பன்னீர் இலையில் விபூதியை வைத்துக் கொண்டு சிரஸ் முதலிய இடங்களில் தாரணை செய்து கொண்டு உள்ளுக்கும் ப்ராசனம் செய்தார்களே யானல் ஸர்வரோகங்களிலிருந்தும் விடுபட்டவர் களாக ஆகி பரமானந்த பரிதர்களாக கல்பஜீவிகளாக வும் ஆகவேண்டும்". என்று ஸ்வாமியினிடம் வரனை யும் கேட்டுக்கொண்டார். ஸ்வாமியும், "அப்படியே ஆகட்டு"மென்று சொல்லி அந்தர்த்யானமடைந்தார். மஹர்ஷியும் பரம ஆரோக்யத்துடன் விளங்கிவந்தார். இந்தக் கதையானது பத்ரவிபூதியின் மஹிமையைக் காட்டும் ச்லோகத்தால் ப்ரகாசப்படுத்தப்படுகிறது.

---

26. இந்த்ரியங்களுடைய கார்யம்.

दृशि स्कन्दमूर्तिः श्रुतौ स्कन्दकीर्ति-
मुखे मे पवित्रं सदा तच्चरित्रम् ।
करे तस्य कृत्यं वपुस्तस्य भृत्यं
गुहे सन्तु लीना ममाशेषभावाः ॥ २४ ॥

த்ருசி ஸ்கந்தமூர்த்தி: ச்ருதௌ ஸ்கந்தகீர்த்திர்-
முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம் ।
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீநா: மமாசேஷபாவா: ॥ 24 ॥

Koviloor Digital Library

பதவுரை:—

दृशि - த்ருசி = கண்ணுக்கெதிரில் स्कन्दमूर्तिः - ஸ்கந்தமூர்த்தி: = ஸுப்ரமண்யக் கடவுளினுடைய மங்கள விக்ரஹமும் श्रुतौ - ச்ருதௌ = காதுகளில் ஸ்காந்த புராண கதா ச்ரவணமே सदा - ஸதா = எப்பொழுதும் मे - மே = என்னுடைய मुखे - முகே = முகத்தில் पवित्रं - பவித்ரம் = பரிசுத்தமாக ச்ரவணம் செய்யும் ஜனங்களின் மஹா பாபத்தைப் போக்கடிக்கக் கூடியதான तच्चरित्रं - தச்சரித்ரம் = ஸ்கந்த பகவானுடைய ஜன்ம கர்ம குணங்களுடைய ஸங்கீர்த்தனமும் करे - கரே = கையில் तस्य - தஸ்ய = ஸுப்ரமண்யக் கடவுளினுடைய कृत्यं - க்ருத்யம் = பாதபரிசர்யையும் वपुः - வபு: = என் சரீரமானது तस्य - தஸ்ய = ஸுப்ரமண்யக் கடவுளினுடைய भृत्यं - ப்ருத்யம் = கிங்கரனாகவுமாக मम - மம = என்னுடைய अशेषभावाः - அசேஷபாவா: = ஸமஸ்தமான அபிநயங்களும், சேஷ்டைகளும் गुहे - குஹே = ஸுப்ரமண்யக்கடவுளிடம் लीनाः - லீநா: = லயித்தவைகளாகவே सन्तु - ஸந்து = ஆகட்டும்.

தாத்பர்யம்:—

கண்ணைப்படைத்ததற்கு ஷண்முகனின் தர்சனமும் காதுகளுக்கு ஸ்காந்தபுராண கதா ச்ரவணமும் வாக்குகளுக்கு ஸ்காந்த கதையை மஹா ஜனங்களுக்குச் சொல்லுவதும், கைகளுக்கு திவ்ய குஸுமங்களால் அவருடைய பாதங்களில் அர்ச்சனை செய்வதும், சரீரத்திற்கு ஸுப்ரமண்யக் கடவுளினுடைய பரிசர்யையுமாகப் பிரித்து ஸகல இந்த்ரியங்களுக்கும்

Koviloor Digital Library

அவருடைய ஸ்வரூபத்தில் லயம் ஏற்படும்படி த்யானம் செய்துகொண்டு த்யான யோகத்திலமர்ந்து, தான் செய்யும் ஒவ்வொரு கார்யங்களும், காயிகமாலும், வாசகமாலும், மானஸமாலும் ஷண்முகனுடைய ஸமாராதனத்தில உபஸம்ஹாரத்தை யடையும்படி செய்துவருகிற அப்யாஸமானது ஜன்ம ஸாபல்யத்தைக் கொடுக்கக்கூடியது என்பது வெளியாகிறது.

---

27. ஜாதிபேதமற்ற கருணை.

मुनीनामुताहो नृणां भक्तिभाजा-
मभीष्टप्रदाः सन्ति सर्वत्र देवाः ।
नृणामन्त्यजानामपि स्वार्थदाने
गुहाद्देवमन्यं न जाने न जाने ॥ २७ ॥

முனீநாமுதாஹோ ந்ருணாம் பக்திபாஜா-
மபீஷ்டப்ரதா: ஸந்தி ஸர்வத்ர தேவா: ।
ந்ருணாமந்த்யஜாநாமபி ஸ்வார்த்ததாநே
குஹாத்தேவமந்யம் ந ஜாநே ந ஜாநே ॥ 27 ॥

பதவுரை :—

सर्वत्र - ஸர்வத்ர = எல்லா லோகங்களிலும் देवाः - தேவா: = தேவர்கள் मुनीनां - மஹர்ஷிகளுக்கும் उताहो - உதாஹோ = இல்லாவிடில் भक्तिभाजां - பக்திபாஜாம் = பக்தியை அடைந்த नृणां - ந்ருணாம் - மனிதர்களுக்கும் अभीष्टप्रदाः - அபீஷ்டப்ரதா: = அவரவர்களுடைய மனோரதங்களைப் பூர்த்தி செய்பவர்களாக सन्ति-ஸந்தி = ஆகிறார்கள். अन्त्यजानां - அந்த்யஜாநாம் = சண்டாள

Koviloor Digital Library

ஜாதியில் பிறந்த नृणामपि - ந்ருணமபி = மனிதர்களுக்கும் स्वार्थदाने - ஸ்வார்த்ததாநே = அபீஷ்டத்தைக் கொடுப்பதில் गुहात् - குஹாத் = ஸுப்ரமண்யஸ்வாமியைக் காட்டிலும் अन्यं - அந்யம் = வேறான देवं - தேவம் = தேவதையை न जाने - ந ஜாநே = நான் அறியவில்லை न जाने - ந ஜாநே = நான் அறியவில்லை.

தாத்பர்யம் :—

ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், இந்த்ரன் முதலான தேவர்களோ, தன்னை பஜிக்கும் மனிதர்களுக்கும், தன் ஸ்வரூபத்தை த்யானம் செய்யும் மஹர்ஷிகளுக்கும் அபீஷ்டத்தைக் கொடுத்து, அவர்களை ஆனந்த பரிதர்களாகச் செய்கிறார்கள் என்பது ஸர்வலோக ப்ரஸித்தமானது. ஆகிலும், அந்த தேவதைகளுள், ஒரு தேவதையானது, கீழ் ஜாதியில் பிறந்த, சண்டாளர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுத்து. அவர்களை ரக்ஷித்தார் என்பது ஒரு புராண மூலமாயும் தெரியவில்லை. ஸுப்ரமண்யக் கடவுளோ, சண்டாள ஜாதியில் பிறந்தவனுக்கும், அவனுடைய அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்து அவனை ரக்ஷித்தார் என்று ஸ்காந்த மஹாபுராண மூலமாகத் தெரியவருகிறது. க்ஷேத்ர மஹாத்ம்யம் என்பது, ஸ்காந்த மஹாபுராணத்தில் அடங்கியதே. ஜயந்திபுரம், (திருச்செந்தூர்) க்ஷேத்ர மஹாத்யமும், ஸ்காந்தபுராணாந்தர்கதம் என்றே ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த க்ஷேத்ர மஹாத்ம்யத்திலோ, சண்டாளனுடைய மனோரதத்தையும் பூர்த்திசெய்து, ஷண்முகக் கடவுள் அவனை ரக்ஷித்திருக்கிறார் என்று தெரியவருகிறது. அதாவது:—

திருச்செந்தூருக்கருகில் உள்ள ஆத்தூர் என்ற க்ராமத்தில் வேலன் என்ற ஓர் சண்டாள ஜாதியில் பிறந்தவன் இருந்தான். அவன் சண்டாள ஜாதியில் பிறந்தவனாயினும், அந்த ஜாதிக்குரிய துராசார

Koviloor Digital Library

மற்றவனாக இருந்துவந்தான். ஆத்தூர் என்ற க்ராமமோ, தாம்ப்ரபர்ணிநதியானது, ஸமுத்ரத்தில் ஸங்கமத்தை அடையும் ப்ரதேசத்துக்கு அருகில் உள்ளது. தினந்தோறும் அவன் தாம்ப்ரபர்ணி ஸமுத்ர சங்கம கட்டத்தில் மூன்று வேளை ஸ்நானம் செய்துவிட்டு "வேலாயுதா! முருகா" என்று புலம்பிக்கொண்டிருந்தான். ஆஹாரமும் ஏதாவது, கனி, கிழங்குகள் அகப்பட்டால் புஜித்துவந்தான். இல்லாவிடில் நதி ஜலத்தை, பசிக்கும்பொழுது பானம் செய்வான். தன் ச்ரேணியில் தன் ஜாதியாரோடு ஒருவருடனும் பழகுவதில்லை. திருச்செந்தூர் க்ஷேத்ரத்துக்கு தர்சனத்திற்காகப் போய்க்கொண்டுவரும் பக்த ஜனங்களைத் திரள் திரளாகக் கண்டு, தனக்கு அந்த முருகனுடைய ஸந்நிதி சென்று தர்சனம் செய்யக்கூடிய பாக்யமில்லாமல் ஹீன ஜாதியில் பிறந்துவிட்டோமே, என்ற துக்கத்தால் மிகவும்வருந்தி கஷ்டமடைந்தான். இவ்விதமிருக்க, ஒரு நாள் காலையில் தாம்ப்ரபர்ணி ஸங்கமத்தில் இவன் ஸ்நானம் செய்துவிட்டு, "வேலாயுதா, முருகா" என்று வழக்கம்போல் புலம்பிக்கொண்டு நின்றுவரும் ஸமயத்தில், ஓர் வயது முதிர்ந்த ப்ராம்மணன் ஸ்நானத்திற்கு அந்த இடத்தில் இறங்கினார். அவர் கிழவரானதால் ஒரு மடுவில் அகப்பட்டுக்கொண்டு ஜலத்தையும் உட்கொள்ளும்படியான துர்தசை ஏற்பட்டுவிட்டது. நீந்திக் கரை சேறுவதற்கும் தெரியாமல் கஷ்டப்பட்டுவந்தார். கரையில் நின்றுகொண்டு "வேலாயுதா, முருகா" என்று புலம்பிவரும் இந்த சண்டாளனைப் பார்த்து "அப்பா என்னைத் தூக்கிவிடு" என்று கூச்சலிட்டார். அந்த சண்டாளனோ, ப்ராம்மண சரீரத்தைத் தொட்டு இழுப்பதற்குப் பயந்துகொண்டு, தயங்கி நின்றான். ப்ராம்மணனும் "அப்பா ஆபத்காலத்தில் யாதொரு தோஷமும் இல்லை; ஷண்முகனுடைய திருநாமங்களை நீ உச்சரிக்கிறபடியால் உன் சரீரம் பரிசுத்தமானதே. நீ என்னைத் தொடுவதினால் நானும் ஜன்ம ஸாபல்

Koviloor Digital Library

யத்தை அடைவேன். ஆகையால் நான் முழுகி உயிரை இழந்துகொள்வதற்குமுன் என்னைத் தூக்கி கரையில் போடு" என்று கெஞ்சினார். அந்த பறைய னும் கருணையுடன், அந்த ப்ராம்மணனைக் கரையில் தூக்கிவிட்டு ஆச்வாஸப்படுத்தினான். ப்ராம்மண னுக்கு ப்ரதக்ஷிணம செய்துவிட்டு, நமஸ்காரம் செய் வதற்காக தன் கண்ணால் பூமியை நோக்கி, நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்திருக்கும் காலத்தில், அந்த பறையனுடைய த்ருஷ்டியில், ப்ராம்மணன் ப்ராமண னாகத் தோன்றாமல், வேலாயுதத்துடன், மயில்வாஹ னத்தில் ஏறிக்கொண்டு, வல்லீ தேவஸேனை என்ற இருசக்திகளோடுகூட ஆறுமுகத்துடன், ஸுப்ரமண்ய யக் கடவுளே, சண்டாளனுக்கு தர்சனம் கொடுத்து "இனிமேல் எக்காலத்திலும், என் ஸந்நிதிக்கு நீ வந்து தர்சனம் செய்யலாம்" என்று உத்திரவு கொடுத்தார். அது முதல் சண்டாளனும், தான் வழக்கம்போல், "வேலாயுதா முருகா" என்று புலம்பிக்கொண்டு ஆலயத்திற்குள்ளும் சென்று பகவானை தர்சனம் செய்து காலத்தைக் கழித்தான். அங்குள்ள அர்ச்ச கர்களோ, மற்ற பக்த ஜனங்களோ, அவன் ஆலயத் திற்குள் வந்தது பிசகு என்று முரண்பாடு செய்து அவனை வெளியில் விரட்ட யத்னம் செய்த காலத் தில், கர்பக்ரஹத்தில் மிகவும் உயர்ந்த ஸ்வரத் துடன் ப்ரணவ சப்தம் உதித்து, பிம்பத்திலிருந்தும், பரிபூர்ணமான ஸ்வரூபத்துடன் பகவான் உதித்து மஹா ஜனங்களுக்கு எதிரில் பகவான் உபதேசித்தார் அதாவது:-வேலன் ஜாதி சண்டாளனல்ல. பூர்வஜன் மாவில், ப்ரம்மாவின் புத்ரனான நாரத மஹர்ஷியே. கைலாஸ கிரியில் வீரபாஹு முதலான என் ப்ராதாக் களுடன், ப்ரம்மாவிற்கு 'ஓம்' காரத்தின் பொருள் தெரியவில்லை என்று சிறைவாஸத்தை நான் விதித் தது ப்ரஸித்தமானது. அந்த ஸந்தர்ப்பத்தில், நாரத மஹர்ஷிக்கு தன் தகப்பனாரை நான் தண்டித்தேன் என்ற காரணத்திற்காக விஷ்ணுவினிடம் பக்ஷபாதத்

Koviloor Digital Library

துடன் சைவ ஸித்தாந்தத்தை நிந்தித்துப் பேச ஆரம்பித்தார். அந்யதேவதா நிந்தை என்ற பாபத்திற்கு சண்டாள ஜாதியில் பிறக்கவேண்டும் என்ற விதியை அனுஸரித்து, நாரதருக்கு இவ்விதம் ஜன்மா ஏற்பட்டது. ஜாதியால் ஒருவன் பெரியவனுகவோ, சிறியவனுகவோ ஆகிவிடமாட்டான். பக்தியால்தான் மனிதனுடைய உத்கர்ஷம் வெளியாகும் வேலன் என்ற பக்தனுக்குப் புருஷார்த்தத்தை அளிக்கவே இந்த க்ஷேத்ரத்தில் என் ஸாந்நித்யம் ஏற்பட்டிருக்கிறது" என்று உபதேசித்து, ஜனங்களை ஸமாதானம் செய்துவிட்டு. வேலனுக்குத் தனது ஸாயுஜ்யத்தை அளித்துவிட்டு, பகவான் அந்தர்த்யானத்தை அடைந்தார்.

இவ்விதம் கீழ்ஜாதியில் பிறந்தவனிடத்திலும் கருணை கூர்ந்து அவனை ரக்ஷிக்கும் தெய்வம், ஸுப்ரமணயஸ்வாமியைக் காட்டிலும் வேறு ஒருவரும் இல்லை என்பதை ஆசார்யாள் ப்ரதிக்ஞை செய்கிறார்கள்.

---

28. ஆறுமுகனே குலதெய்வம்.

कलत्रं सुता बन्धुवर्गः पशुर्वा
नरो वाथ नारी गृहे ये मदीयाः ।
यजन्तो नमन्तः स्तुवन्तो भवन्तं
स्मरन्तश्च ते सन्तु सर्वे कुमार ॥ २८ ॥

Koviloor Digital Library

களத்ரம் ஸுதா பந்துவர்க: பசுர்வா
நரோ வாத நாரீ க்ருஹே யே மதீயா: ।
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்
ஸ்மரந்தச்ச தே ஸந்து ஸர்வே குமார ॥ 28 ॥

பதவுரை :—

हे कुमार ! - ஹே குமார ! = ஹே குமரக்கடவுளே ! गृहे - க்ருஹே = என் வீட்டிலுள்ள कलत्रं - களத்ரம் = பத்னியோ सुता: - ஸுதா: = பிள்ளைகளோ बन्धुवर्ग: - பந்துவர்க: = பந்து ஸமூஹங்களோ पशुर्वा - பசுர்வா பசுக்களோ नरो वा - நரோ வா = மற்ற எந்த மனிதனோ अथ - அப்படியே नारी - நாரீ = எந்த ஸ்த்ரீயோ ये - எவர்கள் मदीया: - மதீயா: = என்னைச் சேர்ந்தவர்களோ ते सर्वे - தே ஸர்வே = ஸமஸ்தமான அந்த ஜனங்களும் भवन्तं - பவந்தம் = உன்னை यजन्त: - யஜந்த: = பூஜிக்கிறவர்களாயும் नमन्त: - நமந்த: = நமஸ்கரிக்கிறவர்களாயும் स्तुवन्त: - ஸ்துவந்த: = ஸ்தோத்ரம் செய்கிறவர்களாயும் स्मरन्तश्च - ஸ்மரந்தச்ச = ஸ்நேஹிக்கிறவர்களாகவும் सन्तु - ஸந்து = ஆகட்டும்.

தாத்பர்யம் :—

தன் குடும்பத்தில், தனக்கோ, தன் பந்துஜனங்களுக்கோ, ஜன்ம ஜன்மாவிலும், ஆறுமுகக் கடவுளையே குல தெய்வமாக பாவித்து அவருடைய சரணாரவிந்த பக்தியிலேயே மனம் ஈடுபடவேண்டும் என்பது ப்ரார்த்திக்கப்படுகிறது.

Koviloor Digital Library

29. சக்திவேல் மஹிமை.

मृगाः पक्षिणो दंशका ये च दुष्टा-
स्तथा व्याधयो बाधका ये मदङ्गे ।
भवच्छक्तितीक्ष्णाग्रभिन्नाः सुदूरे
विनश्यन्तु ते चूर्णितक्रौञ्चशैल ॥ २९ ॥

ம்ருகா: பக்ஷிணோ தம்சகா யே ச துஷ்டா-
ஸ்ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே ।
பவச்சக்திதீக்ஷ்ணாக்ரபிந்நா: ஸுதூரே
விநச்யந்து தே சூர்ணிதக்ரௌஞ்சசைல ॥ 29 ॥

பதவுரை :—

हे चूर्णितक्रौञ्चशैल - ஹே சூர்ணிதக்ரௌஞ்சசைல = உன்னிடம் பயத்தால் மலைபோல் தன் ஸ்வரூபத்தை எடுத்துக் கொண்டு பாஸித்துவந்த க்ரௌஞ்சாஸுரனைக் கொன்ற ஹே ஷண்முகா! मदङ्गे - மதங்கே = என் சரீரத்தில் ए - ஏ = எந்த मृगाः - ம்ருகா: = ம்ருகங்களோ पक्षिणः - பக்ஷிண: = பக்ஷிகளோ दंशकाः - தம்சகா: = கொசுக்களோ तथा - ததா = அப்படியே एच दुष्टाः - ஏச துஷ்டா: = எந்த க்ரூரமான व्याधयः - வ்யாதய: = வ்யாதிகளோ बाधकाः - என்னை ஹிம்ஸிக்கின்றவைகளாக भवति - பவதி = ஆகின்றதுகளோ ते - தே = அவைகளெல்லாம் भवच्छक्तितीक्ष्णाग्रभिन्नाः सन्तः - பவச்சக்ரதீக்ஷ்ணாக்ரபிந்நா: ஸந்த: = தங்கள் கையிலிருக்கும் சக்தி ஆயுதத்தினுடைய உக்ரமான கூர் முனையால் பேதிக்கப்பட்டவைகளாய்க்கொண்டு सुदूरे- ஸுதூரே = வெகுதூரத்திற்கப்பால் சென்று विनश्यन्तु - விநச்யந்து = நாசமடையட்டும்.

Koviloor Digital Library

தாத்பர்யம் :—

ஹே ஸ்வாமியே! என்னுடைய சரீரத்தை பாதிக்கின்ற ம்ருகங்களோ, பக்ஷிகளோ, கொசுக்களோ, வ்யாதிகளோ, வர்த்தமானமாக என் சரீரத்தில் இருப்பவைகளோ, வரப்போகிறவைகளோ, நவக்ரஹங்களோ, ஜன்மாந்த்ர பாபங்களோ, இவைகள் எல்லாவற்றையும் உன் சூலாயுதத்தின் கூர் முனையால் குத்தி வெகு தூரத்திற்கப்பால் தள்ளி நசிக்கும்படி செய்துவிட்டு எனக்கு ஒருவிதமான உபத்ரவம் இல்லாமல் என்னை எப்பொழுதும் ரக்ஷிக்க வேண்டும். இதனால் ஸுப்ரமண்யஸ்வாமியின் வேலை வைத்துப் பூஜிப்பவர்களுக்கு யாதொருவிதமான பாதையும் இல்லை என்பது ஸித்தமாகிறது.

---

30. ஸர்வலோகத்திற்கும் பிதா.

जनित्री पिता च स्वपुत्रापराधं
सहेते न किं देवसेनाधिनाथ ।
अहं चातिबालो भवान् लोकतातः
क्षमस्वापराधं समस्तं महेश ॥ ३० ॥

ஜனித்ரீ பிதா ச ஸ்வபுத்ராபராதம்
ஸஹேதே ந கிம் தேவஸேனாதிநாத ।
அஹம் சாதிபாலோ பவாந் லோகதாத:
க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேச ॥ 30 ॥

பதவுரை :—

हे देवसेनाधिनाथ - ஹே தேவஸேனாதிநாத = ஹே தேவஸேனாபதியான ஸுப்ரமண்யக்கடவுளே जनित्री - ஜனித்ரீ = தாயாரோ, पिता च - பிதா ச = தகப்ப

Koviloor Digital Library

ஞரோ स्वपुत्रापराधं - ஸ்வபுத்ராபராதம் = தன் குழந்தைகள் செய்த அபராதத்தை न सहेते किं - ந ஸஹதே கிம் = ஸஹிக்கிறதில்லையா என்ன? (ஸஹித்துக் கொண்டுதானிருப்பார்கள்) तथा - ததா = அப்படியே अहं च - அஹம் ச = நானும் अतिबालः - அதிபால:= மிகவும் சிறு குழந்தை भवान् - பவாந் = தாங்களோ लोकतातः - லோகதாத: = லோகத்திற்கே தகப்பனர். हे महेश - ஹே மஹேச = ஹே பரமேச்வரா समस्तं - ஸமஸ்தம் = ஸமஸ்தமான अपराधं - அபராதம் = என்னுடைய குற்றத்தை क्षमस्व - க்ஷமஸ்வ = க்ஷமித்துக் கொள்.

தாத்பர்யம் :—

தாய் தந்தைகள் தன் குழந்தைகளால் செய்யப்பட்ட அபராதத்தைப் பொறுத்துக்கொண்டு குழந்தைகளை ரக்ஷிப்பதிலேயே ஊக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். அதுபோல் ஸுப்ரமண்யமூர்த்தியானவர் லோகத்திற்குப் பிதாவினுடைய ஸ்தானத்தில் ஏற்படுகிறார். அர்த்த ப்ரபஞ்சம் சப்த ப்ரபஞ்சம் என்று லோகமானது இருவகையாகக் காணப்படுகின்றது. அதில் அர்த்த ப்ரபஞ்சமோ சப்த ப்ரபஞ்சத்திலிருந்துதான் உதிக்கின்றது என்பதும் லோகப்ரஸித்தமானது. அந்த சப்தப்ரபஞ்சமும் ओमितीदं सर्वं (ஓமிதீதம் ஸர்வம்) என்ற ச்ருதியை அனுஸரித்து அகார, உகார, மகார ஸ்வரூபமான ஓம்காரத்தில் அடங்கியது. அந்த ஓம்காரம் ஸுப்ரமண்யக் கடவுளினுடைய உருவமானதினால் ஸுப்ரமண்யமூர்த்தி

Koviloor Digital Library

யானவர் லோகத்திற்குப் பிதாவாக ஆகிறார், லோகங்களோ அவருடைய குழந்தைகளின் ஸ்தானத்தில் ஏற்படுகிறது. அந்த லோகத்திற்குள் நானும் ஒருவன் அகப்பட்டவன். ஆகையால் ஸுப்ரமண்யஸ்வாமியானவர் தகப்பனார்தான். அக்காரணத்தால் நான் செய்த ஸகல குற்றங்களையும் மன்னித்துக்கொண்டு என்னை ஸகலவிதமான ஆபத்துக்களிலிருந்தும் ரக்ஷிக்கவேண்டும்.

---

31. பகவதாரதானம்.

नमः केकिने शक्तये चापि तुभ्यं
नमश्छाग तुभ्यं नमः कुक्कुटाय ।
नमः सिन्धवे सिन्धुदेशाय तुभ्यं
पुनः स्कन्दमूर्ते नमस्ते नमोऽस्तु ॥ ३१ ॥

நம: கேகிநே சக்தயே சாபிதுப்யம்
நமச்சாக துப்யம் நம: குக்குடாய ।
நம: ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்
புந: ஸ்கந்தமூர்த்தே நமஸ்தே நமோஸ்து ॥ 31 ॥

பதவுரை:—

केकिने - கேகிநே = வேதஸ்வரூபமாகிய மயிலின் பொருட்டு नमः - நம: = நமஸ்காரம். अपिच - அபிச = இன்னமும் शक्तये - சக்தயே = மோக்ஷஸாதனமான ப்ரும்மவித்யாரூபிணியான பராசக்தியாகிய வேல்

Koviloor Digital Library

என்ற ஆயுதமான तुभ्यं - துப்யம் = உன் பொருட்டு नमः - நம: = நமஸ்காரம். छागा - சாகா = மாயா தத்வரூபமான செம்புலி ஆடு என்ற ஸுப்ரமண்ய மூர்த்தியின் வாஹனமே तुभ्यं - துப்யம் = உன் பொருட்டு नमः - நம: = நமஸ்காரம். कुक्कुटाय - குக்குடாய = அஹங்கார தத்வமாகிய கோழி யென்ற வாஹனத்தின் பொருட்டு नमः - நம: = நமஸ்காரம். सिन्धवे - ஸிந்தவே = ஆனந்த ரூபமான ஸமுத்ரத்தின் பொருட்டு नमः - நம: = நமஸ்காரம். सिन्धुदेशाय - ஸிந்து தேசாய = முக்திநகரியாகிய திருச்செந்தூர் க்ஷேத்ரம் என்ற ஸமுத்ரமாகிய तुभ्यं - துப்யம் = உன்பொருட்டு नमः - நம: = நமஸ்காரம். स्कन्मूर्ते - ஸ்கந்தமூர்த்தே = ஹே ஸுப்ரமண்யக்கடவுளே पुनः - புந: = மறுபடியும் ते - தே = உன்பொருட்டு नमः - நம: = நமஸ்காரம். नमः - நம: = என் நமஸ்காரங்கள் अस्तु - அஸ்து = உன்னிடம் சேரட்டும்.

தாத்பர்யம் :—

பகவானை ஆராதிக்கும் உபாஸகர்கள் பகவானுடைய ஸான்னித்யத்தோடு கூடிய தேசம் பகவானுடைய வாஹனம், பகவானுடைய ஆயுதங்கள் இவைகளையும் பகவானுடைய ஸ்வரூபமாகவே பாவித்துப் பூஜிக்கவேண்டும் என்ற ஸம்ப்ரதாயமானது இந்த ச்லோகத்தால் அறிவிக்கப்படுகிறது.

Koviloor Digital Library

32. ஷண்முகனின் பரமோத்கர்ஷம்.

जयानन्दभूमञ्जयापारधाम-
ञ्जयामोघकीर्ते जयानन्दमूर्ते ।
जयानन्दसिन्धो जयाशेषबन्धो
जय त्वं सदा मुक्तिदानेशसूनो ॥ ३२ ॥

ஜயாநந்தபூமஞ்ஜயாபாரதாம-
ஞ்ஜயாமோககீர்த்தே ஜயாநந்தமூர்த்தே ।
ஜயாநந்தஸிந்தோ ஜயாசேஷபந்தோ
ஜய த்வம் ஸதா முக்திதாநேசஸூநோ ॥ 32 ॥

பதவுரை :—

हे आनन्दभूमन् - ஹே ஆநந்தபூமந் = அபரிச்சின்னமான ஆனந்தத்தை உருவமாக உடையவரான ஸுப்ரமண்யக் கடவுளே! जय - ஜய = உன்னுடைய உத்கர்ஷத்தை ப்ரகாசப் படுத்து. हे अपारधामन्-ஹே அபாரதாமந் = எல்லையில்லாத பரஞ்ஜயோதிஸ்ஸையே உருவமாக உடையவரான ஹே கடவுளே! जय-ஜய = உன் உத்கர்ஷத்தை ப்ரகாசப்படுத்து. हे अमोघ कीर्ते - ஹே அமோக கீர்த்தே = லோகம்முழுமையும் பரவிக் கேழ்க்கும் ஜனங்களுக்கு மஹா பலத்தைக் கொடுக்கக்கூடிய யசஸ்ஸோடுகூடிய பரம்பொருளே जय-ஜய = உன் மஹிமையை ப்ரகாசப்படுத்து. हे आनन्दमूर्ते - ஹே ஆநந்தமூர்த்தே = பரிச்சின்னமான ஆனந்தத்தையும் ஸ்வரூபமாக உடையவரான ஹே பரம்பொருளே जय - ஜய = உன்னுடைய பெருமையை

Koviloor Digital Library

வெளிப்படுத்து. हे आनन्दसिन्धो - ஹே ஆநந்தஸிந்தோ = விஷயானந்தம், ப்ருஹ்மானந்தம் என்ற பிரிவில்லாமல் பொதுவாக உள்ள ஆனந்தத்திற்குக் கடலாக விளங்கி வரும் ஹே கடவுளே जय - ஜய = உன் சக்தியை வெளிப்படுத்து. अशेषबन्धो - அசேஷபந்தோ = ஸமஸ்த மான ப்ராணிகளுக்கும் எல்லா விதத்திலும் பந்துவாக உள்ள ஹே கடவுளே जय - ஜய = அந்த ஸாமர்த்யத் தையும் ப்ரகாசப்படுத்து. हे ईशसूनो - ஹே ஈசஸூநோ = பரமேச்வரனுடைய புத்ரனுன கடவுளே मुक्तिदान - முக்திதாந = மோக்ஷத்தை தானம் செய்யும் ஸ்வபாவ முள்ள ஔதார்யத்தோடு கூடின ப்ரபுவே सदा - ஸதா = எப்பொழுதும் त्वं - த்வம் = நீ जय - ஜய = உன னுடைய ஸமஸ்தமான ஸாமர்த்யங்களையும் என்னி டம் ப்ரகாசப்படுத்தி என்னை ரக்ஷிக்கவேண்டும்.

தாத்பர்யம் :—

சிற்றின்பம் என்ற விஷயானந்தமோ, பேரின்பம் என்ற ப்ருஹ்மாநந்தமோ, சிற்றின்பம் பேரின்பம் என்ற இரண்டுவிதமான ஆனந்தமோ, அக்ஞான மாகிய இருளுடைய நிவர்த்தியோ லோகம் முழுமை யும் பரவும் கீர்த்தியோ ஆபத் காலத்தில் ஆபத்தை நிவர்த்தி செய்துவைக்கும் பந்துவினுடைய அபே க்ஷையோ மோக்ஷாபேக்ஷையோ இவைகள் யாவும் ஜீவனுல் எதிர்பார்க்கப்படுகிறபடியால் அவைகள் யாவற்றையும் ஜீவனுக்கு அளித்து ஜீவனை ரக்ஷிக்கக் கூடிய சக்தியுள்ள ஸுப்ரமண்யக்கடவுள் மேற் சொல்லிய ஒவ்வொரு விஷயத்திலுமுள்ள தன்

Koviloor Digital Library

ஸாமர்த்யத்தை ஜீவனிடம் ப்ரகாசப்படுத்தி அத ஞல் ஏற்படும் உத்கர்ஷத்துடன் விளங்கும தன்மை ஸுப்ரமண்யக்கடவுள் என்ற ஒரே தெய்வத்திற்குத் தான் ஏற்படக்கூடும்.

---

33. பல ச்ருதி.

भुजङ्गाख्यवृत्तेन क्लृप्तं स्तवं यः
पठेद्भक्तियुक्तो गुहं संप्रणम्य ।
स पुत्रान्कलत्रं धनं दीर्घमायु-
र्लभेत्स्कन्दसायुज्यमन्ते नरः सः ॥ ३३ ॥

புஜங்காக்யவ்ருத்தேந க்லுப்தம் ஸ்தவம் ய:
படேத்பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய ।
ஸ புத்ராங்களத்ரம் தநம் தீர்கமாயுர்-
லபேத்ஸ்கந்தஸாயுஜ்யமந்தே நர: ஸ: ॥ 33 ॥

பதவுரை :—

यः - ய: = எந்தப் புண்யவான் भुजङ्गाख्यवृत्तेन-புஜங்காக்யவ்ருத்தேந = புஜங்கம் என்ற பெயருடைய வ்ருத்தத்தால் (சைலியால்) क्लृप्तं - க்லுப்தம் = செய்யப்பட்ட स्तवं - ஸ்தவம் = ஸுப்ரமண்ய ஸ்தோத்ரத்தை गुहं - குஹம்=ஸுப்ரமண்யஸ்வாமியை संप्रणम्य - ஸம்ப்ரணம்ய = நமஸ்கரித்து भक्तियुक्तः - பக்தியுக்த:=

Koviloor Digital Library

க்தியோடு கூடியவனுய்க்கொண்டு पठेत् - படேத் = தினந்தோறும் பாராயணம் செய்கிருனே सः - ஸ = அவன் पुत्रान् - புத்ரான் = புத்ரஸம்பத்திகளையும் कलत्रं ளத்ரம் = ஸாத்வியான பார்யையும் धनं - தநம் = ாவற்ற பொருளையும் दीर्घं - தீர்கம் = நீண்டகாலம் आयुः - ஆயு: = ஆயுளையும் लभेत् - லபேத் = அடைகிருன் सः नरः - ஸ: ந: = அந்தப் புண்யவான் अन्ते - அந்தே = கடைசி காலத்தில் स्कन्दसायुज्यं - ஸ்கந்த ஸாயுஜ்யம் = ஸுப்ரமண்யக்கடவுளின் ஸாயுஜ்ய பதவியையும் लभेत् - லபேத் = அடைகிருன்.

தாத்பர்யம் :—

திருச்செந்தூர் க்ஷேத்ரத்தில் பரிபூர்ண ஸாயுஜ்யத்தோடு வஸிக்கும் ஸுப்ரமண்யஸ்வாமியினுடைய ஸ்தோத்ரமான இந்த ச்லோகங்களின் நடையானது, ஸர்ப்பங்களின் வளைந்து செல்லும் ஸ்வபாவத்தை ஒத்திருப்பதால் புஜங்க வ்ருத்தமென்று இந்த ச்லோகத்தின் வ்ருத்தத்திற்குப் பெயர் விளங்கிவரும். இந்த ஸுப்ரமண்யபுஜங்கமென்ற ஸ்தோத்ரத்தை தினந்தோறும் ஸுப்ரமண்ய சரணாரவிந்தங்களில் பரம பக்தியோடு நமஸ்காரத்தைச் செய்துவிட்டுப் பாராயணம் செய்யும் பக்ஷத்தில் ஸுப்ரமண்யக்கடவுளினுடைய பரிபூர்ணமான அனுக்ரஹத்தால் ஸத்புத்ராவாப்தி, ஸத்களத்ர ஸம்பத்தி, ஏராளமான பொருள்,

Koviloor Digital Library

தீர்க்கமான ஆயுள் முதலான வைபவங்களை அநேக காலம் அனுபவித்துவிட்டுக் கடைசிகாலத்தில் முருகக் கடவுளின் ஸாயுஜ்யத்தையும் சுலபமாக அடையலாம்.

॥ श्री सुब्रह्मण्यभुजङ्गस्तोत्रं संपूर्णम् ॥

ஸுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்ரம் முற்றிற்று.

गुरो शंकराचार्यस्वामिन् गुहदयानिधे ।
साहसंमे क्षमस्वेमं त्वत्कृतौ त्वत्स्तुतोक्ततम् ॥
सर्वज्ञभगवत्पाद वाक्सुधाकीदृशी भुवि ।
तद्गुहस्कन्दस्य तत्वानां महत्वं कीदृशं सदा ॥
वराकमूढगोष्ठीनां अग्रगण्यस्य मे कथा ।
तथापि भक्तवात्सल्यात् ताभ्यां संरक्ष्य एव सः ॥

ओं तत् सत्

KOVILOOR ANDAVAR
A. No. 28606
LIBRARY, KOVILOOR

Giri Press, Triplicane—C. 1000—14-3-46—Q.H. M.S. 173.